உ

கடவுள் துணை.

கச்சிப்பல்லவச்சோழ சரித்திரச்சுருக்கம்.

இஃது

வன்னிகுலக்ஷத்திரிய மகாசங்க இனிஸ்பெக்டர்.

ம-ா-ா-ஸ்ரீ, கா. ஆறுமுகநாயக ரவர்களால்

திரட்டப்பட்டு

ம-ா-ா-ஸ்ரீ, பு. முனிசாமிநாயக ரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

ம-ா-ா-ஸ்ரீ, "பல்லவகுலசேகர"

கா. கோ. பலபத்திரநாயக ரவர்களால்

சென்னை - புரசை

மதுகரவேணி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1911

உ

கச்சிப் பல்லவச்சோழ சரித்திரச் சுருக்கம்

அரங்கேற்றல்.

தெய்வப்புலமை இரட்டையரருளியது.

நேரிசை வெண்பா.

சாற்றரிய வாயிரக்கான் மண்டபத்தின் சார்வாக
வேற்ற முடனே யினிதிருந்து—போற்றும்
விறல்விகட சக்ர விநாயகனை யேத்துந்
திறல்விகட சக்ராயுதம்.

காஞ்சி ஏகாம்பரேசர் திருச்சந்நிதியிலே பல்லவகோபுர வாயலின்கீழ்ப் பாரிசத்திலே திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராகிய விகடசக்கர விநாயகருக்கும், மேற்பாரிசத்திலேயுள்ள ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகட்கும் தூபதீப ஆராதனைதிகள் குறைவற நடந்தேறிய பின்னர், அவ்விநாயகமூர்த்திக்கு எதிரிலுள்ள ஆயிரக்கான் மண்டபத்தில் 1911௵ டிசம்பர்௴ 2௳ மாலை 3 மணிசுமாருக்கு இந்நூல், பல கல்விமான்கள் விருப்பத்தின்படி பிரம்மஸ்ரீ வகீல் பல்ல இராமச்சந்திர சாஸ்திரியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஸ்ரீமத் வகீல் சேஷகிரி ஐயர் அவர்களால் அரங்கேற்றுதல் செய்யப்பட்டது. இச்சபையின்கண் விஜயம் செய்திருந்த பலவித்துவான்களும், பண்டிதசிரோமணிகளும், விவேகிகளும் தத்தம் செவிவாயாக நெஞ்சுகளனாக இச்சரித்திராமிர்தத்தை நுகர்ந்தபின்னர் சபாநாயகர் எழுந்து "இந்த சமயம் நமது காருண்ணிய சக்கிரவர்த்தியவர்களாகிய ஐந்தாவது ஜார்ஜ்ஜி தமது தர்ம்ம பத்தினி சகிதமாய் பம்பாய் நகரத்தில் விஜயம் செய்திருக்கின்றார். அவர்களைப்பற்றி நாம் ராஜவிசுவாசத்தைத் திரிகரணசுத்தியாய் கொண்டாடத்தக்கவர்களாயுள்ள இக்காலத்தில் ம-ள-ள-ஸ்ரீ கா. ஆறுமுக நாயகர் அவர்களால் திரட்டப்பெற்று இன்று இச்சதசின்கண்ணே அரங்கேற்றுதலுக்குக் கொண்டுவரப்பெற்ற இந்நூல் நம்பூர்வ அரசர்களையும் அவர்கள் செங்கோலையுங்கூட வியந்து விசுவாசம் பாராட்டுதற்கும் ஒருதுணைக்கருவியாய் அசரீரிபோல அமைந்தது. இந்நூலால் வெளிப்படும் ஆக்கியோன்கருத்து யாதெனின் முன்போல இராஜவிசுவாசமும் கல்வி, கைத்தொழில், நாகரீகம் முதலியன இனியும் விர்த்தி செய்விக்கவேண்டுமென்பதே யென நன்றாய் விளங்குகிறது" என்று தமது பிரசங்கத்தை முடித்தார்.

சப்புகுலப் பல்லவராய பக்தஜன சபையார்.

டி. எ. கிருஷ்ணு அண்டு கோ., வேப்பேரி, மதருஸ்.

உ

கச்சிக்ஷேத்திர பிரபாவம்.

விகடசக்கர விநாயகர்.

"விகடசக்கர வாரணந்தொடர்வரும் வித்தகமுகில்வீற
விகடசக்கர விந்தமன்னவன்றனக்கருளு மெய்த்தலைவாகு
விகடசக்கர வாகமென்முலையுமைகான் முளையென்னுச்சே
விகடசக்கர ரெந்திரமெனச்சுழல் வெம்பவக்கடனெஞ்சே"

கச்சித்திருவேகம்ப நாதர்.

"கருவார்கச்சித் திருவேகம்பத்
தொருவாவென்ன மருவாவினையே.
கொச்சைவேந்தன் கச்சிக்கம்ப
மெச்சுஞ்சொல்லை நச்சும்புகழே"

காமாட்சி யம்மை.

"கருக்காமக்கோட்டி மிரவினையனைத்து
மொருங்கெய்திக் கலகஞ்செய்யுந்
தருக்காமக்கோட்டி யெலாமறவெறிந்தா
மினியென்றுந் தகைசாலன்பு
சுருக்காமக்கோட்டினைச்சேயரைகரங்
கொண்டார்க்கு முலைச்சுவடுநல்குந்
திருகாமக்கோட்டியம்மை சேவடிப்போ
தெப்போதுஞ் சிந்திப்பாமால்."

குமரக் கடவுள்.

"முருகோட்டந்தரப்பாயு மும்மதமு
மூற்றெடுப்ப முரிவிற்கோட்டு
மொருகோட்டு மழைகளிற்றை யிருகோட்டு
முதுகளிறுவுலவக்காட்டிப்
பருகோட்டநறைவேட்டுப் பைங்கோட்டுத்
தினைப்புனத்துப் பரண்மேற்கொண்டு
குருகோட்டும்பெடைமணந்த குமரகோட்டத்
தடிகள்குலத்தாள்போற்றி."

II

இமாசலம்முதல் பொதியைமலை தென்குமரிகாறுமுள்ள இந்து தேசத்தின் பாகத்தைச் சௌமியகண்டமென்றும், சௌரகண்டமென்றும் ஆக்கினேயகண்டமென்றும் பகுக்கப்பட்டதாக ஆக்கினேயபுராணம் 135-வது அத்தியாயத்தில் சொல்லப்படுகின்றது. இங்ஙனம் பகுக்கப்பட்ட கண்டங்கள் மூன்றில் ஆக்கினேய கண்டமானது சேரமண்டலமென்றும், சோழமண்டலமென்றும், பாண்டியமண்டலமென்றும், தொண்டைமண்டலமென்றும் நான்குபிரிவுகளாயுள்ளது. இவற்றுள் தொண்டை மண்டலத்தைப்பற்றிச் சேக்கிழார் கூறுவதாவது.

ஆய நானிலத்தமைதியிற் றத்தமக்கடுத்த
மேய செய்தொழில் வேறுபல் குலங்களின் விளங்கித்
தீய வென்பன கனவிலு நினைவிலாச் சிந்தைத்
தூய மாந்தர்வாழ் தொண்டை நாட் டியல்பு சொல்வரைத்தோ

இச்செய்யுளின்கருத்து; தொண்டைநாடானது தீமையென்பன கனவிலுநினையா சிந்தையிற் சிறந்தசான்றோரை யுடைத்தாகிய சிறப்பினையுடைய தென்பதாம்.

இவ்வளவுமகிமைபெற்ற தொண்டைநாடு தண்டகநாடு என்றும் துண்டீரநாடென்றும் தொண்டைநாடு என்றும் பல்லவராஜ்ஜியம் என்றும் தென்மொழி வடமொழி புராணேதிகாசங்களிலும் செப்பேடு சிலா சாஸனங்களிலும் சொல்லப்படுகின்றது.

இந்நாடானது சிவபிரான் திருவருள் செய்யும்பொருட்டு பார்வதிதேவியார் தன்னிடத்தில் தங்கிய முப்பத்திரண்டு அறங்களைவளர்க்கும் பெரும்புகழைப்படைத்தது. இஃதன்றியும் பிறவித்துன்பங்களைப்போக்கிப் பேரின்பப்பேற்றை அளிக்கும் சப்தபுரி (எழுநகரங்க)ளில் சிறந்த தபோபலனைத்தரும் கச்சிநகரைத்தன் அகத்தில் கொண்டு அற்புதங்களையுண்டாக்கும் பெருமைபூண்டது. "தரைவிளங்கிய தண்டகநாட்டினில்" வனப்புவாய்ந்த குறிஞ்சிநிலமும் வயல்களால் சூழப்பெற்ற மருதநிலமும் அலையெறிகடலால் சூழப்பெற்ற நெய்தநிலமும் என்று கூறப்படும் நான்குவகை நிலங்களையுடைய பூமியில் சிறந்து ஓங்கும் ஐந்திணைவளப்பங்களை அமையப்பெற்றதாம் தொண்டைநாடு.

III

காஞ்சிப்புராணம் நாட்டுப்படலம் 37-வது செய்யுள்

பவம் விளைத்திடாப் பெரும் பதியெனத்திசைபோய
சிவம் விளைத்திடு நகரங்களேழினுஞ் சிறந்து
தவம் விளைத்திடுகாஞ்சியைத் தன்னிடத் திருத்தி
நவம் விளைத்திடும் பெருமைபூண்டது தொண்டைநாடு

என்று சொல்லப்படுகின்றது.

குறிஞ்சிநிலத்திற்குத் தெய்வமாகிய முருகக்கடவுள் திருக்கோயில் கொண்டிருக்கும் தணிகாசலக்ஷேத்திரமும், தமிழ்வழங்கும்நாட்டிற்கு வடக்கெல்லையாகியதும் ஆழ்வார்களால் பாடப்பெற்றதுமாகிய சேஷாசலக்ஷேத்திரமும், அன்பேதிருவுருவாகத்திரண்டு வந்தகண்ணப்பநாயனார் தனது கண்களைப்பெயர்த்து சிவபிரானுடைய நேத்திரத்தில் அப்பின ஸ்ரீகாளத்தியாகிய தென்கைலாய க்ஷேத்திரமும், திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற திருநீர்மலை க்ஷேத்திரமும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பொருட்டு சிவபிரான் அன்னம் இறந்து ஊட்டின திருக்கச்சூர் க்ஷேத்திரமும், திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடப்பெற்ற திருவட்டீசுர க்ஷேத்திரமும் "பாவகாரியமெய் தொணுக்கழுகு சூழ்பறப்பு" என்னப்பெற்றதும்,

"இலங்குகின்ற நின்சேவடிகளிரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கினேன் கலங்காமலேவந்து காட்டினாய்க் கழுக்குன்றிலே"

என்று மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பெற்றதுமாகிய திருக்கழுக்குன்ற க்ஷேத்திரமும் இவைபோன்ற குறிஞ்சிநில க்ஷேத்திரங்கள் குறிஞ்சிநிலத்திற்கு அணிகலனாயிருக்கின்றன.

சுந்தரமூர்த்திசுவாமிகளால் பாடப்பெற்றதும் தொண்டமான் சக்கரவர்த்திக்குச் சிவபிரான் காட்சிகொடுத்ததுமாகிய திருமுல்லைவாயில் க்ஷேத்திரம்போன்ற க்ஷேத்திரங்கள் முல்லைநிலத்திற்கு ஆபரணமாயிருக்கின்றன.

பார்வதிதேவியாருடன் சிவபிரான் மகிழ்ந்தருளுவதும்.

முந்திமூவெயிலெய்த முதல்வனார்
சிந்திப்பார்வினை தீர்த்திடுஞ் செல்வனார்
அந்திக்கோன்றனக் கேயருள்செய்தவப்
பந்திச்செஞ்சடைப் பாசுரடிகளே.

என்று திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடப்பெற்றதுமாகிய திருப்பாச்சூர் க்ஷேத்திரமும் வானுளாவிய மதில்களுடைய திருவல்லக்ஷேத்திரமும் இவைபோன்ற செந்நெல் வயல்சூழ்ந்த மருதநில க்ஷேத்திரங்கள் மருதநிலத்திற்குக் கற்பகத்தருபோல் விளங்குகின்றன.

நெய்தநில க்ஷேத்திரங்களில் திருவொற்றியூர் மூவரால் பாடப்பெற்றது. சுந்தரமூர்த்திநயனார் சங்கிலியாரை மணம்புரியும் பொருட்டு சிவபிரான் இரவினில்தூதுசென்ற க்ஷேத்திரமும் இதுவேயாம்

ஒற்றியூருமொளி மதிப்பாம்பினை
யொற்றியூருமப்பாம்பு மதனையே
யொற்றியூரவொரு சடைவைத்தவ
ஞெற்றியூர்தொழ நம்வினையோயுமே

என்று அப்பரால் பாடப்பெற்ற க்ஷேத்திரமும்

தாளாலுலகமளந்த வசைவேகொல்
வாளாகிடந்தருளும் வாய்திறவான்—நீளோதம்
வந்தலைக்குமாமயிலை மாவல்லிக்கேணியான்
ஐந்தலைவாய் நாகத்தணை,

என்று திருமழிசையாழ்வாரால் பாடப்பெற்ற திருவல்லிக்கேணி க்ஷேத்திரமும் திருஞானசம்பந்த சுவாமிகள் எலும்பைப்பெண்ணுருவாக கபாலீஸ்வரர் திருவருளால் உயிர்ப்பித்த திருமயிலையில்

கானமர்சோலை கபாலீச்சுரமமர்ந்தான்
தேனமர்பூம்பாவை பாட்டாகச்செந்தமிழான்
ஞானசம்பந்தனலம் புகழ்ந்தபத்தும்வல்லார்
வானசம்பந்தத் தவரோடும் வாழ்வாரே

என்று பாடப்பெற்ற திருமயிலையும், திருவான்மியூரும் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற திருவிடந்தை திருக்கடன்மல்லைமுதலிய க்ஷேத்திரங்களிலும் நெய்தநிலத்திற்கு அழகிய முத்தாரம் போன்றனவாம்

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்னும் நானிலமும் வானிலம்போற்சிறந்து விளங்கும் ஐந்திணைவளங்களையும் விளக்கிக்காட்டுதற்கு "குன்றைநகர் (குன்றத்தூர்) குலக்கவியேவல்லான்" சேக்கிழார் நாயனார் அல்லாமல் மற்றுருளர் என்று தொண்டை நாட்டி

க்ஷேத்திரபிரபாவத்தையும் நிலவளப்பத்தையுங்குறித்து கூறுகின்றார் சிவஞானயோகிகள். பலநாடுகளைச்சுற்றுப் பக்கத்தில்கொண்டிருக்கும் தொண்டைவளநாடானது பலசங்குகளின் நடுவில்படரும் வலம்புரிச்சங்காம். அவ்வளநாட்டிலேயுள்ள பலநகரங்களையும் வட்டமாக படைத்திருக்கும் காஞ்சிமாநகரமானது பல வலம்புரிசங்குகளுக்கு நடுவில் விளங்கும் சலஞ்சலம் என்னும் சங்காம். இத்தகையமகிமைதங்கிய திருக்கச்சியிலே பலதலங்களிலும் வரிசையாய்க்கட்டப்பட்டிருக்கும் அலங்காரமாளிகையுடைய திருவேகம்பமானது பாஞ்ச சன்னியம் என்னும் சங்கில் தோன்றிய விலைமதிக்கப்படாத முத்தே அவ்வாலயத்தில் வீற்றிருக்கும் ஏகாம்பரேஸ்வரர்.

காஞ்சிப்புராணம் நகரப்படலம் 121–122 செய்யுள்,

பற்பல தேய மெல்லாம் பாங்குடைத் தொண்டைநாடு
பற்பல சங்க நாப்பட் படர்வலம்புரியா மங்கட்
பற்பல நகரமெல்லாம் வட்டமாப் படைத்த காஞ்சி
பற்பல வலம்புரிக்குட் சலஞ்சலப் பணிலமாமால்

அத்திருக் காஞ்சிவைப்பின் அலகிலாத் தலங்கடம்முட்
பத்திசேர் மாடக்கம்பம் பாஞ்சசன்னியமா மந்த
வுத்தமச் சுரிமுகத்துள் விலைவரம் புணராச்சாதி
முத்தமேயொரு மாமூலத் திருந்தருண் முக்கண்மூர்த்தி.

என்று சொல்லப்படுகின்றது.

இத்தியாதிசிறப்பினைவாய்ந்த கச்சிக்ஷேத்திரம் பிரளயசித், காஞ்சி, புவனசாரம், மும்மூர்த்தி வாசம், விண்டுபுரம், கலிசித்து, இலயசித்து, சகலசித்திபுரம், தபோமயபுரம், பிரமபுரம், ஆதிபீடம், கன்னிகாப்பு, சிவபுரம் எனப்பலபெயர்களால் விளங்குகின்றது

சலஞ்சலம் என்னும் சங்குக்கொப்பாகிய காஞ்சிமாநகரத்திலே சிவாலயங்களும் தேவிபரிவார சத்தியாலயங்களும் கணேசர் முருகக்கடவுள் ஆலயங்களும் விஷ்ணுவாலயங்களும் பிரமன் சூரியன் துர்க்கை வைரவர் சாத்தன் முதலியோர் ஆலயங்களும் பௌத்தாலயங்களும் சமணாலயங்களும் ஆயிரக்கணக்காயும் நூற்றுக்கணக்காயு மிருந்தனவென்று புராணங்கள் கூறுகின்றன. இவற்றுள் இக்காலத்தில் பிரமன் புத்தன் அருகன் அநந்தன் முதலாயினோர் ஆலயங்கள் உண்

டென்பதற்கு அறிகுறியாக பலசின்னங்கள் சிற்சிலவிடங்களில் ஆங்காங்கு காணப்படுகின்றன. தற்காலம் பிரசித்தமாயுள்ளன சிவாலயங்களும் விஷ்ணுவாலயங்களும் சத்தியாலயங்களுமேயாம். சமணபௌத்தமுதலிய சமயத்தவர் ஆலயங்கள் கி. பி. 640 ஆண்டு சீனயாத்திரைக்காரராகிய யூன்சியான் காஞ்சியில் விஜயஞ்செய்த காலத்திலிருந்தனவென்று தாமெழுதிய யாத்திரைபுத்தகத்தில் எழுதியிருக்கின்றார். காஞ்சிப்புராணத்திலும் வடமொழிநூலிலும் கண்ட ஸ்தலங்களின் தொகையும் இன்னின்னரால் பூசிக்கப்பட்டதென்பதையும் கூறுவாம்.

சிவகுமாரர்களால் பூஜிக்கப்பட்ட ஸ்தலங்கள்			6
புருஷார்த்தங்களால் பூஜிக்கப்பட்ட ஸ்தலங்கள்			4
யுகங்களால்	,,	,,	4
வேதங்களால்	,,	,,	2
திக்கு பாலரால்	,,	,,	9
நவக்கிரகங்களால்	,,	,,	9
அசுரர்களால்	,,	,,	13
அமரர்களால்	,,	,,	7
விஷ்ணுபரிவாரங்களால்	,,	,,	30
இருஷிகளால்	,,	,,	15
சப்தருஷிகளால்	,,	,,	54
யோகாசாரியர்களால்	,,	,,	146
காஞ்சியிலுள்ள சிவாலயங்கள்			299-ம்

வேதவடிவான ஒரு மாமரத்தின் நிழலில் சிவபிரான் எழுந்தருளியிருத்தலால் சுவாமிக்கு ஏகாம்பரநாதன் (ஏகம்—ஒன்று ஆமரம்—மாமரம்) என்ற திருப்பெயர் வந்தது. மூலகாரணப்பொருளைச் சத்தியாகிய பார்வதி தேவி பூசித்த ஆலயம் திருவேகம்பம். மணல் இலிங்கமாதலால் பிருதிவி ஸ்தலமென்று சொல்லப்படுகின்றது. மேற்காட்டிய ஸ்தலங்கள் 299-ல் சிலவற்றை மாத்திரம் கூறுவாம். திருவேகம்பம், கச்சபாலயம், கச்சிமயானம், காயாரோகணம், மகாகாளேசம், கச்சித்திருமேற்றளி, கச்சி அனேகதங்காவதம், பாண்டுரேச்சு

ரம், மணிகண்டேச்சுரம், வராகேச்சுரம், சுரகரேச்சுரம் முதலிய சிவாலயங்களும் காமாக்ஷி ஆலயமாகிய காமக்கோட்டமும் சுப்பிரமணிய சுவாமி ஆலயமாகிய குமரக்கோட்டமும் தியாகப்பொருப்பாகிய வரதராஜபெருமாளாலயமும் வைகுண்டப்பெருமாள் பச்சவண்ணப்பெருமாள் பவழவண்ணப் பெருமாள் உலகளந்த பெருமாள் விளக்கொளிப்பெருமாள் அஷ்ட புஜப்பெருமாள் பாண்டவதூதப்பெருமாள் நிலாத்துண்டபெருமாள் முதலிய வைணவாலயங்களு மிருக்கின்றன.

காஞ்சிக்ஷேத்திரத்தைச் சத்திய விரதக்ஷேத்திரமெனவும், பாஸ்கரக்ஷேத்திரமெனவும், தைஜஸ க்ஷேத்திரமெனவும், ஹரிஹர க்ஷேத்திரமெனவும், சத்திக்ஷேத்திரமெனவும், கைலாசம் வைகுண்டம் ஸ்ரீபுரமெனவும், வரும் ஒன்பது நாமங்களால் சான்றோர்கள் புகழ்கின்றனர்.

இந்த க்ஷேத்திரத்தில் முத்திமண்டபங்கள் மூன்று. ஒன்று சர்வ தீர்த்தக்கரையிலும் ஒன்று முத்தீஸ்வரர்கோயிலிலும் ஒன்று மகமதியருடைய தர்க்கவாயுமிருக்கின்றது. கங்கை கொண்டான் மண்டபத்துக்கு நிருதி மூலையிலிருப்பது பரமாநந்த மண்டபமென்று சொல்லப்படும். இம்மண்டபம் ஏகாம்பரநாதருக்கு வாகனமண்டபமாயிருந்தது. மகமதியர் ஆளுகையில் மசூதியாக ஆக்கிக்கொண்டனர். கல்விமண்டபம் (ஏகாம்பரராலயத்தில்) சரஸ்வதி மண்டபமென்றும் கணக்கறிமண்டபம் இரட்டைமண்டபமென்றும் வழங்கிவருகின்றன கிழண்டை ராஜவீதியில் ஈசான்யத்தில் துலாபாரதானமண்டபம் ஒன்றுளது.

காம கோட்டம்.

காஞ்சிக்ஷேத்திரத்தில் (காமகோட்ட மென்பது) வாயு ஆக்கினேய திக்குகளில் திருவுருவங்கொண்டு விளங்கும் சிவவிஷ்ணு சொருபங்கள் தானேயாகிய பராசத்திக்கு இருப்பிடமாயும் சர்வான்மாக்களுக்கும் சர்வ கர்மங்களைக் கோடி கோடியாகக் கொடுத்தருளும் ஆற்றலுடைய தாயும் விளங்குதலால் அந்த க்ஷேத்திரம் காமகோட்டமெனப்பெயர் பெற்றது.

இதற்கு ஸ்ரீபுரமென்றும் பத்மநாபகமென்றும் சிவன் முத்திபுரமென்றும் காமகோட்டமென்றும் காமகோட்டியென்றும் ஐந்து பெயர்கள் வழங்குகின்றன.

VIII

எல்லைகள்:—இதன் எல்லைகள் கிழக்கில் க்ஷேத்திராங்கி ஆலயம் இதற்குத்தெற்கில் அஸ்திசிம்மாலயம் இதற்கு மேற்கில் காயாரோகண ஆலயம் இதற்கு வடக்கில் சுவேதப்பெருமாளாலயமாம்.

இந்நான்கெல்லைக்கு உட்பட்ட பிரதேசம், பஞ்சபானநிகேதன மெனவும், காமகோட்டமெனவும் பெயர்பெறும். இது ருத்திரசாலைக்கும், விஷ்ணுசாலைக்கும் மத்தியிலுள்ளது.

இவ்வெல்லைக்குள்: — க்ஷேத்திராங்கி ஆலயத்திற்குத்தெற்கில் சங்குபாணி விநாயகர். இவர் உலகளந்தபெருமாள் கோயிலுக்குத் தெற்கிலுள்ளவர், சப்பாணிப்பிள்ளையாரென தற்காலம் வழங்கப்படு கின்றனர். இப்பிள்ளையாருக்கு மேற்கில் குமரகோட்டப்பெருமான்.

துர்க்கை ஆலயங்கள்:—குமரகோட்டத்திற்குத் தெற்கில் உக்கிர வாசினி ஆலயமிருக்கின்றது. இத்துர்க்கை கருக்கினிலமர்ந்தாளென் றும், மதேவதையென்றும் வழங்கப்படுவள். இவ்வாலயத்திற்குவடக் குதிக்கில் தாங்கோனி; இதற்கு வடக்கில் பஞ்சசந்திகை. இந்த துர்க்கை கச்சபேசராலயத்திலுள்ளவள். இதற்கு வாயுதிக்கில் தீர்த் தமாலினி ஆலயம்; இதற்கு வடக்குதிக்கில் ஹேமாசனை ஆலயம்; இந்ததுர்க்கை பொன்னேரியம்மையென வழங்கப்படுவள். இதற்குத் தெற்கிலுள்ளவள் பீடவர்த்தனி; இந்தத்துர்க்கை காளியம்மையென வழங்கப்படுவள்.

விஷ்ணு ஆலயங்கள்;—பீடவர்த்தினிக்கு வடக்கில் தூர்வாவர் ணப்பெருமாளாலயம், இது பச்சை வண்ணப்பெருமாள் கோயில் என்றுசொல்லப்படும். இதற்கு அக்கினிதிசையில் திரிவிக்கிரமபெரு மாளாலயம், இது உலகளந்தபெருமாள் கோயிலென்று சொல்லப்ப டும். இதற்கு வாயுதிக்கில் மதுப்பெருமாளாலயம், இதற்கு ஈசானத் தில் காளாங்கபெருமாளாலயம்

சிவாலயங்கள்:—காளாங்கபெருமாளுக்குச் சமீபத்தில் மகா காளாலயம்; இதற்கு ஈசானத்தில் பட்டாரகேஸ்வராலயம்; இதற்கு த்தெற்கில் பணுதரேஸ்வராலயம் இதற்குவடக்கில் பணீஸராலயம்; இதற்குத்தெற்கில் கச்சபேஸராலயம், இது சுயம்புவாயுள்ள இலிங்க மூர்த்தி

தீர்த்தங்கள்;—காமாக்ஷிதேவியாலயத்திற்குள் மேற்குத்திக்கில் பஞ்சதீர்த்தம்; இதற்குத் தெற்குத்திக்கில் காயாரோகணதீர்த்தம்; இதற்கு வடக்கில் இஷ்டசித்திதீர்த்தம்; இத்தீர்த்தம் கச்சபேஸ்வராலயத்திலுள்ளது, இதற்கு வடக்குதிக்கில் சக்கரதீர்த்தம், இது பொன்னேரியம்மைகோயிலுக்கு எதிரிலுள்ளது. ஆககாமகோட்டமாகிய இவ்வெல்லையில் விநாயகராலயம் 1, குமரகோட்டப்பெருமானாகிய முருகக்கடவுள் ஆலயம் 1, துர்க்காலயம் 6, விஷ்ணு ஆலயம் 4, சிவாலயம் 5, தீர்த்தம் 4.

ஸ்ரீகாமாக்ஷி தேவியினுடைய ஆலயத்தில் நிருதிதிக்கில் அன்னபூரணி ஆலயம், இதற்கு வாயுதிக்கில் சாஸ்வாலயம், இதற்கு ஈசானத்தில் அஞ்சனகாமாக்ஷி, இதற்குக்கிழக்கில் சந்தானஸ்தம்பம் என்கிற ஆலயங்களிருக்கின்றன.

சுவர்ண காமாக்ஷி தேவி தபஸ்வினிதேவி திரிபுராம்பிகை என்கிற மூன்றுவிதமான கோலத்துடன் பராசக்தியானவள் ஸ்ரீகாமக்கோடிபீடமாகிய ஆலயத்தில் வீற்றிருக்கின்றாள்.

இவ்வளவு மகிமைபெற்ற காமக்கோட்டமாகிய காமாக்ஷி தேவியார் ஆலயம் சிவகஞ்சியில் நான்கு ராஜவீதிகளுக்கு மத்தியிலிருக்கின்றது; காஞ்சி க்ஷேத்திரத்திலுள்ள சிவ விஷ்ணு முதலிய ஆலயங்களில் நடக்கும் பிரம்மோற்சவங்களில் புறப்பாடாகும் உற்சவமூர்த்திகள் யாவரும் இக்காமக்கோட்டத்தையே பிரதக்ஷணஞ்செய்து போகின்றனர்.

திருஞான சம்பந்தமூர்த்தி புராணம் 908-வது செய்யுள்.

புறத்தணைந்த தொண்டருடன் போந்தமைந்த திருமடத்திற்
பெறற்கரும்பே றுலகுய்யப் பெற்றருளும் பிள்ளையார்
மறப்பரிய காதலுடன் வந்தெய்திமகிழ்ந் துறைவார்
அறப்பெருஞ் செல்வக்காமக் கோட்டமணைந் திறைஞ்சினார்.

திருஞான சம்பந்த சுவாமிகள் தமது தொண்டர் கூட்டங்களுடன் 32 தருமங்களை வளர்க்கும் காமக்கோட்டத்திற்கு வந்தாரென்று சேக்கிழார் கூறுவதால் இக்காமக்கோட்டம் பிரசித்திபெற்ற க்ஷேத்திரமென்று விளங்குகின்றது.

X

திருஏகம்பம் ஞானசம்பந்தர் தேவாரம்.

மறையானை மாசிலாப் புன்சடைமல்கு வெண்
பிறையானைப் பெண்ணொ டாணாகிய பெம்மானை
யிறையானை யேர்கொள் கச்சித்திரு வேகம்பத்
துறைவானை யல்லதுள் காதெனதுள்ளமே.

கச்சியிலுள்ள சிவக்ஷேத்திரங்கள் அநேகம் ஞானசம்பந்த மூர்த்திகளால் பாடப்பெற்றிருக்கின்றன. ஞான சம்பந்தர் கி. பி. 610-ஆண்டுமேல் அரசுபுரிந்த நரசிம்மவர்மபல்லவராயன் காலத்தில் கச்சி நகருக்கு வந்தவர். இதை 9-10 பக்கத்தில் காண்க. கச்சிக்ஷேத்திரத்தைப்பற்றிச்சைவசமயாசிரியர் நால்வராலும் பாடப்பட்டிருக்கின்றது. இவ்வாசிரியர்கள்காலத்தில்பல்லவர் அரசாட்சி பிரபலப்பட்டிருந்தது.

கச்சிநகரிலுள்ள 18 திருப்பதிகளைப்பற்றி ஆழ்வார்களால் பாடப்பட்டிருக்கின்ற பாசுரங்கள்.

திருமங்கையாழ்வார் அஷ்டபுஜம்.

மன்னவன்றொண்டையர் கோன்வணங்கும்
நீள்முடிமாலை வயிரமேகன்
றன்வலிதன்புகழ் சூழ்ந்தகச்சி
யட்டபுயகரத்தாதி தன்னை
கன்னிநன்மாமதிள் மங்கைவேந்தன்
காமருசீர்க்கலி கன்றிகுன்றா
வின்னிசையாற் சொன்னசெஞ்சொல்மாலை
யேத்தவல்லார்க் கிடம்வைகுந்தமே.

இவ்வாழ்வார் நந்தி போத்த வர்மபல்லவன் கி. பி. 740 ஆண்டின் பின்னர் கச்சி நகரையரசியற்றிய காலத்திலிருந்தவர். பல்லவ குல திலகராகிய ஐயடிகள் காடவர்கோன் கச்சியில் பிரபலமாக அரசியற்றி சிவக்ஷேத்திரங்கடோறுஞ் சென்று க்ஷேத்திரவெண்பாபாடி முத்திபெற்றது கச்சிக்ஷேத்திரமே சுந்தரமூர்த்திசுவாமிகள் இடது கண்பார்வை பெற்ற க்ஷேத்திரமுமிதுவே திருக்குறிப்புத் தொண்ட நாயனார் பரமசிவத்தின் திருவருளைப்பெற்ற க்ஷேத்திரமுமிதுவே யாகும்.

சாக்கிய நாயனார் பௌத்த சமயத்தைத்தழுவியிருந்தவர், அது முத்திக்கு ஒத்தசமயமல்லவென்று உணர்ந்து சைவசமயமே மெய்ச்

சமயமென்றும் எந்த நிலையினின்றாலும் எந்த வேடத்தையெடுத்தாலும் பரமசிவத்தின் திருவடியை மறவாமையே பெரும் பொருள் என்றும் கருதி, தாம் எடுத்த பௌத்த வேடத்தை துறவாமல் பரமசிவத்தை மிகுந்த அன்போடு இடைவிடாது பக்திசெய்வாராயினார். சமிபத்திலிருந்த ஓர் சிவலிங்கத்தை தரிசித்துபேரானந்த மடைந்து அருகில் கிடந்த கல்லை அன்பின் மிகுதியால் அதன் மீது எறிந்து பின்போஜனஞ்செய்வார். பௌத்த சமயத்தவர் சைவசமயத்தைப் பகைத்தவரென அறியுமாறும் தமது அன்புமென்மேலும் வொழுகி வருமாறும் இங்ஙனஞ் செய்தனர். ஓர் தினம் மறந்து போஜனம் செய்யும் சமயத்தில் இன்று எம்பெருமான் மீது கல்லெறியாமல் மறந்து விட்டேனென்று மிக விரைந்து சென்று ஓர் கல்லை எடுத்த எறிய பக்தி வலையில் படுபவராகிய சிவபிரான் உமாதேவியாரோடும் காட்சி கொடுத்து அருளியதும் கச்சிக்ஷேத்திரமேயாம். இங்ஙனம் அளவு படாப்பெருமைவாய்ந்த இந்தக்ஷேத்திரத்தைக்கண்டாலும் முத்தி கேட்டாலும் முத்தி உள்ளத்தில் நினைத்தாலும் முத்தியேயாம்.

இப்புத்தகத்தில் வரும் சாசனங்களின் அட்டவணை.

தாலுக்கா	நகரம், கோட்டம்.	ஆலயம்.	அரசன்பெயர்.	சிம்மாசனம் ஏறிய இத்தனையாவது ஆண்டில் ஏற்பட்ட கல்வெட்டுகள்.	கி.பி.	பக்கம்.
காஞ்சிபுரம்	காஞ்சிபுரம் எயிற்கோட்டம்	கைலாசநாதர்	ராஜசிம்மவர்ம பல்லவ ராயன்		550	10
,,	கூரம் ஊத்துக்காட்டுகோட்ட	விச்சாவினீத பல்லவபரமேஸ்வரம்	பரமேஸ்வரவர்மபல்லவ ராயன்	செப்பேடு	670	11
வந்தவாசி	உக்கல் கலியூர்கோட்டம்	பெருமாள்கோவில்	ராஜராஜதேவன்	29-வது ஆண்டு	1014	25
காஞ்சி	மணிமங்கலம் செங்காட்டுகோட்டம்	இராஜகோபால பெருமாள்கோவில்	ராஜேந்திரசோழன்	4-வது ,,	1016	25
கும்பகோணம்	திருவிடைமருதூர்	திருவிடைமருதூர்	1-வது குலோத்துங்க	26-வது ,,	1090	27
சைதாப்பேட்டை	திருவொற்றியூர் புழற்கோட்டம்	ஆதிபுரீஸ்வரர்	,,	2- வது ,,	1066	28
திருத்தணிகை	திருவாலங்காடு மணவூர்கோட்டம்	மகாதேவராலயம்	,,	2-வது ,,	1066	29
காஞ்சி	சோமங்கலம் செங்காட்டுகோட்டம்	சவுந்தரராஜப்பெருமாள்	,,	3-வது ,,	1067	29
,,	காஞ்சி, எயிற்கோட்டம்	பாண்டவபெருமாள்	,,	5-வது ,,	1069	30
செங்கல்பட்டு	திருக்கழுக்குன்றம் களத்தூர்கோட்டம்	வேதகிரிஈஸ்வரர்	,,	14-வது ,,	1078	31
காஞ்சி	காவாந்தண்டலம் ஊத்துகாட்டுகோட்டம்	லட்சுமிநாராயண பெருமாளாலயம்	,,	4-வது ,,	1068	31
மதுராந்தகம்	பெரும்பேறூர் களத்தூர்கோட்டம்	தான்தோன்றிஈஸ்வரர்	,,	11 வது ,,	1075	32

போளூர்	திருமலை, பங்காளநாடு	வைகவூர் திருமலைதேவர்	,,	12-வது	,,	1076	32
காஞ்சி	காஞ்சி, எயிற்கோட்டம்	வரதராஜப்பெருமாள்	விக்கிரமசோழன்	9-வது	,,	1127	35
உடையார்பாளையம்	திருமலைவாடி	வைத்தியநாதர்	,,	10-வது	,,	1128	36
காஞ்சி	மணிமங்கலம் செங்காட்டுகோட்டம்	ராஜகோபாலப்பெருமா	,,	4-வது	,,	1122	37
,,	,,	,,	2-வது குலோத்துங்க	8-வது	,,	1136	38
கூடலூர்	திருமாணிக்குழி	வாமனபுரீஸ்வரர்	3-வது குலோத்துங்க	3-வது	,,	1180	39
காஞ்சி	மணிமங்கலம் செங்காட்டுகோட்டம்	ராஜகோபாலப்பெருமா	,,	12-வது	,,	1189	39
,,	,,	,,	2-வது ராஜராஜசோழ	18-வது	,,	1234	40
வேலூர்	விரிஞ்சிபுரத்திற்கடுத்த பொய்கை	பெருமாள்		24-வது	,,	1240	41
காஞ்சி	காஞ்சி, எயிற்கோட்டம்	வரதராஜர்	கோப்பெருஞ்சிங்கசோ	18-வது	,,	1260	42
,,	,,	,,	விஜயகண்ட கோபால	14-வது	,,	1266	42
காஞ்சி	காஞ்சி எயிற்கோட்டம்	வரதராஜர்	,,	8-வது	,,	1260	42
,,	,,	சுரஹரீஸ்வரர்	,,	25-வது	,,	1277	43
வாலாஜா	திருவல்லம் வேலூர்கோட்டம்	வில்வநாதீஸ்வரர்	,,	3-வது	,,	1255	43
காஞ்சி	காஞ்சிபுரம் எயிற்கோட்டம்	வரதராஜப்பெருமாள்	நாராயணசம்புவராயன்	20-வது	,,	1357	46
,,	,,	,,	வீரஅரிஅரராயர்			1392	49
சந்திரகிரிராஜ்ஜியம்	ஆரணி		வீரசிங்காராயர்	செப்பேடு	,,	1429	49
போளூர்	திருமலை பலகுன்றக்கோட்டம்		2-வது ராஜராஜசோழன்	20-வது	,,	1236	57
வந்தவாசி	உக்கல், சலியூர்க்கோட்ட	பெருமாள்கோயில்	1-வது இராஜஇராஜ சோழதேவன்	16-வது	,,	1001	58
சைதாப்பேட்டை	சாத்தாங்காடுபுழற்கோட்டம்.		இராஜவல்லபன்	செப்பேடு.	,,	1456	58

கச்சிப்பல்லவச் சோழசரித்திரச் சுருக்க

அட்டவணை.

முதல் அத்தியாயம்.

(கி. மு. 447-முதல் கி. பி. 472-வரையில்)

இரண்டாவது அத்தியாயம்.

கி. பி. 472-முதல் கி. பி. 733-வரையில்

மூன்றாவது அத்தியாயம்.

(கி. பி. 733-முதல் கி. பி. 850-வரையில்)

நாலாவது அத்தியாயம்.

(கி. பி. 850-முதல் கி. பி. 1376-வரையில்)

ஐந்தாவது அத்தியாயம்.

(கி. பி. 1376-முதல் கி. பி. 1888-வரையில்)

ஆறுவது அத்தியாயம்.

அட்டவணை முற்றிற்று.

முகவுரை

பரதகண்டமாகிய இவ்விந்து தேசத்திலே அனேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அனேக அரசர்களும் சக்கிரவர்த்திகளும் சிற்றரசரும் அரசுபுரிந்து வந்தார்களென்று செப்பேடு சிலா சாசனங்களையன்றிப்பல இதிகாச புராணங்களும் முறையிடுகின்றன. இவ்விதிகாசபுராணங்களில் கூறுஞ் சரித்திரங்கள் பெரும்பாலும் கட்டுக்கதைகளாகக்காணப்படுகின்றனவென்று மேல்நாட்டுச்சரித்திர ஆராய்ச்சியில் வல்லமையுடைய மேதாவிகள் சந்தேகிக்கின்றனர். ஆயினும் இந்தியாவை அரசு புரிந்து வரும் ஆங்கிலேய அரசாக்ஷியார் இந்து தேசத்தில் பூர்வ அரசர்கள் ஆளுகையிலேற்பட்ட ஆலயங்களில் சித்திரிக்கப்பட்டுள்ள சித்திர வேலைகளையும், மலைகளிலும் மலைக்குகைகளிலும்செய்யப்பட்டிருக்கும்வேலைகளின் அற்புதங்களையும் கண்ணுற்று இவ்வேலைப்பாடுகள் எக்காலத்தில் எவ்வெவ்வரசரால் செய்யப்பட்டனவென்பதையும் அவ்வவ்வரசர்களின் ஆளுகையின் இயல் எத்தன்மைத் தென்பதையும் இன்னனைய பிற விஷயங்களையும் அறிதற்பொருட்டு ஷெடி அரசாட்சியார் சரித்திர வாராய்ச்சியிலும் செப்பேடு சிலா சாஸன முதலிய வாராய்ச்சிலும் வல்லபமுடையமேல் நாட்டு மேதாவிகளைக்கொண்டு சோதிக்கும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள். அவர்கள் பூர்வகாலவரசர்களால் வழங்கப்பட்ட நாணயங்களைக் (காசுகளைக்) கொண்டும் அவ்வவ்வரசர்காலங்களில் வழங்கப்பட்ட லிபிகளை (எழுத்துக்களை)க்கொண்டும் அவ்வவ்வரசர் ஆளுகையில் ஏற்பட்ட செப்பேடுசிலாசாஸனங்களைக்கொண்டும் சோதித்து எழுதி சேகரித்தவைகளை அச்சிட்டு புத்தகங்களாக வெளிப்படுத்தியிருக்கின்றனர். இங்ஙனம் புத்தகங்களை வெளிப்படுத்தியவர்கள் சர் எலியட் துரையவர்களும் ராபர்ட் சூயல் துரையவர்களும் டாக்டர் பர்னல் துரையவர்களும் E. ஊல்சு துரையவர்களும் மற்றுமுள்ளவர்களுமேயாம். இப்புத்தகங்கள்யாவும் ஆங்கிலேய பாஷையில் எழுதப்பட்டிருக்கின்றன. இப்பாஷையைப் படியாதவர்க்கு அவற்றின் உண்மை விளங்கா. ஆயினமையின் மேற்குறித்தவர்களால் ஆக்கப்பட்ட புத்தகங்களின் கருத்துக்களைத்தழுவியும் பற்பல சாஸனங்களின் ஆதாரங்களைத்தழுவியும் "கச்சிப்பல்லவச்சோழ சரித்திரச்சுருக்கம்" என்னும் இச்சிறு புத்தகம் தமிழில் வரைய ஆவசியகம்நேரிட்டது.

கா. ஆ.

நூல்.

முதல் அத்தியாயம்.

பரதகண்டத்தின் தென்பாரிசத்திலுள்ளநாடுகள் நான்குமண்டலங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்நான்குமண்டலங்களில் பல்லவராஜ்ஜியமாகிய தொண்டைமண்டலத்தின் சிறப்புவருமாறு:—

கம்பர்.

வெற்றிபுனை தாதகிக்கும் வேப்புக்கும் பெண்ணைக்கும்
சுற்றும் பெருநிழலாய்த் தோன்றுமே—கற்றோர்
திறந்தாங்குந் தாங்குஞ் செகமுழுதுந் தாங்கும்
அறந் தாங்குந் தொண்டை யரசு.

ஆத்திமாலையையுடைய சோழனுக்கும் வேப்பமாலையையுடைய பாண்டியனுக்கும் பனைமாலையையுடைய சேரனுக்கும் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் தொண்டைநாடாகிய பல்லவராஜ்ஜியம் பெருநிழலாயிருக்கின்றதென்பதாம்.

ஔவையார்.

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து-பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர்வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.

சேரமண்டலம் யானையாற் சிறந்ததென்பதும், சோழவளநாடு சோற்றாற் சிறந்ததென்பதும் பாண்டியமண்டலம் முத்தினாற் சிறந்ததென்பதும், தொண்டைமண்டலம் அறிவுடையமகான்களால் சிறந்ததென்பதும் மேற்பாட்டின் கருத்து.

இவ்வளவுபெருமைபொருந்தியபல்லவராஜ்ஜியமானது நீர்வளம் நிலவளம் குடிவளம் பொருந்தியுள்ளது. அன்றியும் இவ்விராஜ்ஜியத்தில் வடபெண்ணை, தென்பெண்ணை, பாலி முதலியநதிகள் மேற்பாரிசபர்வதங்களில் உற்பத்தியாகி வங்காளகுடாக்கடலில் சங்கமமாகின்றன. இவையன்றி பல்லவ அரசர் ஆளுகையில் ஆங்காங்கு ஏற்பட்ட நீர்நிலைகளும் தடாகங்களும் அனேகமிருக்கின்றன. எல்லாவளப்பங்களும் அமையப்பெற்ற தொண்டை மண்டலத்தை அரசுசெலுத்தி வந்த பல்லவ அரசர்கள் ஆளுகையின் ஆரம்பத்தில் பல்லவராஜ்ஜியத்

தை 24 கோட்டங்களாக வகுத்து ஒவ்வொரு கோட்டத்திலும் குறுநில மன்னர்களாகிய வன்னியர்கள் (சிற்றரசர்கள்) முடி மன்னன் அதிகாரத்திற்குட்பட்டு அரசுபுரிந்து வந்தனர். கோட்டையுடையது கோட்டமென்று சொல்லப்படும். ஒவ்வொருகோட்டத்திற்கும் நாடுகள் இத்தனை யென்றும், ஒவ்வொருநாட்டில் அடங்கிய கிராமங்கள் அக்கிராரம், மன்னர்வேடு, நத்தர் என மூன்று விதமாக வகுக்கப்பட்டு, அவைகளில் அந்தணர் அரசர் வேளாளர் முறையேவசிக்கும்படியும், இன்னார் வசிக்கும் கிராமம் இதுவென்று அறிதற்கு அறிகுறியாக எல்லைக்கற்களை நாட்டியும், பல்லவ அரசர்கள் பூர்வத்தில் ஏற்பாடுசெய்திருந்தனர்.

பல்லவராஜ்ஜியத்தின் கோட்டங்களாவன.

1 புழற்கோட்டம்.
2 புலியூர்கோட்டம்.
3 ஈக்காட்டுக்கோட்டம்.
4 மணவூர்கோட்டம்.
5 செங்காட்டுக்கோட்டம்.
6 பையூர்கோட்டம்.
7 எயிற்கோட்டம்.
8 தாமற்கோட்டம்.
9 ஊற்றுக்காட்டுக்கோட்டம்.
10 களத்தூர்கோட்டம்.
11 செம்பூர்கோட்டம்.
12 ஆமூர்கோட்டம்.
13 ஈதூர்கோட்டம்.
14 வெண்குன்றக்கோட்டம்.
15 பலகுன்றக்கோட்டம்.
16 இளங்காட்டுக்கோட்டம்.
17 கலியூர்க்கோட்டம்.
18 சிறுகாரைக்கோட்டம்.
19 படுவூர்கோட்டம்.
20 கடிகைக்கோட்டம்.
21 சந்திரிகைக்கோட்டம்.
22 குன்றபத்திரக்கோட்டம்.
23 வேங்கடக்கோட்டம்.
24 வேலூர்கோட்டம்,

இந்த 24 கோட்டங்களில் அடங்கியநாடுகள் * 79. ஒவ்வொரு கோட்டத்திற்கும் மகாநாடு ஒன்றுண்டு. இம்மகாநாட்டில் ஏனையநாடுகளின் முக்கிய காரியஸ்தர்கள் வந்து கூடி ராஜாங்கமுறைமைகளையும் பிரஜைகளுக்குள் நேர்ந்தவழக்குகளையும்மற்றைய விஷயங்களையும் நியாயவாயிலாகப்பேசி தீர்மானஞ்செய்வார்கள்.

---

* எரெழுபதிலும், திருக்கழுக்குன்றப் புராணத்திலும், சோழன் சிறப்பையும், வேளாளர் சிறப்பையும் சொல்லுமிடத்திலே * * * "ஒலிகெழு நீரெழுபத்தொன்பது நாட்டுக்குடியுடையான் சென்னி" என்றும் "கோட்டமோரிருபானுன்கு கூறுநாடெழுபத்தொன்பான்" என்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் செப்பேடுகளிலும், சிலாசாசனங்களிலும் எழுபத்தொன்பது நாடுகளில் அடங்காத நாடுகளின் பெயர்களும் வருவதால், இப்புத்தகங்கள் ஏற்பட்ட காலத்திற்கு முன்னமேயுள்ள சாசனங்களை இந்நூலாசிரியர்கண்டிலர் போலும். மிராசுரைட் என்னும் புத்தகத்தில் தொண்டமண்டலத்திலே வேளாளர்களால் சொல்லப்பட்ட நாடுகள் எழுபத்தொன்பது என்பது பொருந்தாவாம். இதன் விபரத்தை மற்றோரிடத்தில் காண்க.

இருபத்து நாலுகோட்டங்களடங்கிய பல்லவ ராஜ்ஜியத்திற்கு இராஜதானியாகிய காஞ்சிமாநகரத்திலே, சிவாலயங்களும் விஷ்ணுவாலயங்களும் பௌத்தசமண ஆலயங்களும் அநேக மிருக்கின்றன. அன்றியும் இவ்வாலயங்களில் வானத்தையாளவிய கோபுரங்களும் அதிவிசித்திரமான வேலைகளமைந்த மண்டபங்களும் மாடமாளிகைகளும் நிறைந்திருக்கின்றன. இத்தகையசிறப்பும் மாட்சிமையும் பெற்றகாஞ்சிமா நகரத்தையும் நாட்டையும் பற்றிச்சீனதேசத்து யாத்திரை வாசியாகிய யூன்சியான் என்பவர் கி. பி. 640-ம் ஆண்டில் இவ்விடத்திற்கு விஜயஞ்செய்திருந்தகாலத்தில் எழுதிய யாத்திரை புத்தகத்தில் கூறுவதாவது:—

"தொண்டமண்டலம் ஆயிரம் (1000) மயில் சுற்றளவுடையது? இதன் ராஜதானியாகிய காஞ்சிநகரம் ஆறு மயில் (6) சுற்றளவுடையது; இதன் பூசாரம் வளமையுள்ளது; இங்கு பலவகையான புஷ்பங்களும் பழவர்க்கங்களும் விசேஷமாக உற்பத்தியாகின்றன; விலையுயர்ந்த இரத்தினமுதலிய திரவியங்கள் கிடைக்கின்றன. தேசம்உஷ்ணமுடையது; பிரஜைகள் தையிரிய சாலிகள்; உண்மையும் நாணயமுமுடையவர்கள்; கல்வியில் வல்லாரைமதித்துப் பரிபாலிப்பவர்; பேசும் பாஷையிலும் எழுதும் எழுத்திலும் மத்திய இந்தியாவிலுள்ளவர்களுக்கு ஒரு சிறிதும் பேதப்பட்டவர்களல்லர்; நூறு சங்கமர்களும் பதினாயிரம் (10000) பௌத்த மதபோதகாசிரியர்களு மிருக்கின்றார்கள்; தாவர நியாயத்தைச்சார்ந்த விதிகளை அவர்கள் வாசிக்கின்றார்கள், சைவ வைணவ ஆலயங்கள் எண்பது (80) இருக்கின்றன; சமண சமய போதகாசிரியர்கள் அனேகரிருக்கின்றனர்" இவ்வகையாக காஞ்சி நகரையும் நாட்டையும்பற்றி 1270 வருடங்களுக்கு முன்விஜயஞ்செய்த சீனயாத்திரைக்காரர் நேரில் கண்டதைப்பற்றிக் கூறுகின்றார். இதுவன்றியும் கி. மு. 447 வருஷங்களுக்கு முன்னிருந்தவரும் பௌத்தசமயத்திற்கு மூலபுருடருமாகிய புத்தர் என்பவர் ஓர்கால் காஞ்சிமாநகரத்திற்கு விஜயஞ்செய்து அந்நகரத்தில் பிறந்த தருமபாலனையும் அங்குள்ள பிரஜைகளையும் பௌத்தசமயத்தை அனுட்டிக்கும்படி செய்தாரென்றும் கி. மு. 250-ம் வருஷத்தில் இந்தியாவில் பிரபலமாக அரசியற்றிய அசோகவரசனால் காஞ்சியையடுத்த சிலவிடங்களில்ஸ்தூபிகள் கட்டப்பட்டனவென்றும் ஷெ சீனயாத்திரைவாசியாகிய யூன்சியான் கூறுவதால் காஞ்சிமா நகரமானது 2400 ஆண்டுக

ளுக்கு முன்சிறந்த நகரமாயிருந்ததென்று விளங்குகின்றது. ஆனல் இந்நகரம் இன்னகாலத்தில் இன்னராலேற்பட்டதென்று திட்டமாய்க் கூறுதற்குக்கூடாமையேயாம். இதுவன்றியும் 1400 ஆண்டுகளுக்கு முன்னர் ராஜசிம்மபல்லவ அரசனல் கட்டப்பட்ட கைலாசநாதர் ஆலயத்தின் சாஸனத்திலே பல்லவ அரசர்களின் பராக்கிரமங்களையும் பக்திவிசுவாசங்களையும் குணதியசங்களையும் நன்ருக விளக்கப்பட்டிருக்கின்றது.

பல்லவராஜ்ஜியத்தின் இராஜதானியாகிய காஞ்சிபுரம் 2400 வருஷங்களுக்குமுன் பல்லவ அரசர்களுக்கு ஆட்சியாக விருந்ததென்று பற்பல ஆதாரங்களால் தெரிய வருகின்றது; இப்புராதன நகரத்திலே பூர்வத்தில் அரசுசெலுத்தியவர்கள் இன்ன பெயரையுடைய அரசரென்றும் அவருக்குப்பின் வந்த அரசர்கள் இன்னின்னரென்றும் அறிந்துகொள்வதற்குச் சரியான சரித்திரங்கிடையாது. ஆனல் பௌத்தசமய மூலபுருடராகிய புத்தர் காஞ்சியில் விஜயஞ் செய்த காலத்தில் பல்லவ அரசாட்சியோங்கி யிருந்ததென்று விளங்குகின்றது.

கி. பி. 68-ம் ஆண்டில் மயிலையில் ஸ்கந்தவர்மபல்லவராயன் அரசுசெலுத்தியிருந்தானென்று டாக்டர் கேன்னட் துரையவர்களால் 1882ஹு-ம் வெளியிடப்பட்டபுத்தகத்தில் கூறப்பட்டிருக்கின்றது. ஸ்கந்தவர்மன் மயிலையில் அரசுபுரிந்து வரும் நாட்களில் ஏசு கிறுஸ்துவின் பனிரெண்டு சீஷர்களில் ஒருவராகிய சன்டு தோமாஸ் என்பவர் மயிலைமாநகரத்தில் அரசு புரிந்துவந்த ஸ்கந்தவர்ம பல்லவராயனைக் கண்டபின்னர் அவ்வரசனல் ஆதரிக்கப்பட்டு வந்தார். இங்ஙனம் வருங்காலத்தில் ஸ்கந்தவர்மன் சன்டு தோமாஸ் என்பவரின் போதனவசத்தராய் விட்டாரென்றும் கிறுஸ்து சமயத்தைத்தழுவிக்கொண்டாரென்றும் அங்குள்ள பிரஜைகள் அவைகளைச்சகிக்க முடியாமல் இவற்றிகுக் காரணராயிருப்பவர் தோமாஸ் என்று யோசித்து பிரஜைகள் ஒன்று கூடி அவர் மீது கல்லெறிந்து கொன்று விட்டார்கள். இந்த சம்பவம் கி. பி. 68ஹு டிசம்பர்மீ 21உ நடந்ததாக அனேக ஆதாரங்களுடன் மேற்படி கென்னட்துரை அவர்கள் எழுதியபுத்தகத்தில் கூறப்பட்டிருக்கின்றது. நந்திக்கலம்பகத்தில் "மல்லைவேந்தன் மயிலைகாவலன்" என்று கூறியிருப்பதால் மயிலை காஞ்சிபுரம்

இவைகளுக்கு அரசன் ஒருவனும், ஸ்கந்தவர்மபல்லவராயனும் காஞ்சிபுரத்தில் வசித்தவனென்றும் திருப்பதியும் காஞ்சிபுரமும் ஓர் அரசன் ஆளுகையிலடங்கிய தென்றும் கொள்ளவேண்டியது.

இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் (கி. பி. 150) சிவஸ்கந்தவர்மபல்லவராயன் காஞ்சிமா நகரத்தை அரசுபுரிந்தானென்று அவன் ஆளுகையின்மேலேற்பட்ட சாஸனம் தெரிவிக்கின்றது. இவன் மகாபராக்கிரமசாலியும் சிவபக்தியில் சிறந்தவனுமாயிருந்தான். வடநாடு தென்னாடுகளை ஜெயித்து பிரபலமாக அரசியற்றியவன். சிவஸ்கந்தவர்ம பல்லவராயன் அதிகாரத்தின் கீழ் தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய நாடுகளின் பிரஜைகள் குடிகளாயிருந்தார்கள். இவ்வரசனது கட்டளைகள் இவன் இராஜ்யத்தின் எல்லாத்திக்குகளிலும் யாதொரு ஆடங்கமின்றி நடைபெற்று வந்தன. இவ்வரசன் ஆக்ஞையின் கீழ் அடங்கிய அனேக சிற்றரசர்களும் தலைவர்களு மிருந்தார்கள். இவன் அனேக அரசர்களை ஜெயித்து ஜெயவீரனென்று யாவராலும் புகழப்பட்டான். இத்தன்மை வாய்ந்த சிவஸ்கந்தவர்ம பல்லவராயன் பலதேசங்களை ஜெயித்தவனென்று அறிதற்பொருட்டு அஸ்வமேத யாகத்தை நடத்துவதற்கு அளவுகடந்த திரவியங்களைச்சேகரித்து அந்த யாகத்தை நடத்தி பூர்த்தி செய்தான். இந்த அஸ்வமேத யாகத்திற்காக பல நாடுகளிலிருந்து அரசர்களும் சிற்றரசர்களும் ஆயிரக்கணக்கான பிராமணோத்தமர்களும் ஏனையபிரஜைகளும் காஞ்சிமா நகரத்திற்கு வந்து நிறைந்த காலத்தில் அம்மாநகரத்தின் உன்னதகாட்சியும் மாட்சிமையும் இன்னவகைத்தாயிருந்ததென்று கூறுதற்குக் கூடாமையாம். நானா திசைகளிலிருந்து அஸ்வமேதயாகத்தின் பொருட்டு கச்சிநகரில் வந்து நிறைந்த ஜனக்கூட்டங்களுக்காக சிவஸ்கந்த வர்மபல்லவராயன் ஆக்ஞையால் நகரக்காவலும் ஜனக்கூட்டங்களை அடக்கியாள்வதற்குவேண்டிய வேற்பாடுகளும் பிரஜைகளின் சவுகரியத்திற்கும் ஆரோக்கியத்திற்குமாக வேண்டியவேற்பாடுகளும் குறைவின்றி நிறைவேறிய தென்பதற்கு யாதொரு சந்தேகமிராது. அக்காலத்தில் பௌத்த சமயத்தினர் காஞ்சியிலும் ஏனையவிடங்களிலும் அனேகரிருந்தனர். இவர்கள் பிரஜைகளுக்கு நேரிடும் பலவகைப் பிணிகளைத்தடுப்பதற்காக ஆங்காங்கு தருமவயித்திய சாலைகளையேற்படுத்தி யிருந்தனர். சிவஸ்கந்தவர்மபல்லவராயன் மகாசிவபக்தனாயினும், இவன் ஆளுகையின் கீழுள்ள பிரஜைகள் சமணசமயத்தை

யும் பௌத்தசமயத்தையும் தழுவியிருந்தனரேனும் அவர்களிடத்தில் விசுவாசமுடையவனாயிருந்தான். இவ்வரசனுடைய தந்தையின் பெயர் பாப்பர் வர்ம பல்லவன்; இவனது சாஸனத்தில் சிவஸ்கந்த வர்மபல்லவன் தருமப்பரிபாலனத்தையும் குணாதிசயங்களையும் விளக்கியிருக்கின்றது.

குண்டூர் சமீபத்தில் அகப்பட்ட ஓர் பல்லவ அரசர் சாஸனத்தில், நாலாம் நூற்றாண்டிலே விஜயஸ்கந்தவர்ம பல்லவன் இவன் குமாரன் விஜயபுத்தவர்ம பல்லவன் என்பவர்கள் அரசுபுரிந்தார்களென்றும் பரத்வாஜ கோத்திரத்தை யுடையவர்களென்றும், சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் சொலாங்கியன கோத்திரத்தையுடைய விஜய நந்திவர்ம பல்லவன் அவனுடைய உறவினன் அல்லன் இவர்களைப்போன்ற பல்லவ அரசர்கள் காஞ்சியை ஆண்டார்களென்று தெரிகின்றது. ஆனால் அவர்கள் அரசாட்சியின்கால அளவும் முறைமையும் சரியாக விளங்கவில்லை.

நாலாம் நூற்றாண்டின் முடிவிலும் ஐந்தாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் திரிலோசன வர்ம பல்லவராயன் காஞ்சி நகரத்தை ஆண்டு வரும் நாட்களில் அயோத்தியை அரசு செலுத்திய 59 சக்கிரவர்த்திகளில் கடைசியாக வாண்டவன் ஜெயசிம்மனாகிய விஜயாதித்தன். பூர்வத்திலே அபுபர்வதத்திலே தபோதனர்களால் செய்யப்பட்ட யாககுண்டத்திலே உற்பவித்த நான்கு அக்கினி வம்ஸத்தரசர்களில் விஜயாதித்தன் சளுக்கியவம்சத்தைச் சேர்ந்தவன். சளுக்கியவேந்தனாகிய விஜயாதித்தன் தென்னாடுகளை ஜெயித்து சிறப்பெற வேண்டுமென்று அவாவுடையவனாய் நான்கு வகையான சேனைகளைச் சேர்த்துக்கொண்டு தெற்குநோக்கி நர்மதைநதியைக்கடந்து செல்வதைக் கேள்வியுற்ற திரிலோசனபல்லவன் தனது சேனாபலத்துடன் எதிர்நோக்கிச்சென்று விஜயாதித்தனை மறித்து போர்புரிகையில் விஜயாதித்தன் சேனைகள் அபஜெயப்பட்டதுமன்றி அவனும் அப்போரில் கொல்லப்பட்டான். இங்ஙனம் கொல்லப்பட்டானென்பதை அவன் மனைவிகேள்விப்பட்டு ஆருத்துயர் அடைந்து தான் கருப்பவதியாயிருப்பதை நோக்கி தனது குரு ஆசாரியராகிய விஷ்ணு பக்தசோயாஜின் என்பவரிடம் போய் முறையிட அவ்வாசிரியர் ராஜபத்தினியைப் பழையமந்திரிகளுடன் முடிவேமு என்னும் அக்கிராகாரத்திற்கு அழைத்துப்போய் தனது குமாரத்தியைப்போல் பாது

காத்து வந்தார். இங்ஙனம் வருங்காலத்தில் ராஜபத்தினி ஓர் குமாரனைப் பெற்றாள். அக்குமாரனுக்கு விஷ்ணு வர்த்தனன் என்று பெயரிடப்பட்டது. இந்தராஜ குமாரன் நாளொரு மேனியாயும் பொழுதொரு வண்ணமாயும் வளர்ந்து வருகையில் கல்வி முதலியவைகளில் தேர்ச்சியடைந்து, பின்னர் தனது பிதாவின் ராஜ்ஜியத்தைக் கைக்கொண்டு, அதைப்பலப்படுத்த வேண்டுமென்று சிந்தனைசெய்து காஞ்சிப்பல்லவ அரசனோடு சினேகமாக விருக்க யோசித்து காஞ்சிப் பல்லவ அரசன் குமாரத்தியை விவாகம் புரிந்து கொண்டான். விவாகஞ்செய்த பிறகு சளுக்கிய வம்சத்திலுற்பவித்த விஷ்ணு வர்த்தனனுக்கும் பல்லவ வம்சத்திலுற்பவித்த ராஜகுமாரத்திக்கும் பிறந்தவன் 2-வது விஜயாதித்தன். இவன குமாரன் சளுக்கிய வேந்தனாகிய புளகேசவல்லபன் இவன் கி. பி. 472-ம் ஆண்டில் அரசுசெலுத்தியவன்.

இரண்டாவது அத்தியாயம்.

காஞ்சி கைலாசநாதர் ஆலயத்தின் சாஸனங்களின் கருத்துக்களைத்தழுவியும் கூரம் சாளுவங்குப்பம் முதலிய சாஸனங்களின் கருத்துக்களைத்தழுவியும் பின்வரும் விஷயம் எழுதப்பட்டது.

கி. பி. 500-ம் ஆண்டிற்குமேல் காஞ்சிமாநகரத்தில் அரசியற்றியவன் உக்கிரதண்டவர்ம பல்லவராயன். லோகாதித்யவர்மன் என்றும் சொல்லப்படுவன். இம்மகாவீரன் ரணராகா வென்னும் சளுக்கிய வேந்தனை எதிர்த்து அவனையும் அவனது சேனையையும் ரணரசிகா வென்னும் பட்டணத்தையும் அழித்தான். இவனது அரசாட்சி பிரபலப்பட்டு வருகையில் இவனுக்குப் "பல்லவ ராஜகீர்த்திப்பிரதாப அத்தியந்தகாமன்" என்னும் புத்திரன் உதித்தான். இப்பல்லவராயனுக்கு ராஜசிம்மனென்றும், நரசிம்ம விஷ்ணு என்றும், நரசிம்ம போத்தவர்மனென்றும் பெயர்கள் வழங்கிவந்தன. இப்பல்லவராயன் சைவசமயத்தைத்தழுவி சன்மார்க்க நெறியில் ஒழுகியவன். ராஜசிம்மேஸ்வரம் அல்லது, கைலாசநாதர் ஆலயத்தைக் கட்டியவன். இவன் ஆளுகையில் மேற்படி ஆலயத்திலேற்பட்ட சாஸனத்திலே கூறுவதாவது "அரசர்க்கரசனும் சத்துருக்களாகிய யானைக்கூட்டங் கட்குச் சிம்மம் போன்றவனுமாகிய ராஜராஜ பக்தியுள்ள ராஜசிம்ம பல்லவ

ணல் கட்டப்பட்ட ராஜசிம்மேஸ்வர ஆலயம் மேகத்தை யளாவியும் கைலாயத்தைகரவர்ந்தும் உள்ளது. இத்தகைய ஆலயத்தில் ரிஷபக்கொடியையுடைய சிவபிரான் வீற்றிருப்பாராக" என்று எழுதப்பட்டிருக்கின்றது. இவனுடைய மனைவி ரங்கதகா வென்னும் பெயரையுடையவள். இவன் மனைவியைப்பற்றி யெழுதியசாஸனம் ஆலயத்தில் பிரவேசிக்கும் முன்னிடத்திலுள்ளது. ராஜசிம்ம வர்ம பல்லவராயன் கி. பி. 550 ஆண்டிற்குமேல் அரசுபுரிந்தவன். இவன் ஆளுகையில்மாபலிபுரம்சிறந்தகரை துறைப்பட்டணமாகவிருந்தது. இவ்விடத்திலும் ராஜசிம்மவர்மனல் கட்டப்பட்ட ஆலயமிருக்கின்றது.

இவனுடைய புத்திரன் மகேந்தரவர்ம பல்லவராயன். குணபரனென்பதும், புருஷோத்தமனென்பதும், சத்துருமல்லனென்பதும், சத்தியசம்பந்தனென்பதும் இவனுக்கு வழங்கப்பட்டபெயர்களாம். இவ்வரசன் பெயரால் ராஜசிம்மேஸ்வர ஆலயத்தின் சமீபத்தில் மகேந்திரேஸ்வர ஆலயம் கட்டப்பட்டிருக்கின்றது. இவ்வாலயம் இப்போது கிலனய்கிடக்கின்றது. இவனுடைய ஆளுகை சோழமண்டலமுழுமையும் பாவியிருந்தது. திரிசிராப்பள்ளியின் மலையின் உச்சியில் சிவலிங்கத்தை ஸ்தாபித்துத்தனது உருவத்தையும் அவ்வாலயத்தில் அமைத்திருக்கின்றன். இது இடதுபாரிச ஸ்தம்பத்திலும் வலது பாரிசஸ்தம்பத்திலும் சமஸ்கிருத லிபியில்வரைந்துள்ள சாஸனத்தால் தெரியவருகின்றது, இவனே தென்னிந்தியாவில் நான்கு மலைக்கோட்டைகளைக்கட்டுவித்தவன். மகேந்தரவர்மனகிய குணபரன் ஆளுகை கி. பி. 567 ஆண்டிற்குப் பின்னர் நடந்தது. காஞ்சிபுரத்திற்கு மேற்கும் சோளங்கிபுரத்திற்குச்சமீபத்திலும் மகேந்தரவாடியென்று சொல்லப்படுமிடத்தில் மகேந்தரதடாகம் என்ற ஏரியையும் மகேந்தாபுரம் என்னும் நகரமும் மகேந்திரவர்மன் ஆளுகை காலத்தில் ஏற்படுத்தப்பட்டன. இவ்விருத்தாந்தங்கள் அவ்வேரிகரைமீதுள்ள ஓர் குகையில் எழுதப்பட்டிருக்கின்றது.

மகேந்திரவர்மனுடைய குமாரன் முதலாவது நரசிம்ம வர்ம்மபல்லவாாயன். இவ்வரசனுக்குப்பகைவன், சளுக்கியவேந்தனகிய 2-வது புளகேசவல்லபராஜன், இவன்பலதரம் பல்லவராஜ்ஜியத்தைப் படையெடுத்து அபஜெயப்பட்டவன். பெரியாலம், மணிமங்கலம், சூரமாரம் முதலியவிடங்களில் நடந்த சண்டைகளில் புளகேசன் தோல்வி

யடைந்துபோய் விட்டான். இதன் பின்னர் நரசிம்மவர்மன் நால்வகையான திரண்டசேனைகளைச்சேர்த்து அச்சேனைகளுக்குச் சிறுத்தொண்டரை சேனாதிபதியாக நியமனஞ்செய்து மேற்கு இந்தியாவில் சளுக்கியராஜ்ஜியத்திற்கு ராஜதானியாகிய வாதாபிநகரத்தை அழித்து வெற்றிபெற்று வரும்படி அவருக்கு உத்தரவு செய்து அனுப்ப, சிறுத்தொண்டரும் தமது சேனாபலத்துடன் விரைவிற்சென்று வாதாபிநகரத்தை முற்றுகைபோட்டு, பின்னர் பெரிய போர்புரிந்து, எதிரியைத் தோல்வியடையும்படிச்செய்து, அந்நகரத்தையழித்து பலவகையான இரத்தினங்களையும் பொருள்களையும் யானை குதிரைகளையும் அந்நகரத்திலிருந்து சேகரித்துக்கொண்டு கச்சிநகருக்குச் சென்று நரசிம்மவர்மன் முன்வைத்தார்.

பெரியபுராணம் சிறுத்தொண்டநயனார் சரித்திரம் 6--வது செய்யுள்

மன்னவர்க்குத்தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந்துகளாகத் துளைநெடுங்கை வரையகத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையு
மின்னனவெண்ணிலகவர்ந்திங்கியலரசன் முன்கொணர்ந்தார்.

63-நாயன் மார்களில் சிறுத்தொண்டநாயனார் நரசிம்மவர்ம பல்லவராயனிடத்தில் சேனாதிபதியாயிருந்து வாதாபி நகரத்தையழித்து வந்தாரென்று இச்செய்யுள் விளக்குகின்றது. 2-வது புளகேசவல்லபராஜன் கி. பி.--610 ஆண்டு முதல் 634-ம் ஆண்டுவரையில் 24வருடம் அரசு புரிந்தவன். இவன் ஆளுகையின் அந்தியத்தில் வாதாபி நகரம் அழிக்கப்பட்டது. நரசிம்மவர்மனிடத்தில் சிறுத்தொண்டர் சேனாதிபதியாயிருந்தாராயினும் சிவநேசச் செல்வராய் விளங்கிச் சிவனடியார்களைப்போற்றி பூசித்துவந்தார். எங்ஙனமெனில் மேற்படி நாயனார் புராணம் 23-வது செய்யுள்

அந்நாளிற் செம்பை நகராண்ட கையாரெழுந்தருள
முன்னாக வெதிர்கொண்டு கொடுபுகுந்து முன்னூல்சேர்
பொன்மார்பிற் சிறுத்தொண்டர் புகலி காவலனார்த
நன்னமச் சேவடிகள் போற்றிசைத்து நலஞ்சிறந்தார்.

திருஞானசம்பந்தசுவாமிகள் சீகாழியைவிட்டுத் திருச்செங்காட்டங்குடிக்குச் செல்லுகையில் சிறுத்தொண்ட நாயனார் எதிர்நோக்கிச் சென்று சம்பந்தசுவாமிகளைப்பணிந்து அவரைத் தமதிருப்பிடத்

திற்கு அழைத்துச் சென்றுரென்று இச்செய்யுள் தெரிவிக்கின்றது. இதற்கிணங்க திருச்செங்காட்டங்குடி தேவாரத்திலே சுவாமிகள் அருளுவதாவது.

செந்தண்பூம் புனல்பாய்ந்த செங்காட்டங் குடிமேய
வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்ட னவன்வேண்ட
வந்தண்பூங் கலிக்காழி யடிகளையே யடிபரவுஞ்
சந்தங்கொள் சம்பந்தன் தமிழுரைப்போர் தக்கோரே.

என்று சுவாமிகள் கூறியதால் சிறுத்தொண்டர் காலமும் திருஞானசம்பந்தர்காலமும் ஒன்ருயிருக்கின்றது. புளகேசவல்லபன் கி. பி-634ம்- ஆண்டுவரையில் அரசாண்டிருந்தவன்.

நரசிம்மவர்மபல்லவன் அரசியற்றிய காலம் அதுவே யாகையால் இந்நால்வரும் 610-ம் ஆண்டிற்குமேல் வசித்தவர்களென்று தெற்றென விளங்குகின்றது.

நரசிம்ம வர்மபல்லவராயன் புத்திரன் 2-வது மகேந்தர வர்மன் இவன் ஆளுகையின் சரித்திரம் பட்டயங்களில் சொல்லப்படவில்லையாதலால் அறிதற்குக்கூடாமையாம். இவனுடைய புத்திரன் பரமேஸ்வர வர்ம பல்லவராயன் முதலாவது விக்கிரமாதித்திய வல்லபராஜனை பெருவளநல்லூரில் நடந்தயுத்தத்தில் தோல்வியடைச்செய்தான். விக்கிரமாதித்தியன் 670-முதல் 680 ஆண்டு வரையில் அரசாண்டவன்; பெருவளநல்லூர் சண்டையானது இவ்வாண்டுகளுக்கு மத்தியில் நடைபெற்றிருத்தல்வேண்டும். இவ்வரசன் காஞ்சியில் பிரபலமான அரசுசெலுத்திவந்தவன். இங்ஙனஞ்செலுத்திவருங்காலத்தில் காஞ்சிபுரத்திற்கு வட-மேற்கில் 10 மயில்தூரத்தில் கூரம்என்கிற கிராமமிருக்கின்றது. இக்கிராமத்திலுள்ள ஆலயமும் ஏரியும் பரமேஸ்வர வர்மபல்லவராயனால் கட்டப்பட்டன. இவ்வேரிக்குப் பரமேஸ்வர தடாகம் என்று சொல்லப்படும். இவ்வரசன் ஆளுகையில் கூரம் கிராமத்தைப்பற்றி யேற்பட்ட செப்பேடுகள் ஏழு. இச்செப்பேட்டு சாஸனம் சமஸ்கிருதத்திலும் தமிழிலிலும் வரையப்பட்டிருக்கின்றது. தமிழிலிருப்பதை மாத்திரம் எடுத்துக்காட்டுவாம்.

57. ++ஊற்றுக்காட்டுக் கோட்டத்து

58. நீர்வேளூர் நாட்டுக்கூரமும் ஞம்மணம்பாக்கமு ஞங்கணதட

59. விச்சாவிநீதப் பல்லவரசன் விலைச்காணங்கைகொடுத்துச்சிணை செயிது ஆயிரத்திரு

60. நூற்றுக்குழிப்படியால் விற்றுக்கொண்ட நிலம் தளிஎடுப்ப தற்கு ஓடு சுடக்கொண்ட

61. நிலம் தலைப்பாடகத்துள் சூளை மேட்டுப் பட்டியும் ஊருள் மண்டகம் எடுத்த

62. நிலத்தோடுங்கூட அயிந்தேகால் பட்டிநிலமும் விற்றுக்கொண்டு விச்சாவிநீத பல்லவ

63. பரமேச்சுரம் எடுத்து ஏரிதோண்டி இத்தளி வழிபாடு செய்வார்க்கு இருக்கும் மனையும்

64. மனைப்படப்பும் வகுத்து இதனுள் மிக்க நிலம் ஒழுக்கவிக்கு விளை நிலமாகவும் இந்நிலத்துக்கு

65. கீழ்பாலெல்லை ஊர்புகு வழியின் மேற்கும் தென்பாலெல்லை ஊர் புகுவழியின் வடக்கும்

66. மேல்பா லெல்லை ஊர்புகுவழி நின்றும் வடக்கு நோக்கி நாட்டுக் காலுக்கே போனவழியின்

67. கிழக்கும் வடபாலெல்லை நாட்டுக்காலின் தெற்கும் இந்நான்கு எல்லை யகத்தும்

68. தளியும் ஏரியும் வழிபாடு செய்வார்க்கு மனையும் மனைப்படப்பும் நீக்கி

69. மிக்க நிலமும் சூளை மேட்டுப்பட்டியும் ஒழுக்க விக்கு விளைநிலமாக கொடுத்து

70. இத்தளிக்கு வேண்டுந்தேவ சரும நவகருமஞ் செய்வதற்கும் இருபதின்பர் சதுர்வேதிகளுக்குப்

71. பிரமதேயங் கொடுப்பதற்கும் மணயிற் கோட்டத்து பன்மா நாட்டுப்

72. பரமேஸ்வர மங்கலத்துள் அகப்பட்ட வளையில் சுற்று நிலம் அத்தனையும்

73. இருபத்தைந்து பங்காய் இதனுள் மூன்று பங்கும் கூரத்து தளிக்கு தேவகரும நவகருமஞ்

74. செய்வதாகவும் கூரத்து மண்டகத்துக்குத் தண்ணீர்க்குந்நீக்கும் ஒருபங்காவும் இம்மண்டகத்தே

75. பாரதம் வாசிப்பதற்கு ஒருபங்காவும் நின்ற இருபது பங்கும் இருபதின்மர்

76. சதுர்வேதிகளுக்குப் பிராமதேய மாககொடுத்து இவ்வூர்மனையும் மனைப்படப்பும் ஊராள்ச்சியும்

77. செக்கும் தறியும் கூலமும் தரகும் கந்நிக்காணமும் மற்றும் பொதுவினுலுள்ள தெல்லாம்

78. இப்பங்கு இருபத்தைந்தின் வழியாலே பங்கிட்டுண்பராகவும் இவ்வூர் பரமேஸ்வர தடாகத்துக்கு

79. பாலாற்றின் நின்றும் தோண்டின பெரும் பிடுகுகாலின் புழுதிபாடும் நீர் ஈந்த வழியாலே

80. தலைவாயும் தலைப்பேழை ஊற்றுக்காலும் தோண்டின நிலமெல்லாம் பரமேஸ்வர மங்கலத்து நிலமாக

81. இக்காலில் குற்றெத்தமையும்

82. நாடாச்சியுன் நாட்டுப் பண்ணிக்கெயும்

83. தானங்கொடுத்தமூன்று பங்குளும் ஒன்றைரைபங்கு

84. நார் அனந்த சிவாச்சாரியர மக்கள் மக்கள் மருமக்கள

85. ப்புறங்கொண்டு வழிபாடுசெயிது பலிபோசன

86. ம்கொண்டு புல்லசருமர் மக்கள் மக்கள்

87. வகருமமும் இவ்விருவர் மக்கள் மக்கள்

88. தேவத மாகாநின்ற × ×

இச்சாஸனம் தெரிவிப்பதாவது. விச்சாவிநீத பல்லவ பரமேஸ்வர ஆலயமும் பரமேஸ்வர தடாகமும் (கூரம் ஏரி) கி. பி. 610 ஆண்டுக்குப் பின்னர் பல்லவராஜ்ஜியத்தை அரசுபுரிந்து வந்த பரமேஸ்வர வர்மபல்லவராயனால் கட்டப்பட்டது. மேற்படி தடாகத்திற்குப் பாலாற்றினின்று தண்ணீர் கொண்டுவரும் பொருட்டு பெரியவாய்க்கால் ஒன்று வெட்டப்பட்டது. நிலங்களின் வருவாயை இருபத்தைந்து பங்குகளாகவகுத்து, இவற்றுள் மூன்று பங்கு ஆலயத்தின் நித்திய கட்டளைக்கும் ஆலயமாரமத்திற்கும், ஒருபங்குமண்டகத்துக்கும்தண்

ணிர்க்கும் தீயுக்கும் ஒருபங்கு, மண்டகத்தில் பாரதம் வாசித்து பிரசங்கஞ் செய்வதற்கும், இருபது பங்கும் சதுர்வேதிகளுக்கு தானங்கொடுத்த பங்குகளில் மூன்று பங்கில் ஒன்றரைபங்கு அனந்தசிவஆசாரியாருக்கும் அவருடைய சந்ததியார்க்கும், ஒன்றரைபங்கு புல்ல சருமருக்கும் அவர்சந்ததியார்க்கும் கொடுக்கும்படி யேற்பாடு செய்யப்பட்டதாக தெரியவருகின்றது.

1275 வருஷங்களுக்குமுன் ஏற்பட்டகூரம் பட்டையத்தால் பூர்வத்தில் பல்லவ அரசர்கள் தத்தம் ஆளுகையில் பிரஜைகள் விவசாயஞ்செய்து ஜீவிப்பதற்கு ஜலாதாரமும், பிரஜைகள் பக்திசெய்வதற்கும் பூசிப்பதற்கும் ஆலயங்களும், இவைபோன்றநற்காரியங்களைச் செய்திருக்கின்றதாகவேர்படுகின்றது.

பரமேஸ்வர வர்மபல்லவராயன் புத்திரன் இரண்டாவது நரசிம்மவர்ம பல்லவராயன், இவன் கி. பி. 681-ம் ஆண்டுக்குப் பின்னர் அரசுபுரிந்தவன். சைவசமயபத்தைத்தழுவியவன்; பிராமணர்களிடத்தில் விசுவாசம் வைத்தவன்; நரசிம்மவர்மன் ஆளுகைகாலத்தில் பனிரெண்டு ஆழ்வார்களிலொருவரான திருமழிசையாழ்வார் கச்சிநகரில் வசித்திருந்தார். இங்ஙனம் வசித்துவரும் காலத்தில் வயோதிகபருவ முடைய ஓர்தாசியை யவ்வனபருவம் அடையும்படி செய்தாரென்றும் இந்த அற்புதத்தைக் கேள்வியுற்ற அரசன் தன்னையும் அவ்வாறு இளமைப்பருவமாய்ச் செய்தருளவேண்டுமென்றும் வேண்டலும், ஆழ்வார் அரசன் வேண்டுகோளுக்குடன் படாமையால் மிக்க கோபங்கொண்டு ஆழ்வார் கச்சிநகரில் வசிக்கக்கூடாதென்று உத்தரவுசெய்து விட்டான். இதன் பின்னர் இவ்வாழ்வார் திருக்குடந்தையாகிய கும்பகோணம் சென்று வசித்திருந்தாரென்று சொல்லப்படுகின்றது. இவ்வாழ்வார் அருளிய பாசுரமாகிய திருவிருத்தத்திலே சைவசமயிகளுக்குப் பொருத்தமாகாத பாசுரங்களிருக்கின்றன. திருமழிசையாழ்வார் கச்சிநகரில் வசித்தகாலத்தில் சமய சம்பந்தமான கலகங்களுண்டாயிருக்கக்கூடும் ஆகையால் இவர் கச்சியிலிருக்கும் வரையில் நகரம்அமைதியா யிராதென்று நரசிம்மவர்மபல்லவராயன் கருதி மேற்படிஆழ்வாரை கச்சி நகரில் வசிக்காமல் வேறிடம் போகும்படி உத்தரவுசெய்திருக்கலாம்.

நரசிம்மவர்ம பல்லவராயன் புத்திரன் இரண்டாவது பரமேஸ்வர வர்மபல்லவன் இவ்வரசன் கி. பி. 696-ம் ஆண்டுக்குப்பின்னர்

கச்சிநகரை ஆண்டவன். வைணவசமயத்தை அனுட்டித்தவன், காஞ்சி மாநகரில் கிழண்டை ராஜவிதியின் கீழ்பாரிசத்திலுள்ள வைகுண்ட பெருமாள் ஆலயமாகிய பரமேஸ்வரவிண்ணகரத்தைக்கட்டுவித்தவன். இவன் ஆளுகையில் இவனால் கொடுக்கப்பட்டதான தருமங்கள் வேதியர் முதலியவர்களுக்கும் ஜீவாஸ்பித மாயிருப்பதாகத் தெரியவருகிறது.

பரமேஸ்வர வர்மபல்லவன் மகன் நந்தி போத்தவர்மன், இவ்வரசன் கி. பி. 733-ம் ஆண்டுக்குப்பின்னர் அரசுபுரிந்து வந்தான். இங்ஙனம் புரிந்து வரும் நாட்களில் பல்லவ அரசர்களுக்கு வம்சவிரோதிகளும் நெடுங்கால பகைவர்களுமாகிய சளுக்கியவேந்தர்களில் இரண்டாவது விக்கிரமாதித்திய பல்லபராஜன் கி. பி. 733-ம் ஆண்டுபட்டத்திற்கு வந்தான்; இவன் பகைவனாகிய நந்தி வர்மபல்லவனை ஜெயித்து வெற்றிபெற வேண்டுமென்று நால்வகை சேனைபலத்துடன் பிரயாணப்பட்டு அதிதீவிரமாய்ச்சென்று உதைகை என்னும் மகாணத்தில் தனது பகைவனாகிய நந்திபோத்த வர்மபல்லவனைச் சந்தித்தான். அவ்விடத்தில் இருதிறத்தார் சேனைகளும் எதிர்த்துச் சண்டை செய்கையில் நந்தி வர்மபல்லவன் கொல்லப்பட்டான். கொல்லப்பட்ட பின்னர் விக்கிரமாதித்திய வல்லபராஜன் வெற்றியாளனாய்க் காஞ்சியில் கெம்பீரமாய்ப் பிரவேசித்தான். இங்ஙனம் பிரவேசிக்கும்போது கச்சி நகரைக் கொள்ளை கொள்ளாமலும் பிரஜைகளுக்குத் துன்பஞ் செய்யாமலும் அமரிக்கையா யிருந்து விட்டான். விக்கிரமாதித்திய வல்லபனுக்குக் காஞ்சிமா நகரத்தின் காட்சி சிறப்பாகக் காணப்பட்டமையால் மகிழ்ச்சியடைந்து நரசிம்ம போத்தவர்மனாகிய ராஜசிம்ம வர்மபல்லவராயனால் கட்டப்பட்ட ராஜசிம்மேஸ்வர ஆலயத்தைத் தரிசித்துச் சந்தோஷமடைந்து, இம்மகா க்ஷேத்திரத்தைப் பிரபலப்படுத்த வேண்டுமென்னும் அவாவுடையவனாய், அவ்வாலயத்தின் கண்ணுள்ள சொருபங்களுக்கும் மற்றதேவதைகளுக்கும் பொற்கவசங்கள் செய்து அணிந்தான். இவ்விஷயம் ஆலயத்தின் முன்பக்கத்திலுள்ள ஓர்மண்டபத்தில் வரையப்பட்டிருக்கின்றது. "அரசர்களுக்கு அரசனாகிய விக்கிரமாதித்திய சத்தியாசரிய ஸ்ரீ பிருதிவிவல்லவன் மேலான ஆளுகையுடையவன் பிரபு" என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வரசன் காஞ்சியில் வசிக்கையில் அந்தணர்களுக்கு அளவு கடந்த தானதருமங்கள் செய்தான். இவன் காஞ்சியை விட்டு கடற்றுறைப்

பட்டணங்களாகிய மாபலிபுரம் திருமயிலை இந்த விடங்களில் சிலகாலம் வசித்து சுதேசம் சென்றான். கி பி. 733 ஆண்டிலிருந்து 747-ம் ஆண்டு வரையில் அரசுபுரிந்தானென்று அவ்வரசன் காலத்து ஏற்பட்ட சாஸனம் தெரிவிக்கின்றது.

மூன்றாவது அத்தியாயம்.

நெடுங்காலமாய்ப்பல்லவராஜ்ஜியம் பல்லவ அரசர்கள் ஆளுகையிலிருந்ததைப் பல்லவ அரசர்களுக்குப் பகைவனாகிய சளுக்கியவேந்தன் ஜெயித்து, அரசு நடத்துவதைக்கண்டு சகிப்பதற்குக்கூடாதவர்களாயிருந்தனர். இந்த சமயத்தில்,விக்கிரமாதித்தியன் கச்சிப்பதியை விட்டு அகன்றனன். பூர்வத்திலேகவுடதேசத்திலிருந்து தில்லைச்சிதம்பரத்திற்குவந்து தில்லைச்சிதம்பரத்தைப் பொன்னம்பலமாக்கிய இரணிவர்மபல்லவச்சோழன் வம்சவழியில் வந்தவனாகிய நந்தி போத்தவர்மபல்லவமல்லன் பல்லவராஜ்ஜியத்தின் ராஜதானியாகிய காஞ்சிமா நகரத்திற்குச் சக்கிரவர்த்தியானான். இவன் அதி பராக்கிரமசாலியாயும் ஜெயவீரனாயும் வைணவ சமயத்தில் அதிக பற்றுள்ளவனாயு மிருந்தான். இவன் கி. பி. 710 ஆண்டு முதல் 760 ஆண்டுவரையில் அரசு செலுத்தியவன். இவன் காஞ்சிமா நகரத்திற்கு 734-ம் ஆண்டுக்குப்பின்னர் வந்தவன். இவன் பாண்டிய அரசனையும் சோழ அரசனையும் சளுக்கியவேந்தனாகிய பிருதிவி வியாக்கிரனையும் நெல்வேலி, மண்ணைக்குடி, கரூர்முதலிய விடங்களில் நடந்த யுத்தங்களில் தோல்வியடையச் செய்தானென்று சாஸனங்கள் விளக்குகின்றன. இதற்கிணங்க இவன் மீது இவன் சகோதரனால் பாடப்பட்ட நந்திகலம் பகத்தில்.

*** செம்மியர் தென்னர் சேரரெதிர்வந்து
மாயச்செருவென்ற பாரின்முடிமேல் *** என்றும்

"ஒரு பெருங்கடல்வளைப் பரவுது மெங்கோன்
மல்லை வேந்தன் மயிலைகாவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்திக்கு
வடவரை யளவுந் தென்பொதி யளவும்
விடமுட மங்கல விசையமு நடப்ப
ஒரு பெரு தனிக்குடை நீழ
லரசுவீற்றிருக்குவனே கோவெனவே" என்றும்

நந்திபோத்தவர்ம பல்லவ மல்லன் பாராக்கிரமத்தையும் அடைந்த வெற்றிகளையும் புகழ்ந்து சொல்லப்படுகின்றது. அன்றியும் தெள்

ளாறு என்ற விடத்தில் பெரியதோர் சண்டைசெய்து வெற்றியடைந்தானென்று பாரதவெண்பா நிச்சயப்படுத்துகின்றது. 108 திருப்பதிகளில் ஒன்ருகிய நந்திபுரம் என்னும் திருப்பதியைக்கட்டுவித்தவன் இவனே. எங்ஙனமெனில் திருநந்திபுரவிண்ணகரத்தைப்பற்றி கலிக்கன்றியென்னும் திருமங்கையாழ்வார் அருளிய பாசுரத்திலே நந்திபோத்தவர்ம பல்லவமல்லனுல் செய்யப்பட்ட திருப்பணியைச் சொல்லுகின்ருர்

தந்தைமன மூந்துதுயர் நந்தவிருள் வந்தவிறல் நந்தன்மதலை
எந்தையிவ னென்றமரர் கந்தமலர் கொண்டுதொழ நின்றநகர்தான்
மந்தமுழை வோசைமழை யாகவெழு கார்மயில்க ளாடுபொழில்சூழ்
நந்திபணி செய்த நகர் நந்திபுர விண்ணகர நண்ணுமனமே.

நந்திபணி செய்தநகர் என்றமையால் நந்திபோத்தவர்மனுல் கட்டப்பட்ட திருப்பதி என்று இப்பாசுரம் தெரிவிக்கின்றது.

சிம்மகாவீரனுடைய சேனதிபதி உதயசந்திரன் என்ற பெயரையுடையவன். இச்சேனுதிபதிக்கும் பாண்டியநெடுமாறனுக்கும் திருநெல்வேலியில் ஓர் பெரியசண்டை நடந்ததாக உதயேந்திர சாஸனம் தெரிவிக்கின்றது. நந்திவர்ம பல்லவனுடைய ஜெயமானது எங்கும் பிரபலப்பட்டு வருவதைக்கண்ட பாண்டிய அரசனும் சோழராஜனும் ஒன்று சேர்ந்து பல்லவராஜ்ஜியத்திற்குப் படையெடுத்துச் சென்று, அனுபுரநகரை முற்றுகை செய்தார்கள். முற்றுகை செய்த சங்கதியைக்கேள்வியுற்ற வில்லிவல ராகுடையனை உதய சந்திரன் திரண்ட சேனபலத்துடன் அதிவிரைவிற் சென்று அனுபுரநகரில் செய்துள்ள முற்றுகையை நீக்கி, அவர்கள் யாவரையும் ஏககாலத்தில் முறியடித்து, துறத்திவிட்டான். இந்நகைய சேனுபதியையுடைய நந்திபோத்த வர்மபல்லவ மல்லனை ஆழ்வார்களிலொருவராகிய திருமங்கை மன்னன் திருவாய் மலர்ந்தருளிய பெரிய திருமொழியிலே பரமேஸ்வர விண்ணகரத்தைப் பாடும் பதிகத்தில்:

சொல்லுவன் சொற்பொருள் தானவையாய்ச்
சுவையூறொலி நாற்றமுந் தோற்றமுமாய்
நல்லரன் நாரணன் நான்முகனுக் கிடந்தான்
தடஞ்சூழ்ந் தழகா யகச்சி
பல்லவன் வில்லவனென் றுலகிற் பலராய்ப்
பலவேந்தர் வணங்கு கழல்
பல்லவன் மல்லையர் கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகர மதுவே.

திருமங்கையாழ்வார் நந்தி வர்மபல்லவ மல்லனைப் பலவேந்தர் வணங்குகழல் என்றமையால் இவனது ஆளுகை மகாசிறப்புற்றிருந்த தென்பதற்குச் சந்தேகமில்லை. திருமங்கை ஆழ்வார் வசித்த காலத்தில் இவ்வரசன் மகாபிரபலமாக அரசுசெலுத்தியவனென்று அவர் அருளிய பாசுரம் விளக்குகின்றது. இதுவன்றியும் பாரதம் பாடிய பெருந்தேவனார் கட்டுரை.

"பல்லவர் கோமான் பண்டிதராலயனைப் பரவினேம்"

வண்மையாற் கல்வியால் மாபலத்தா லாள்வினையா
லுண்மையாற் பாரா ளுரிமையால் - திண்மையால்
*தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோடு
யார்வேந்த ரேற்பா ரெதிர்.

தெள்ளாறு என்பது திண்டிவனத்திற்கு வடமேற்கே 15 மையிலிலுள்ளது. இது வெண்குன்றக்கோட்டத்தில் சேர்ந்த நாடுகளிலொன்று; தெள்ளாற்றில் நந்திபோத்தவர்மபல்லவ மல்லனென்பவன் தனது பகைவர்களைத் தோல்வியடையச்செய்துவெற்றிபெற்றமையால் தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றான் என்று பெருந்தேவனார் உறுதிப்படுத்திக் கூறியிருக்கின்றார். இவன் தமயனால் பாடப்பட்ட நந்திகலம்பகத்திலும் இவனது பராக்கிரமத்தை "வடவரையளவும் தென்பொதியளவும் விடைமுடமங்கல விஜயமும் நடப்ப" "என்றும் திருமங்கையாழ்வார் பல்லவன் வில்லவன்" என்றும் "பலவேந்தர் வணங்குகழல்" என்றும் "பல்லவன் மல்லையர் கோன்" (கச்சிநகரின் அரசன்) என்பும் இவைபோன்ற பிரமாணங்கள் பல்லவ மல்லன் ஆளுகையின் சிறப்பை விசேஷித்துக் கூறுகின்றன. பரமேஸ்வர ஆலயத்தின் சுவர்களிலிருக்கும் சாஸனங்கள் ஒன்றில் "பரமேஸ்வர கிருத" வென்னும் கெற்பகிரக தாழ்வாரத்தின் சுவர்களிலுள்ள சாஸனம் ஒன்றில் நந்திபோத்த வர்மபல்லவ மல்லனுடைய மரண காலத்தையும் சொல்லப்பட்டிருக்கின்றது.

நந்திபோத்த வர்மபல்லவ மல்லனுக்குப் பின்னர் கி. பி. 785-ம் ஆண்டு எமசித்தால வர்மபல்லவன் காஞ்சியை ஆண்டானென்று

* "தெவ்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானே டெவ்வேந்த ரேற்பாரெதிர்" என்றும் பாடபேதமுண்டு.

சொல்லப்படுகின்றது. இவன் பௌத்தசமயத்தைத் தழுவியிருந்தான். காஞ்சிபுரத்திற்குத்தெற்கேயுள்ள திருவோத்தூர் சமீபத்திலிருக்கும் போனதாகாவென்னுமிடத்தில் பௌத்தர்களால் சர்வகலாசாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அக்காலாசாலைக்குச் சமணமதத்தை அனுசரித்தவனாகிய அகளங்கன் என்பவர் உபாத்தியாயராயிருந்தார். எமசித்தாலப்பல்லவன் தன் முன்னிலையில் கி-பி. 788-ம்வருஷம் பௌத்தசமயத்தவர்கள் கலகம்செய்தமையால் பௌத்தர்களையெல்லாம் இலங்கைக்குத்துரத்திவிட்டுத் தான் சமணசமயத்தைக் கைக்கொண்டான். பல்லவராஜ்ஜியத்தில் பௌத்தசமத்தைத் தழுவிகடைசியாக அரசியற்றியவன் இவனேயாகும். இவனுக்குப்பின் பௌத்தசமய பல்லவவரசர் காஞ்சியில் அரசாளவில்லையென்று தெரிகின்றது. இதற்கு நெடுநாளைக்குமுன் கச்சிநகரை ஆண்ட பல்லவ அரசர்கள் சைவசமயத்தையும் வைணவசமயத்தையும் பௌத்தசமயத்தையும் சமணசமயத்தையும் தழுவியிருந்தார்கள். காஞ்சியில் சமயசம்பந்தமான கலகங்கள் ஒவ்வொருகால் நடந்ததாகச் சொல்லப்படுகின்றது.

இவ்வரசன் ஆளுகைக்குப்பின் பல்லவராஜ்ஜியத்தைப் பல்லவ அரசர்கள் ஏறக்குறைய முந்நூறு வருஷம் ராஜ்ஜியபாரம் செய்தார்களென்று பல ஆதாரங்களால் யூகித்தல்கூடும். நந்திவர்ம பல்லவ மல்லனுக்கு முன் சில பல்லவ அரசர்கள் காஞ்சியை ஆண்டவர்களென்று அவ்வரசர் காலத்தில் ஏற்பட்ட ஏரிகளின் பெயரால் தெரியவருகின்றது. எங்ஙனமெனில் காஞ்சிபுரத்திற்குக்கிழக்க பத்துமயில் தூரத்திலுள்ளதும் ஊற்றுக்காட்டுக் கோட்டத்திற்குச் சமீபமாயுள்ளதுமாகிய தென்னேரி என்பது திரையன் என்னும் பல்லவனால் கட்டப்பட்ட ஏரி. திரையன் ஏரி என்று வழங்கியது பின்மருவி தென்னேரியென்று சொல்லப்பட்டு வருகின்றது. திரையவர்ம பல்லவனால் கட்டப்பட்ட ஏரியைப்பற்றி நந்திபோத்த வர்மபல்லவ மல்லன் ஆளுகையிலேற்பட்ட சாஸனத்தில் கூறப்பட்டிருப்பதால் இவன் அரசாட்சிக்கு முன் திரையவர்ம பல்லவன் கச்சிநகரை ஆண்டதாக விசிதமாகின்றது. இதுவன்றியும் உத்தரமேரூர் ஏரி வைரமேக தடாகமென்று சொல்லப்படும். நந்தி போத்தவர்மபல்லவ மல்லன் ஆளுகையின் 9-வது வருஷத்திலேற்பட்ட சாஸனத்தில் அவ்வேரியின் சேற்றைவாரி சுத்தப்படுத்துவதற்காக ஓர் குடித்தனக்காரனுக்குக்

கூலியாக ஓர் சன்மானம் சாஸனத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றது, இதனால் வைரமேக வர்ம பல்லவன் ஒருவன் காஞ்சியை யாண்டவனென்றும் அவன் ஆளுகையில் உத்தரமேரூர் ஏரிகட்டப்பட்டதென்றும் தெரிகின்றது. காஞ்சிபுரத்திற்குத்தெற்கே ஐந்துமைல்தூரத்தில் மாமண்டூர் ஏரியிருக்கின்றது. இவ்வேரி சித்ரமேகதடாகமென்றுசொல்லப்படும். இத்தடாகத்தின் கரையின் மலைப்பாறையில் பஞ்சபாண்டவர்களின் சொருபங்கள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது. இது வன்றியும் தடாகத்தின் சமீபத்திலுள்ள மலைக்குகையில் நான்கு ஸ்தம்பங்களிருக்கின்றன. மலைப்பாறையின் மேற்பரப்பில் பெரிய சாஸனங்கள் பல்லவ கிரந்த எழுத்தினால் வரையப்பட்டிருக்கின்றதால் சித்ரமேக தடாகம் சித்திரமேகவர்மனால் கட்டப்பட்டதென்றும் அவன் காஞ்சி மாநகரத்தையாண்டவனென்றும் யூகிக்கலாகும்.

பல்லவ அரசர் ஆளுகை செய்தகாலத்தில் ஆலயங்களும் மலைக்கோட்டைகளும் தடாகங்களும் பல்லவராஜ்ஜியத்தில் பற்பலவிடங்களில் அவ்வவ்வரசர்களால் கட்டப்பட்டிருக்கின்றன. காஞ்சி புறத்திற்குக் கிழக்கே முப்பது மயில்தூரத்திலுள்ள மாபலிபுரம்(மகாமல்லபுரம்) பல்லவ அரசர்களுக்குக் கடல்துரைப்பட்டணமாயிருந்தது. இப்பட்டணம் 7-வது 8-வது நூற்றூண்டுகளில் மிக்கசிறப்புடையதா யிருந்தது; இவ்விடத்திலுள்ள மலைப்பாறைகளிலும் இதை யடுத்தவிடங்களிலும் கருங்கற்களில் சித்திரிக்கப்பட்ட வேலைகளின் திறமையைக்கண்டு யாவரும் மெச்சத்தகுந்ததும் ஆச்சரியப்படக் கூடியது மாயிருக்கின்றது. இங்கு பஞ்சபாண்டவர்கள் வாசம்பண்ணிய பாவனையாகப் பாறைகளின்மீது அனேக பதுமைகள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இவையன்றியும் ஐந்து பெரிய ரதங்கள் கருங்கல்லில் செய்யப்பட்டிருக்கின்றன. பல்லவ அரசர்களுக்கு இது கடல்துரை பட்டணமாயிருந்த காலத்தில் ஜாவா, சுமத்திரா, சீனு, ஜபான் முதலிய விடங்களிலிருந்து வியாபார சம்பந்தமாய் வரும் கப்பல்கள் தங்குவதற்கு வசதியான விடமாயிருந்தமையால் வியாபார விருத்தி யதிகமா யிருந்ததாக சொல்லப்படுகின்றது. இவ்வளவு மாட்சிமைப்பட்ட பட்டணமானது கடல் பெருக்கால் அழிவுபட்டது. கடலில் அடிக்கும் அலைமாத்திரியிலிருக்கும் விக்கிரகத்தால் அவ்விடத்தில் ஆலயமிருந்ததென்று நிச்சயமாகின்றது. பல்லவ அரசர் ஆளுகையிலேற்பட்ட சாஸனங்கள் அனேக மிருக்கின்றன. இவைகள் 5-7-8-9-11-ம் நூற்றூண்டுகளில்

வரையப்பட்டவைகளாம். க்ஷத்திரிய சிம்ம வர்மபல்லவனால் கட்டப்பட்ட க்ஷத்திரிய சிம்மபல்லவேஸ்வர ஆலயமிருக்கின்றது. இது போலவே திரிசிராப்பள்ளி, பனைமலை, திருமலை, கடலாடி முதலியமலைகளிலுள்ள கோயில்களும் மண்டபங்களும் பெரும்பாலும் பல்லவர் ஆளுகையிலேற்பட்டவை.

நிரையவர்மபல்லவன் வைரமேகவர்ம பல்லவன் சித்திரமேகவர்மபல்லவன் இவர்களால் கட்டப்பட்ட தடாகங்களைக்கொண்டும் நந்திபோத்தவர்மபல்லவன் ஆளுகை காலத்திலேற்பட்ட சாஸனங்களைக்கொண்டும் இவர்கள் காஞ்சியை ஆண்டவர்களென்று நிச்சயப்படுத்தலாம்.

சிவனடியார்களைப்பற்றி அருண்மொழித்தேவராகிய சேக்கிழாரால் பெரியபுராணம் செய்யப்பட்டது. கி. பி. 1063 முதல் பி.கி. 1112 வரை அரசாண்ட அனபாயச்சோழப்பல்லவனென்றும் இராஜகேசரிவர்மனென்றும் பெயருள்ள முதலாவது குலோத்துங்கன் காலத்து எழுதப்பட்டிருக்கின்றது. இப்புராணம் அனபாயச் சோழன் முன்னிலையில், சிதம்பரம் நடராஜர் சன்னிதியில் சேக்கிழாரால் அரங்கேற்றப்பட்டது. இப்புராணத்தை அரங்கேற்றிய பின்னர் அனபாயச்சோழப்பல்லவன் அவருடையபக்திவிசுவாசங்களையும் கல்வியின் வல்லபத்தையும் புகழ்ந்து அவருக்கு உத்தமசோழப்பல்லவன் என்ற பட்டத்தைக் கொடுத்தான்.

சேக்கிழார் புராணம் 8-வது செய்யுள்

அத்தகையபுகழ் வேளாண்மரபிற் சேக்கி
　　ழார்குடியில்வந்தவருண் மொழித்தேவர்க்குத்
தத்துப்பரிவளவனுந்தன் செங்கோலோச்சுந்
　　தலைமையளித்தவர் தமக்குத் தனதுபேரு
முத்தமச்சோழப் பல்லவன்றானென்று
　　முயர்பட்டங் கொடுத்திட வாங்கவர் சீர்நாட்டு
நித்தனுறை திருநாகேச்சுரத்திலன்பு
　　நிறைதலினான் மறவாத நிலைமைமிக்கார்

அனபாயச் சோழப்பல்லவன் புராணஞ் செய்து அதை அரங்கேற்றிய சேக்கிழாருக்கு உத்தம என்ற சொல்லைச்சேர்த்து உத்தம சோழப்பல்லவன் என்ற உயர்பட்டத்தை அளித்ததாகசொல்லப்படுகின்றது.

ஆயினமையின் பெரியபுராணம் 848 - வருஷங்களுக்கு முன் செய்யப்பட்டதாகத் தோன்றுகின்றது. இதில் காஞ்சிமாநகரத்தை அரசாண்ட பல்லவ அரசர்களாகிய ஐயடிகள் காடவர்கோன், கழற்சிங்கர் இந்நாயன்மார்களின் சரித்திரங்கள்சொல்லப்பட்டிருக்கின்றன.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்புராணம்முதல் செய்யுள்

வையநிகழ்பல்லவர்தங் குலமரபின் வழித்தோன்றி
வெய்யகலியும்பகையு மிகையொழுகும் வகையடக்கி
செய்யசடையவர் சைவத்திருநெறியா லரசளிப்பார்
ஐயடிகணீதியா லடிப்படுத்துஞ் செங்கோலார்.

ஐயடிகள் காடவர்கோன் பல்லவ அரசர்மரபில் வந்தவர்; இவர் கச்சிநகரை யாண்டுவருநாளில் இம்மை மறுமையின்பங்களையும் முத்தியையும் எவ்வுயிரும் அடையவேண்டுமென்னும் அவாவுடையவராய் அன்னிய தேசங்களைத்தமக்கு ஆதினப்படுத்தி சைவசமயம் தழைத்தோங்கவும் அரசர்கள் பணி செய்யவும் அரசு நடாத்திவந்தாரென்று சொல்லப்படுகின்றது. அன்றியும்

கழற்சிங்கநாயனார் புராணம்முதல் செய்யுள்
படிமிசைநிகழ்ந்ததொல்லை பல்லவகுலத்து வந்தார்
கடிமதின்மூன்றுஞ்செற்ற கங்கைவார் சடையார்செய்ய
அடிமலரன்றிவே றொன்றறிவினுட் குறியாநீர்மைக்
கொடிநெடுந் தானைமன்னர் கோகழற்சிங்கரென்பார்.

காடவர்குரிசிலாராங் கழற்பெருஞ் சிங்கர்தாமு
மாடகமேருவில்லா ரருளினாலமரிற்சென்று
கூடலர்முனைகள்சாய வடபுலங்கவர்ந்து கொண்டு
நாடருநெறியில்வைக நன்னெறி வளர்க்கும்நாளில்.

காடவர்குலத்திலே தோன்றிய பல்லவ அரசராகிய கழற்சிங்க நாயனார் சிவபிரான் திருவருள் மகிமையால் வடதேசத்து அரசர்களைப் போரில் வென்று அவர்களது நாடுகளை ஜெயித்து சைவசமயந்தழைத்தோங்கும்படி அரசாண்டார்,

இதுவன்றியும் ஷை புராணம் பூசலார் புராணம் காஞ்சிபுரத்திலே பல்லவவம்சத்திலே தோன்றிய காடவராஜன் ஒரு சிவாலயங் கட்டுவித்தான். அதைப் பிரதிட்டைசெய்ய நிச்சயித்த சுபதினத்துக்கு முன்தினத்திலே பரமசிவன் பூசலார் அன்பை விளக்கும்

பொருட்டு காடவராஜனுக்குச் சொர்ப்பனத்திலே தோன்றி "நின்ற வூரில் இருக்கின்ற பூசலென்பவன் நமக்கு ஒருகோயில்கட்டி யிருக்கின்றான்; அதிலே நாளைக்குநாம் போவோம், உன்கோயில் பிரதிட்டையை நாளைக்குப்பின்வைத்துக்கொள்வாய்" என்று அருளிச்செய்து மறைந்தனர்.

பூசலார்நாயனார் புராணம் 9-வதுசெய்யுள்

காடவர்கோமான் கச்சிக்கற்றளியெடுத்து முற்ற
மாடலாஞ்சிவனுக்காகப் பெருஞ்செல்வம் வருத்தல்செய்வா
னாடமாலறியாதாரைத் தாபிக்கு மந்நாள்முன்னா
ளேடலர்கொன்றை வேய்ந்தாரிரவிடைக் கனவிலெய்தி

இச்செய்யுளால் காஞ்சியில் அரசுபுரிந்த பல்லவராயன் அன்பின் மிகுதியால் சிவபெருமானுக்கு ஒரு கோயில் கட்டிவைத்ததாகத் தெரிய வருகின்றது. இராஜசிம்ம பல்லவேஸ்வரம் பரமேஸ்வர விண்ணகரம் முதலிய கோயில்களைப்போல் பெயரையும் இடத்தையும் குறிக்காவிட்டாலும் காஞ்சியிலுள்ள பல சிவாலயங்களில் இதுவும் ஒன்றாம். இதுபோலவே காஞ்சியில் சிவக்ஷேத்திரங்களும் விஷ்ணு க்ஷேத்திரங்களும் பெரிய புராணஞ்செய்த செக்கிழார் காலத்திற்கும் அதற்குமுன்மூவர் காலத்திற்கும் வெகுநாளைக்குமுன்னரே பல்லவராயர்களால் கட்டப்பட்டிருக்கின்றன.

இப்பல்லவ அரசர்களைப்பற்றி சுந்தரமூர்த்திநாயனார் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகையில் சொல்லபட்டிருத்தலால் இந்நாயனார் காலத்திற்குமுந்தி இவர்கள் காஞ்சியில் அரசுபுரிந்தவர்களென்று கொள்ளவேண்டியது. சுந்தரமூர்த்திநாயனார் வரகுண பாண்டியனும் விஜயாலயனும் பாண்டிய நாட்டையும் சோழநாட்டையும் அரசுபுரிந்த காலத்திலிருந்தவர்; இவர்கள் கி. பி. 850-ம் ஆண்டில் அரசியற்றியவர்கள் என்று சாஸனங்கள்தெரிவிக்கின்றன.

சுந்தரமூர்த்தி நாயனார் பற்பலக்ஷேத்திரங்களைத் தரிசித்துப் பதிகங்கள்பாடி வரும்போது சிதம்பரக்ஷேத்திரத்திற்கு விஜயஞ்செய்து அங்குபாடியகோயிற் பத்து 4-வது தேவாரத்திலே

ஒருமையாந் தருமனார் தமர்நம்மைச்சங்கிய கட்டறுப்பிப் பானை
யருமை யாந்தன்னுலகந் தருவானை மண்ணுலகங் காவல்பூண்ட
வுருமையாற் பல்லவர்க்குத்திறை கொடா மன்னவரை மறுக்கஞ்செய்யும்
பெருமையாற் புலியூர்ச்சிற் றம்பலத் தெம்பெருமானைப் பெற்றாமன்றே

இத்தேவாரத்தில் மண்ணுலகம் காவல்பூண்ட உரிமையால் பல்லவர்க்குத் திறைகொடாமன்னவரை மறுக்கஞ்செய்யும் என்பதில் திறை (பகுதி) கொடாமன்னவர் பாண்டிய அரசனும் சோழஅரசனுமாம்; இவர்கள் பல்லவ அரசர்களுக்கு திறை செலுத்திவந்தவர்கள். இவ்விரு அரசர்களும் ஒன்று சேர்ந்து தாங்கள் செலுத்திவந்த வரியிறையைக்கட்டாமல் நிறுத்தி விட்டமையால் தேசத்தில் குழப்பமுண்டாயிருக்குங்காலத்தில் பாண்டிய அரசனும் சோழ அரசனும் பல்லவ அரசர்களின் அதிகாரத்திலிருந்து விலகிக்கொண்டார்கள். இச்சம்பவம் கி. பி. 850-ம் ஆண்டுக்குமேல் நடந்ததாகத்தெரியவருகின்றது. சுந்தர மூர்த்திநயனார் காஞ்சிமாநகரத்திற்கு விஜயஞ்செய்தபோது திருமேற்றளி க்ஷேத்திரத்தைக்குறித்துப் பாடியபதிகம் 10-வது தேவாரம்.

பாரூர்பல்லவனூர் மதிற்காஞ்சி மாநகர்வாய்ச்
சீரூரும்புறவித் திருமேற் றளிச்சிவனை
யாரூரன்னடியா னடித்தொண்ட னூரூரன்சொன்ன
சீரூர்பாடல்வல்லார் சிவலோகஞ் சேர்வாரே.

காஞ்சியில் சுந்தரமூர்த்திநாயனார் விஜயஞ்செய்த காலத்தில் பல்லவர் அரசாட்சி நிலைபெற்றிருந்ததாக இத்தேவாரம் தெரிவிக்கின்றது. கி. பி. 850 ஆண்டு பின்னர் பல்லவ அரசர் ஆளுகை காஞ்சியில் 200 வருஷம் வரையிலுமிருந்ததென்று பலபிரமாணங்களால் தெரியவருகின்றது; இதற்கு இடையில் அரசு ஆண்ட பல்லவ அரசர்களின் பெயர்கள் இன்னின்னரென்று வெளிப்படவில்லை.

4-வது அத்தியாயம்.

இந்த அத்தியாயம் தொண்டமண்டலமாகிய பல்லவராஜ்ஜியம் படிப்படியாக சோழராஜ்ஜியத்திற்கு ஆதினப்பட்டு, ஜெயங்கொண்ட சோழமண்டலமென்னும் பெயர்பெற்று பல்லவச்சோழர் ஆளுகையின் விசேடத்தைத் தெரிவிக்கின்றது.

பத்தாம் நூற்றாண்டின் அந்தியத்திலும் பதினோராம் நூற்றாண்டிலும் கங்கைகொண்ட சோழபுரம் சோழராஜ்ஜியத்திற்கு இராஜதானியாக விருந்தது. விஜயாலய சோழனுக்குப்பின்வந்த சோழ அரசர்கள் இவரில் கடைசியாக ஆண்டவன் முதலாவது ராஜராஜசோழன்

இவன் 895 - ம் ஆண்டில் சிம்மாசனமேறியவன். இவன் தன் ஆளுகை பிரபலப்பட்டுவரும் நாட்களில் பல்லவராஜ்ஜியத்தின் தென் பாரிசத்திலுள்ள நாட்டையுங்கவர்ந்து கொண்டானென்று அடியில் வரும் சாஸனம் தெரிவிக்கின்றது.

உக்கல் கிராமத்தின் சமீபத்துப் பெருமாள் ஆலயத்தின் மேல் பாரிசமதிலிலுள்ள சாஸனம்.

× × × ஸ்ரீ கோவிராஜ கேசரிவர்மரான ஸ்ரீ ராஜராஜ தேவற்கு யாண்டு 29-வது ஜயங்கொண்ட சோழமண்டலத்துக்கலியூர் கோட்டத்துத்தனியூர் உக்கலாகிய ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதிமங்கலத்தின் மேலைப்பெருவழியில் ஸ்ரீ ராஜராஜ தேவர்திரு நாமத்தால்கிணறுங்கொட்டியும் சமைப்பித்தான் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் பணிமகன் சோழமண்டலத்து தென்கரைநாட்டு நித்தாவினோதவளநாட்டு ஆவூர்கூத்தத்து ஆவூருடையான் கண்ணனாரூரன் × × ×

இச்சாஸனம் ராஜராஜ தேவசோழனுடைய வேலைக்காரன் தன்னுடைய அரசன் பெயரால் மேலைப்பெருவழியில் கிணறும் தொட்டியும் தருமத்திற்குக் கட்டிவைத்ததைத் தெரிவிக்கின்றது. தொண்டமண்டல கோட்டங்கள் 24-ல் கலியூர் கோட்டமும் ஒன்று. ராஜராஜ சோழன் சிம்மாஸனமேறிய 29-ம் ஆண்டில் அதாவது கி. பி. 1014ல் இச்சாஸனமேற்பட்டது. இவ்வரசன் ஆளுகையிலிருந்து பல்லவர் அரசாட்சி படிப்படியாய்க்குறைந்து விட்டது.

ராஜராஜ சோழன் குமாரன் ராஜேந்திரசோழன் இவன் கி. பி. 1012-ம் ஆண்டு அரசாளத்தொடங்கியவன். இவன் ஆளுகையிலே மணிமங்கலம் பெருமாள் ஆலயத்தின் உட்பிரகாரத்தில் கீழண்டை மதிலிலுள்ள சாஸனமாவது.

× + × மாபெரும் புகழ்வளர்த்த கோப்பரிகேசரிவர்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திரதேவர்க்கு யாண்டு நாலாவது நாள் அயிஉஜயங்கொண்ட சோழமண்டலத்து செங்காட்டுக்கோட்டத்து மாகணூர் நாட்டு ராஜசூளாமணிச் சதுர்வேதிமங்கலத்து சபையோம் + + +

இது இராஜேந்திரசோழன் ஆளுகையின் 4 - வது ஆண்டிலேற்பட்டது, ஜயங்கொண்ட பிரமாதிராயரின் தாயார் காமக்கவ்வையென்பவள் அம்மணம்பாக்கம் என்னும்கிராமத்தில் ஸ்ரீகாமக்கோட்டி

விண்ணகரான ஆழ்வார்க்கு நிலம்வாங்கிவிட்டதை தெரிவிக்கின்றது. இதனால் செங்காட்டுகோட்டமும் ஜெயங்கொண்ட சோழமண்டலமென்று அழைக்கப்பட்டதாக தெரிகின்றது.

இராஜேந்திர சோழதேவன் குமாரர்கள் ராஜாதிராஜா ராஜேந்திரதேவன் வீரராஜேந்திரன் இவர்கள் முறையே கி. பி. 1018 1053 1062 ஆண்டுகளில் சோழ அரசர்களால் ஜெயிக்கப்பட்ட நாடுகளை ஆங்காங்கு பிரதிநிதிகளாகவிருந்து அரசியற்றியவர்கள். மணிமங்கலம், உக்கல், மேல்பாடி, திருவல்லம், கரூர்முதலியவிடங்களிலுள்ள சாஸனங்கள் இவர்கள்பெயராலேற்பட்டன.

முதலாவது குலோத்துங்கசோழன் பிறப்பின் வரலாற்றையும் அவனது ஆளுகையிலேற்பட்ட சாஸனங்களின் கருத்துக்களையும் தழுவிச்சுருக்கி எழுதுகின்றோம்:—

சளுக்கியவம்ச புருஷனுக்கும் பல்லவ வம்சராஜஸ்திரிக்கும் உற்பவித்தவன் 2-வது விஜயாதித்தன். இவனுடைய வம்சவழியில் வந்தவன் விமலாதித்தன் இவன் கி. பி. 1011-ம் ஆண்டில் சிம்மாசனமேறி அரசுசெலுத்திவரும் காலத்தில், சோழராஜ்ஜியத்திற்கு அரசனாகிய ராஜராஜசோழன் புத்திரியும் ராஜேந்திரசோழன் சகோதரியுமாகிய காந்தவா என்னும் சூரியவம்ச ராஜஸ்திரியைச் சந்திரவம்சத்துச் சளுக்கியவேந்தனாகிய விமலாதித்தன் விவாகஞ்செய்து கொண்டான். இவ்விருவருக்கும் உற்பவித்தவன் முதலாவது குலோத்துங்கசோழன் சளுக்கியவேந்தனாகிய (இவன் தந்தை) விமலாதித்தனிடம் வசிக்காமல் ராஜேந்திரசோழனுக்குச் சுவீகாரபுத்திரனானான். இவனுடைய கீர்த்தி வெற்றி முதலியவற்றைப்பற்றி அக்காலத்திலோ அல்லது அதற்குச்சற்று பிற்காலத்திலோ விருந்த ஜெயங்கொண்டானென்பவனால் இவன்மீது பாடப்பட்ட கலிங்கத்துப்பரணியிலே

> திங்களிளங்குழவி செம்மலிவ னென்றுஞ்
> செய்யபரி திக்குழவியை யனிவனென்றுந்
> தங்களின்மகிழுந் திருகுலத்தரசர் தாமுந்
> தனித்தனியுவப்பதோர் தவப்பயனுமொத்தே"

என்றுகூறப்பட்டுளது. இச்செய்யுளின்கருத்தாவது, குலோத்துங்கசோழனைத் தந்தைவம்சத்தவர்கள் சந்திரவம்சத்தில் வந்தவன் என்றும், தாய்வம்சத்தில் வந்தவர்கள் சூரியவம்சத்தில் உற்பவித்தவனெ

ன்றும் தனித்தனி மகிழ்ந்து சொல்லிக்கொள்வார்கள் என்பதாம். குலோத்துங்கசோழன் கல்வி முதலியவைகளில் பயின்று யுக்தவயதை யடைந்தகாலத்தில் ராஜரீகதந்திரத்திலும் பகைவர்களை யடக்கியாளும் தன்மையிலும் மகாசமர்த்தனாக விருந்தான். இத்தகைய குணங்களை யுடைய குலோத்துங்கன் தன்பாட்டனால் முதலாவது ராஜேந்திரசோழனுக்குச் சுவிகாரபுத்திரனாக ஏற்பாடு செய்யப்பட்டான். ராஜேந்திரசோழனுக்குச் சந்ததியில்லாமையால் அவ்வாறு செய்யப்பட்டதென்று சொல்லப்படுகின்றது. குலோத்துங்கசோழன் கி.பி. 1064ம் ஆண்டிலே அரசாளத்தொடங்கினான். இங்ஙனம் தொடங்கியபோதிலும் அவனதுபட்டாபிஷேகம் 1079-ம் ஆண்டில் நடைபெற்றது. இவனது மனைவியின் பெயர்மதுராந்தகி, இவனது ராஜதானிகங்கை கொண்ட சோழபுரம்; இவன் சிலவருஷம் அந்நகரில் வசித்துப்பின்னர் காஞ்சிமாநகரத்தில் ஓர்பெரிய ராஜமாளிகை அமைத்து அம்மாளிகையில்தானும் தன்மனைவியும்வசித்திருந்தார்களென்பதாக சிலாசாஸனங்கள் தெரிவிக்கின்றன. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலின் கெர்ப்பகிரகத்தில்இச்சோழன் அரசுக்குவந்த13-வதுஆண்டிலே(கி.பி. 1077) வரைந்துள்ள சாஸனத்தில் பள்ளிகொண்ட பாஞ்சநிதிவாணனை ராஜேந்திர பல்லவராயன் என்றும், கோவிராஜ சக்கிரவர்த்திகளாகிய குலோத்துங்க சோழனென்றும், இவன் மனைவியின் பெயர் லோகமாதேவியென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவன் மனைவி இராஜேந்திரசோழன் புத்திரியாகிய மதுராந்தகியைப் புவனமுழுதுடையாள் என்றும் அவனி முழுதுடையாள் என்றும் பட்டயங்களில் வரையப்பட்டிருக்கின்றது. இவனுக்கு ஏழுபுத்திரர்களிருந்தார்கள். தீனசிந்தாமணி, ஏழிசைவல்லபி என்பர்வகள் குலோத்துங்க சோழன் மனைவிகளென்று திருவிடைமருதூர் பட்டயம் கூறுகின்றது அதுவருமாறு.

+ + + பார்தொழ சிவனிடத்துமைமெனத் தீனசிந்தாமணி புவனமுழுதுடையாளிருப்ப அவளுடன் கங்கை வீற்றிருந்தெனை மங்கையர் திலதம் ஏழிசைவல்லபி ஏழுலகமுடையாள் அமர்ந்தினிதிருப்ப ஊழியும் திருமாலாகத்துப் பிரியாதென்ற திருமகள் திகழெனத்தியாகவல்லித்தம் உலகுடையாளிருப்ப மாவினில் புவனமுழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோவிராஜ கேசரிவர்மரான சக்கிரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்க்குயாண்டு உசு ஆவது + +

என்று சொல்லப்படுவதால் மதுராந்தகியல்லாத இருவர் மனைவிகளிருந்தார்களென்று இதனால் தெரிகின்றது. காஞ்சிமாபுரத்திலே உலகளந்தபெருமாள் கோயில், அருளாள (வரதராஜப்) பெருமாள் கோயில், விளக்கொளிபெருமாள் கோயில், கைலாசநாதர்கோயில், முதலிய விடங்களிலுள்ள சாஸனங்கள் குலோத்துங்கசோழன் ஆளுகையின் விசேஷங்களையும் வல்லமைகளையும் பலவாறு புகழ்ந்துபேசுகின்றன. இவையன்றி பல்லவராஜ்ஜியத்தின் பலகோட்டங்களிலிருக்கும் ஆலயங்களில் வரையப்பட்ட சாஸனங்களை யெடுத்துக்காட்டுவாம்.

சென்னையையடுத்த திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் ஆலயத்தில் முதல் பிரகாரத்தின் தென்மேற்கு தெற்கு மதில்களில் வரைந்திருக்கும் பட்டயமாவது.

+ + + குலமணிமகுடம் முறைமையில் சூடித் தன்கழல் தராதிபர் சூடச்செங்கோல் நாவலம் புவிதோறும் நடாத்திய கோவிராஜவர்மரான ஸ்ரீராஜேந்திர சோழதேவற்கு இரண்டாவது ஜயங்கொண்டசோழ மண்டலத்துப்புழற்கோட்டத்துப்புயல் நாட்டுத்திருவொற்றியூர் உடையார்கோயிலில் காரணை விடங்கதேவர் திருச்சாந்தாடவேண்டும் நிவந்தங்களுககு சேனாதிபதிகள் சோழமண்டலத்து உய்யக்கொண்டார் வளநாட்டு திரைமூர்நாட்டு நாடார் கீழார் ராஜராஜன் பரநிருப ராக்ஷஸ நாராயன வீரசோழ இளங்கோவேளார் இத்தேவர்பண்டாரத்து ஒடுக்கின அன்றாடு நற்காசு இருநூற்று நாற்பது+ +

இப்பட்டயம் வீரசோழ இளங்கோவேளார் 240 காசு ஆலயத்திற்கு மூலதனமாக வைத்ததைத்தெரிவிக்கின்றது. வீரசோழ வேளார் சேனாதிபதி உய்யக்கொண்டார் வளநாட்டு நாடார் என்று கண்டிருப்பதால் புழல்கோட்டத்திற்கு அதிபதியாகிய ஓர் சிற்றரசன் என்று இதனால் தெரியவருகின்றது.

திருவாலங்காடு காஞ்சி புரத்திற்கு வடக்கே சுமார் 30 மயில் தூரத்திலிருக்கின்றது. இங்குள்ள ஆலயத்தின் இரண்டாவது பிரகாரத்தின் கீழண்டை மதிலில் வரைந்துள்ள பட்டையமாவது.

+ + + கோவிராஜகேசரிவர்மரான உடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவற்கு யாண்டு இரண்டாவது ஜயங்கொண்ட சோழமண்ட

லத்து மணையிற்கோட்டத்து புரைசைநாட்டுச் சிவபுரத்துப்பகலிருக்கையில் திருவமுது செய்தருளாயிருந்து மென்மலை பழையனூர் திருவாலங்காடுடைய மகாதேவர்க்கு இவ்வூர் நிலத்திலே ராஜேந்திர சோழப்பாடி யென்னும் பெயரால் இருபத்தைஞ்சு சங்கரபாடி குடியேற்றிபதினஞ்சு திருநந்தாவிளக்குக்குவேண்டும் எண்ணையட்டி எரிக்கப்பண்ணவேண்டுமென்று நங்கன்மிகளில் வீரசோழபல்லவரையன் நமக்குச் சொன்னமையில் இருபத்தஞ்சு சங்கரிபாடி குடியும் இத்தேவர்க்கு திருவிளக்கு எண்ணெயட்டகடவார்களாக நாமே குடுத்தோமென்று திருமந்திரவோலை அருமொழி விழுப்பரையர் எழுத்தினாற்புகுந்த திருவாய்க்கேழ்விப்படி இத்தருமத்துக்கு அழிவுசெய்வார் திருவாணைமறுத்தாரென்று கல்வெட்டுகவென் அதிகாரிசள் நாங்கொற்றக்கடம்பன்ஏவ இரங்கநாரான வீரசோழபல்லவரையர் + + +

திருவொற்றியூர் பட்டயமும் திருவாலங்காட்டுப் பட்டயமும் ராஜேந்திரசோழப்பல்லவனாகிய குலோத்துங்க சோழன் ஆளுகை 2-வது ஆண்டில் (கி. பி. 1066-ல்) ஏற்பட்டன. இவ்வரசனுடைய ராஜகாரிய நிர்வாகியாகிய வீரசோழபல்லவரையனுக்கு அனுப்பிய உத்தரவுபடி திருவாலங்காட்டு நிலத்தில் சங்கரபாடியிலிருக்கும் 25 குடும்பங்கள் அந்நிலத்தில் வசிக்கவேண்டுமென்றும் இது முதல் சங்கரபாடி யென்பதை ராஜேந்திர சோழபாடி யென்று வழங்கவேண்டுமென்றும் திருவாலங்காட்டு ஆலயத்திற்கு 15 திருநந்தாவிளக்குக்கு எண்ணெய் அவர்கள் கொடுத்துவரவேண்டுமென்றும்தெரிவிக்கின்றது. வீரசோழப்பல்லவ அரையனும் வீரசோழ மூவேந்த வேளானும் பல்லவச்சோழ வம்சத்தைச் சேர்ந்த சிற்றரசர்கள். குலோத்துங்கசோழன் ஆளுகையில் பல்லவராஜ்ஜியம் முழுமையும் ஜெயங்கொண்ட சோழ மண்டலமென்றாய் விட்டது.

மணிமங்கலத்திற்கு வடக்கிலுள்ள சோமங்கல கிராமத்தில் சவுந்தரராஜபெருமாள் கோயிலின் மூன்று பக்கத்திலும் வரையப்பட்ட சாஸனமாவது

+ + + குலமணிமகுடம் முறைமையில் சூடித்தன் கழல் தராதிபர் சூட செங்கோல் நாவலம் திசைதோறும் நடாத்தி வீரசிம்மாசனத்து புவன முழுதுடையாளோடும் வீற்றிருந்தருளின கோவிராஜகேசரிவர்மரானவுடையார் ஸ்ரீராஜேந்திர தேவற்குயாண்டு 5-வது

ஜயங்கொண்ட சோழமண்டலத்து செங்காட்டுக்கோட்டத்து மாகணூர் நாட்டு சோமங்கலமான ராஜ சிகாமணி சதுர்வேதி மங்கலத்து மகா சபையோம் எங்களூர் திருசித்திரகூட ஆழ்வார்க்கு ஆச்சந்திர வத்சிலாலேகை செய்த பரிசாவது + + +

இது குலோத்துங்க சோழன் ஆளுகையின் 3-வது ஆண்டில் ஏற்பட்டது. இக்கோயில் சித்திரகூட ஆழ்வார்க்குப் பரிசு அளித்ததைத் தெரிவிக்கின்றது. இச்சோழன் மனைவியாகியமதுராந்த கியைப்புவனம் முழுதுடையாளென்று சொல்லப்படுகின்றது.

பெரியகாஞ்சிபுரம் பாண்டவ பெருமாள் கோயில் வடவண்டை மதிலில் வரையப்பட்ட சாஸனமாவது

+ + + ஒரு தனிமேருவில் புலிவிளையாட ஆழ்கடற்றீவாந்தரத்து பூவர்திறை விடுத்த கவன் சொரிகளிறு முறை நிற்ப விளங்கியதென்னவனருந்தலை பருந்தலைக்குந்கிட ப்ப நன்மணியாரமும் திருப்புயத்தலங்களும் தந்து வீரமும் தியாகமும் விளங்க பார் மிசை மேவலர் வணங்க வீரசிம்மாஸனத்து புவனமுழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோ-ராஜகேசரிவர்மரான உடையார் ஸ்ரீகுலோத்துங்கசோழதேவற்கு யாண்டு அஞ்சாவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக்கலியூர் கோட்டத்து கலியூர் நாட்டு ஒரிருக்கையூரோம் சிலாலேகை செய்து கொடுத்த பரிசாவது, எயிற்கோட்டத்தெயில் நாட்டு நகரம் காஞ்சிபுரத்து அருமொழிதேவப்பெருந்தெருவில் வியாபாரி குமாரப் பெருவாணியன் எறிஞ்சொடியான அருளாளதாசன் + + + என்று எழுதப்பட்டிருக்கின்றது.

உரக்கை கிராமத்தாரிடத்தில் ஒருவர்த்தகன் 11 கழஞ்சிபொன் கொடுத்து நிலம் வாங்கித்திருப்பாடகமாகிய பாண்டவப்பெருமாளுக்குத் திருநந்தவனம் வைத்துப் புஷ்பகைங்கரியம் செய்து வருதலைப் பற்றிதெரிவிக்கின்றது. இது பல்லவர்கோனாகிய குலோத்துங்க சோழன் சிம்மாஸனமேறிய 5-வது - (கி.பி. 1069) ஆண்டிலேற்பட்டது, காஞ்சிபுரம் எயில் கோட்டத்து எயில் நாட்டைச்சேர்ந்தது,

செங்கல்பட்டுக்குத்தெற்கே 9 மயில்தூரத்திலுள்ள திருக்கழுக்குன்றத்தில் வேத கிரீஸ்வர ஆலயத்தின் மூலஸ்தானத்திலுள்ள சாஸனமாவது.

+ + + கோவிராஜ கேசரிவர்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு கச-வது ஜயங்கொண்ட சோழமண்டலத்துக்களத்தூர்கோட்டத்து களத்தூர் நாட்டு தன் கூற்று தேவதானம் திருக்கழுக்குன்றமான உலகளந்த சோழபுரத்து ஸ்ரீமூலஸ்தானமுடைய மகாதேவர்க்கு ஓய்மா நாட்டு சேவூரான சோழ கேரள நல்லூரிலிருக்கும் பள்ளிச்செல்வன் பழமடையனான குலோத்துங்கசோழப்பெரியரயன் வைத்ததிருநந்தா விளக்கு ஒன்றினுக்கு அருமொழி தேவனுழக்கால் நிசதமுழக்கு நெய்க்குவிட்ட சாவா மூவாபேராடு தொண்ணூறு. + + + என்று வரைந்துள்ளது.

இது குலோத்துங்கசோழன் ஆளுகை 14-ம் (கி. பி. 1078) ஆண்டில் வரையப்பட்டது. குலோத்துங்க சோழப்பெரிய அரையன் திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு உழககு நெய்தினம் ஆலயத்திற்குக் கொடுத்துவரும்பொருட்டு 90 ஆடுவாங்கி விட்டதை இச்சாஸனம் தெரிவிக்கின்றது. சோழப்பெரியரையன் என்பவன் திண்டிவனம் தாலூக்காவிலுள்ள சேவூரைச்சேர்ந்தவோர் பல்லவச்சோழனும்.

காவாந்தண்டலம் காஞ்சிபுரத்திற்குத் தென்கிழக்கே சுமார் 12 மயிலிலுள்ளது. செய்யாற்றின் (சேயாறு) வடகரையிலிருக்கின்றது. இங்குள்ளலட்சுமிநாராயண ஆலயத்தின் தென்னண்டை மதிலிலுள்ள சாஸனமாவது.

+ + + கோவிராஜ கேசரிவர்மரான உடையார் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு 4-வது ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்துத்தபனூர் நாட்டுபிரமதேயங்காய்வான் தண்டலமாகிய சதுர்வெதிமங்கலத்து மகாசபையோம் இவ்வாட்டை சிம்மஞாயிற்று பூர்வபக்ஷத்து சஷ்டியும் திருவோணமும் பெற்றவியாழக்கிழமை நான்று நம்மூர்நடுவில் ஸ்ரீ கோயில் வீற்றிருந்த ஆழ்வார் திருமுற்றத்தே அதிகாரிகள் சோழமூவேந்தவேளாரும் நடந்திருக்கக்கூட்டக்குறை வறக்கூடியிருந்து பணிப்ப பணியாற்பணித்த எழுத்து + + +

இச்சாசனம் பூர்த்தியில்லாமல் எழுத்துகள் மறைபட்டிருக்கின்றன. பல்லவர்க்கரசனாகிய குலோத்துங்கசோழன் ஆளுகையின்

4-வது (கி. பி. 1068) ஆண்டில் வரையப்பட்டது. இதிற்கூறும் சோழமூவேந்தவேளாரும் பல்லவச்சோழ வம்சத்தைச்சேர்ந்தவோர் சிற்றரசனும்.

மதுராந்தகத்திற்கு தெற்கே 13 மயிலிலுள்ளபெரும்பேறூரிலிருக்கும் தான்தோன்றி ஈஸ்வர ஆலயத்தின் முன்பக்கமுள்ள மண்டபத்தின்மேலண்டை மதிலில் வரையப்பட்ட சாஸனமாவது.

+ + + கோவிராஜகேசரிவர்மரான உடையார் ஸ்ரீ குலோத்துங்கசோழதேவற்கு யாண்டு பதினொன்றாவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து களத்தூர்நாட்டு தனியூர் ஸ்ரீ மதுராந்தக சதுர்வேதிமங்கலத்து பெருங்குறி சபையோம் + + +

பெரும்பேறூர் ஸ்ரீ கரணீஸ்வர ஆலயத்தின் சிலநிலத்து வரியை மதுராந்தகபெருங்குறி சபையார் ஆலயத்தின் பொக்கிஷத்தில் சேர்ப்பதைத் தெரிவிக்கின்றது

பின்வரும் சாஸனம் திருமலை கோபுரத்திற்கும் வன்னநத்தீட்டிய குகைக்கும் மத்தியில் புதைக்கப்பட்டபடிகளின் பாறைமேலிருக்கினறது.

+ + + கோப்பரிகேசரிவர்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவற்கு யாண்டு 12-வது ஜயங்கொண்ட சோழமண்டலத்துப் பங்காள நாட்டுநடுவில் வகைமுகைநாட்டுப்பள்ளிச்சந்தம் வைகவூர் திருமலை தேவர்க்கு இளையமங்கை வைத்தத்திருநந்தாவிளக்கொன்று. இதற்கு பூமிதிருத்தக்கொடுத்த காசு இருபது. இப்பூமியால் ஆசந்திரார்க்கியவரை இப்பள்ளியுடைய ஆரம்பநந்திக்கு நித்தம் நந்தாவிளக்கொன்றும், பல்லவரசியர் தேவியார் சிண்ணவையார் சந்திரார்க்கியவரைவைத்த நந்தாவிளக்கொன்றுக்குகொடுத்தகாசு அறுபது.

இச்சாஸனத்திலே முதலில் ராஜேந்தரசோழன் வெற்றிகளையும் வீரத்தன்மையையும் விசேடம் புகழப்பட்டிருக்கின்றது. சண்டையில் 21-விசை க்ஷத்திரியர்களை அழிப்பேனென்று சபதம்பண்ணிக்கொண்டபரசுராமனைப்பற்றி இந்தச்சாஸனத்தில் "செருவிற்சினவில் இருபத்தொருகால் அரைசுகளைக்கட்ட பரசுராமன்,' என்று சொல்லப்பட்டிருக்கின்கிறது. அரைசுகள் க்ஷத்திரியர்கள் தென்மொழி வடமொழி பேதமேயன்றி பொருள் ஒன்றும், இதனையறியார் அரசர்வேறு என்றும் க்ஷத்திரியர் வேறு என்றும் மதிமயக்கால் மலைவுபடுவர்.

சிண்ணவையார் என்னும் பல்லவ அரசி ஓர்சோழன் குமாரத்தி. இவள் பல்லவராஜனை மணம்புரிந்து கொண்டாள். இப்பல்லவ அரசி வைகலூர் திருமலைதேவர்க்குத் திருநந்தாவிளக்குக்காக அறுபது (60) காசும் இளையமங்கையார் இருபது (20) காசும் கொடுத்திருக்கின்றார்கள் இதை மேற்படி சாஸனம் தெரிவிக்கின்றது.

ராஜேந்திரபல்லவராயனுகிய உடையார் குலோத்துங்கசோழன் ஆளுகையின்போது அவ்வவ்வாலயங்களில் ஏற்பட்ட சாஸனங்களில் சில மேலேயெடுத்து காட்டப்பட்டிருக்கின்றன. இவன் ஆளுகையில் பல்லவராஜ்ஜியம் (தொண்டமண்டலம்) முழுமையும் ஜெயங்கொண்ட சோழமண்டலமென்ருய்விட்டது. இவனது அரசாட்சி வட்க்கே கோதாவரி வரையிலும் தெற்கேபாண்டியநாடு சேரநாடு சிம்மளம் வரையிலும் நடந்துவந்தது. இவ்வரசன் பாண்டியனை வரைபுகதுரத்தியும், கலிங்கநாட்டை ஜெயித்தும், கைங்கைபாடியைக் கைக்கொண்டும், கொங்கு அரசனை வெளிப்படுத்தியும், உதகையையழித்தும் தனது புலிக்கொடியை எங்கும் நாட்டினுன்; இவனுக்கு கோப்பரகேசரிவர்மனென்றும் ராஜகேசரிவர்மனென்றும் ராஜேந்திரசோழனென்றும் இந்திரசமானனென்றும் அனபாயனென்றும் பெயர்கள் வழங்கிவந்தன. இவனுடைய புத்திரர்கள் ஏழுபேர். பிரதம புத்திரன்பெயர் விக்கிரமசோழன். கி. பி. 1108-ம் ஆண்டு இச்சோழனுக்கு இளவரசுபட்டம் சூட்டப்பட்டது. இவனுடைய சகோதரர்கள் ராஜராஜசோழன், வீரசோழன், இவர்கள் வெங்கிநாட்டை சில வருஷம் ஆண்டுவந்தார்கள்.

முதலாவது குலோத்துங்கசோழன் அபிமானபுத்திரர் மூவர் இவர்களில் ஆதொண்டை என்பவன் பல்லவர்களை ஜெபித்தமகாவீரனென்று புகழ்ந்துரைக்கப்படுகின்றனன். தொண்டநாட்டுக்கோட்டங்களிலுள்ள ஆலயங்களில் ஆதொண்டனைக்குறித்த சாஸனம் காணப்படவில்லை. ஆனல் உலகளந்த பெருமாள் ஆலயத்திலுள்ள ஓர்சாஸனத்தில் ஸ்ரீ ராஜராஜதேவன் ஆளுகையின் 20-ம் (கி. பி 1043) ஆண்டில் ராஜராஜசோழன் பௌத்திரன் ஆதொண்டை சக்கிரவர்த்தி பல்லவர்களை ஜெயித்தமகாவீரனென்று கர்ணபரம்பரையாய் சொல்லப்படுகின்றது. ராஜராஜசோழன் கி.பி. 1023 ஆண்டுமுதல் 1064 ஆண்டுவரையில் அரசுபுரிந்தவனுதலா லிவ்வாண்டுகளில் ஆதோண்டன்

பிறந்தவனல்லன். கி. பி. 1216-ல் ராஜராஜதேவன் அரசுச்சுவந்தான். இவனது ஆளுகை 1236 ஆண்டு வரையில்சென்றது. ஆதொண்டன், 2-வது ராஜராஜசோழனுக்கு 100-வருடத்திற்குமுன் வசித்திருந்தவனுதலால் முதலாவது ராஜராஜசோழன் இரண்டாவது ராஜராஜசோழன் இவர்கள் ஆளுகைகாலத்தில் ஆதொண்டை சக்கிரவர்த்தியிருந்தான் என்பது எவ்வாற்றானும் பொருந்தவில்லை. ஆனுல் குலோத்துங்கசோழன் புத்திரர்கள் வெங்கி முதலியநாடுகளை யாண்டதுபோல் அவனது அபிமானபுத்திரனுகிய ஆதொண்டை சக்கிரவர்த்தி சிலவருஷம் காஞ்சியிலிருந்து அரசுபுரிந்தவனென்றும் அக்காலத்தில் புழற்கோட்டத்திலிருந்த குறுநிலமன்னர் (குறும்பர்) ஆதொண்டை சக்கிரவர்த்தியின் அதிகாரத்திற்கு அடங்காமைபால் அவர்களை ஜெயித்தவனென்றும் ஓர்கால் ஏற்படுமேயன்றி பல்லவராஜ்ஜியத்தை ஜெயித்தவனென்று ஒருக்காலும் சொல்ல ஆதாரவில்லை; ஆதொண்டை சக்கிரவர்த்தி முடிமன்னனுயிருந்தானென்று ஜெயங்கொண்ட சோழமண்டலத்தில் ஏற்பட்ட சாஸனங்களிலொன்றிலேனுங் காணப்படவுமில்லை.

குலோத்துங்கசோழன் சேனுதிபதியாகிய கருணுகரதொண்டசோழன் பாராக்கிரமசாலியென்று கலிங்கத்துபரணி 44-வது செய்யுளில் கூறுவதாவது.

கடைதிறப்பு.

இலங்கை யெறிந்த கருணுகரன்ற
னிகல் வெஞ்சிலையின் வலிகேட்டீர்
கலிங்க மெறிந்த கருணுகரன்றன்
களப்போர் பாடத் திறமினே

இச்செய்யுள் சேனுதிபதியாகிய கருணுகரதொண்ட சோழன் கலிங்கதேசத்தை ஜெயித்தவனென்று தெரிவிக்கின்றது.

"மறித்தோடி யெவ்வரசுஞ் சரியவென்று
வருமணுக்கைப் பல்லவர்கோன் வளவைவேந்த
னெறித்தோடை யிலங்குநடைக்களிற்றின் மேற்கொண்
டிரைவேட்ட பெரும்புலிபோலிகன் மேற்செல்ல"

என்றும் ' பல்லவர்கோன்" பல்லவர்க்கரசு "பல்லவராயன்" என்றும் பல பிரயோகங்கள் சாஸனங்களிலும் புத்தகங்களிலும் பல்லவச்சோழனுகிய குலோத்துங்கசோழனுக்கும் அவன் சேனுதிபதிக்

கும் வழங்கப்பட்டுவருகின்றது; பல்லவராஜ்ஜியத்திற்கும் ஜெயங்கொண்ட சோழமண்டலத்திற்கும் பிரதான நகரமாகிய காஞ்சிபுரம் குலோத்துங்கசோழனுக்கு சிலகாலம் 2-வது ராஜதானியாகவிருந்தது. இக்காலத்தில் காஞ்சியில் பல்லவர்க்கு முடிமன்னனாயிருந்த அரசன் உடையார்பாளயம் போயிருக்கலாமென்று அனுமானிக்கலாம். குலோத்துங்கசோழன் பாட்டனாகிய ராஜராஜசோழன் ஆளுகையில் கச்சி நகரையாண்ட பல்லவ அரசனாகிய முடிமன்னன் அந்நகரில் வசித்திருந்தான். பல்லவராஜ்ஜியம் முழுமையுங் குலோத்துங்கசோழன் ஆளுகையில் ஜெயங்கொண்ட சோழ மண்டலமென்று அழைக்கப்பட்டதாக இச்சோழன் ஆளுகையில் ஏற்பட்ட சாஸனங்கள் தெரிவிக்கின்றன. உடையார்பாளையத்தில் வசிக்கும் ராஜகுடும்பத்தார் "கச்சிக் கலியாண காலசோழன்" என்று வம்சபரம்பரையாக வழங்கிவருதலால் கச்சியிலிருந்து போன அரசர்கள் என்று நிச்சயிக்கலாம்.

முதலாவது குலோத்துங்கசோழன் பிரதமபுத்திரனாகிய பரகேசரிவர்மனான விக்கிரமசோழன் அரசாளத்தொடங்கினான். இவனுடையமகுடாபிஷேகம் கி. பி. 1119 ஆண்டு நடைபெற்றது. இச்சோழனுடைய ஆளுகைகாலத்தில் உடையவராகிய ராமானுஜசாரியர் வசித்திருந்தார். விக்கிரமசோழனுக்குக் கரிகாலனென்றும் அகளங்கனென்றும் தியாகசமுத்திரமென்றும் பெயர்கள் வழங்கிவந்தன, ஸ்ரீவைணவ ஆசிரியராகிய உடையவரை வெருட்டியவன் இச்சோழனேயாவன். இதன்பின்னர் மைசூரையடுத்தமேலக்கோட்டையைச் சேர்ந்து அவ்விடத்தில்ஐக்கியமானார். இச்சோழன்மீது விக்கிரமசோழன் உலாவொறு ஒட்டக்கூத்தனால் பாடப்பட்டது. இவன் ஆளுகையின் 9-ம் ஆண்டில் (கி. பி. 1121) அருளாளப்பெருமாள் (வரதராஜப்பெருமாள்) கோயில் அத்திகிரியின் மேலண்டைமதிலில் வரையப்பட்ட சாஸனமாவது:—

"ஸ்வஸ்திபூமாது புணரப் புவிமாதுவளர நாமது விளங்க ஜயமாது விருப்பத் தன்னிருபதமலர் மன்னவர்சூட மன்னிய வுரிமையால் மணிமுடிசூடிச்செங்கோல் சென்று திசைதோறும்வளர்ப்ப வெங்கலிநீங்கி மெய்யறந்தழைப்ப கலிங்கமிரிய கடமலைநடாத்தி வலங்கொளாழிவரையாழிதிரிய இருசுடரளவு மொருகுடைநிழற்ற விஜய அபிஷேகம் பண்ணிவீரசிம்மாஸனத்து முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்த

ருளிய கோப்பரகேசரிவர்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரமசோழதேவர்க்கு யாண்டு ஒன்பதாவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து எயில்நாட்டுத்திருவத்தியூர் ஆழ்வாரைப் பாடியருளின ஸ்ரீபூதத்தாழ்வாரும் ஸ்ரீபொய்கையாழ்வாரும் பிறந்த திருக்கேட்டைநாள் அருளாளப்பெருமாள் புறப்பட்டருளி ஏகாதசி திருமஞ்சனமும் பெருந்திருவமுது செய்தருளத் திருமஞ்சனத்துக்குத் திருமுளைசாத்த × × +" என்று வரையப்பட்டிருக்கின்றது.

பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் பிறந்த திருக்கேட்டை நாளில் அருளாளப்பெருமாளுக்குத் திருமஞ்சனஞ் செய்வதற்கும் பெருந்திருவமுது செய்வதற்கும் 780 கலநெல்லும் திருவமுதுக்கு வேண்டிய மற்றையசாமான்களும் வாங்கிச்சமர்ப்பிக்க வேண்டியதைப்பற்றியும் இச்சாஸனத்தில் வரையப்பட்டிருக்கின்றது. காரியநிர்வாக சபையார் பெயர்கள், பூண்டவர்த்தனத்து ராஜராஜ கிரமவித்தனும் தூதஹரிநாராயண கிரமவித்தனும் பிரம்மஸ்தலத்து பாண்டவதூத கிரமவித்தனும் மற்றவர்களும் சபைக்கு அங்கத்தனராயிருந்தார்கள். இவர்கள் மாதம்தோறும் கேட்டைநாளில் அருளாளப்பெருமாளுக்கு திருவமுது திருமஞ்சனம் நடத்தி வருதலைக்குறிக்கின்றது.

விக்கிரமசோழன் ஆளுகை கி. பி. 1128-ம் வருஷம்வரை நிலைபெற்றிருந்தது. திருச்சினுபள்ளிஜில்லா உடையார்பாளயம் தாலுக்கா திருமலைவாடியில் வயித்திநாதர் ஆலயத்தின் இரண்டாவது பிரகாரத்தில் தென்னண்டைமதிலில் வரைந்திருக்கும் பட்டயத்திலே விக்கிரமசோழ தேவனுடைய ஜெயங்களை விசேடமாய்ச் சொல்லப்படுகின்றது. இச்சோழனுக்கும் இவன்முன்னோர்க்கும் குடும்பவழிபடுகடவுளாகிய நடராஜப்பெருமான் சன்னதியில் செய்த கயிங்கரியங்களை மாத்திரம் எடுத்து வரைவாம்.

+ + + தன் கோயிற் கொற்றவாசல் புறத்து மணிநாவொடுங்க முரசுகள், முழங்க, விசையமும்புகழும் மென்மேலோங்க, வாழிவாழி இம்மாநிலம் காக்கத்திருமணி பொற்றெட்டெழுது பத்தாண்டு வருமுறை முன்னை மன்னவர் சுமந்து திறைநிரைத்து சொரிந்த செம்பொற்குவையால் தன்குலநாயகன் தாண்டவம் பயிலுஞ் செம்பொன்னம்பலஞ் சூழ்திருமாளிகையும் கோபுரவாசல்கூடசாலைகளும் உலகு

வலங்கொண்டொளி விளங்குநேமிக்குலவரை உகையகுன்றமொடு நின்றெனப் பசுபொன்மேய்ந்து பலிவளர்பீடமும் விசும்பொளி தழைப்பவிளங்கு பொன்மேய்ந்து இருநிலம்தழைப்ப இமையவர்களிப் பபெரியதிருநாள் பெரும்பியர் விழாவெனும் உலர்புரட்டாதி உத்திரட்டாதியில் அம்பலம் நிறைந்த அற்புதக்கூத்தர் இன்பவர்வாழ எழுந்தருள்வதற்குத் திருத்தேர்கோயில் செம்பொன்மேய்ந்து பருந்திரள் முத்தின்பயில் வடம்பரப்பி நிறைமணிமாளிகை நெடுந்திருவீதி தன் திருவளர் பெயரால் செய்து சமைத்தருளி பைம்பொற்குழித்த பரிதலமுதலால் செம்பொற்கற் பகத்தொடு பரிசின்னமும் அளவிலாதன வொளிபெறவமைத்துப் பத்தாம் ஆண்டில் சித்திரைதிங்கள் அத்தம் பெற்ற ஆதிவாரத்து + + + என்றிருக்கின்றது.

இது கி. பி. 1128-ஆண்டில் விக்கிரமச்சோழன் (சிம்மாசனமேறிய 10-ஆம் ஆண்டில்) நடைபெற்றது. இஃது விக்கிரமசோழன் குடும்பகுல நாயகராகிய பொன்னம்பலத்தில் தாண்டவம்புரியும் நடராஜர் ஆலயத்திற்குச்செய்த கயிங்கரியங்களைத்தெரிவிக்கின்றது.

மணிமங்கலம் ராஜகோபாலபெருமாள் ஆலயத்தின் மண்டபத்தின் மேலண்டை மதிலிலுள்ள சாஸனம் விக்கிரமசோழன் ஆளுகை 4-வது (கி. பி. 1122) ஆண்டில் வரையப்பட்டது.

+ + + முல்லைவாணகைமுக் கொக்கிழானடி உடையொடு சங்கரன் இமயச்சிமையத்திருந்தானென பொருந்தி உடன் இருப்ப ஆங்கவன் மகிழும் கங்கையொப்பாகி தெரிவை திலதம் தியாகபதாகை புரிகுழல் மடப்பிடி புனிதகுணவநிதை திரிபுவனமுழுதுடையாள் அவன் திருவுளத்தருள் முழுது முடையாளென விருப்ப வீர சிம்மாசனத்து வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி வற்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரமசோழதேவற்கு யாண்டு ச-வது ஜயங்கொண்டசோழ மண்டலத்து குலோத்துங்க சோழவள நாட்டுக்குன்றத்தூர் நாட்டு பாண்டியனை யிருமடிமென்கொண்ட சோழச்சதுர்ப்பெதி மங்கலத்து மகாசபையோம். + + + என்று எழுதப்பட்டிருக்கின்றது.

இச்சாசஸனம் ஆலயதிற்கு நிலம்வாங்கிவிட்டதை தெரிவிக்கின்றது விக்கிரமசோழன் ஆளுகையின் 6-7-9-14-ம் ஆண்டுகளில் மதுராந்தகம் அச்சிறுவாக்கம் உத்தரமேரூர் பல்லாவரம் முதலிய விடங்களிலுள்ள ஆலயங்களிலும் விக்கிரமசோழன் சாஸனங்களிருக்கின்றன.

விக்கிரமசோழனுக்குப்பின்னர் இரண்டாவது குலோத்துங்க சோழன் கி. பி. 1128-ம் ஆண்டு அரசுக்குவந்தான். தமிழ்நாடு முழுமையும் 30 வருஷம் அரசுநாடத்தியவன், இவனது ஆளுகை 8-வது ஆண்டில் மணிமங்கலம் இராஜகோபால பெருமாள் ஆலயத்தின் மண்டபத்தின் மேலண்டைமதிலில் வரையப்பட்ட சாஸனமாவது.

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு 8-வது ஜயங்கொண்ட சோழமண்டலத்து குலோத்துங்க சோழவளநாட்டுக் குன்றத்தூர் நாட்டு மணிமங்கலமான பாண்டியனை இருமடி வென்கண்டச்சோழச் சதுர்வேதிமங்கலத்து மகாசபையோம் எழுத்து,

ஈகூகெ முக்காலே இரண்டுமாகாணி குழியுள்ள ஓர் துண்டு நிலத்தை உய்யடான் பாட்டன் உள்ளிட்டார் பக்கல் பொன்கொடுத்து கோயிலுக்கு வாங்கிவிட்டதை இது தெரிவிக்கின்றது.

இரண்டாவது குலோத்துங்கசோழனுக்குப்பின்னர் மூன்றாவது குலோத்துங்கசோழன் பட்டத்திற்கு வந்தான்.

இவன் ஆளுகையின் மூன்றாவது (கி. பி 1186) ஆண்டில் தென்னாற்காடு ஜில்லா கூடலூர்தாலுக்கா திருமாணிக்குழி வாமனபுரீஸ்வரர் கெர்ப்பகிரகத்துக்கிழண்டை மதிலின் முகப்பின் வலது பக்கத்தில் வரையப்பட்டிருக்கின்றது.

ஸ்வஸ்தி ஸ்ரீ புயல்பெருகவளம்பெருக பொய்யாத நான்மறையின் செயல்வாய்ப்பத்திருமகளும் ஜெயமகளுஞ் சிறந்துவாழ வெண்மதி பொற்குடை விளங்க வேல் வேந்தரடிவணங்க மண்மடந்தை மனமகிழ மனுவின் நெறித்தழைத்தோங்க சக்கரமுஞ் செங்கோலுந் திக்கனைத்துஞ் செலநடக்க கற்பகாலம் புவிகாப்ப பொற்பமைந்த முடிசூடிச்செம்பொன் வீரசிம்மாசனத்துப் புவனமுழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரிவர்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு மூன்றாவது சிம்மநாயற்று அமரபக்ஷத்து பஞ்சமையும் திங்கள் கிழமையும்பெற்ற அஸ்வனிநாள் ராஜராஜவளநாட்டு உடையார் திருமாணிக்குழி நாயனருக்கு இந்நாட்டுக்கூடலரச நாராயணன் ஏழிசைமோகனை ஜனனு

தகச்சிராயன் திருநந்தா விளக்கொன்றுக்கு சாவாமூவாப்பசு நுடு இப்பசு முப்பத்திரண்டும் கைக்கொண்டு இத்திருநந்தாவிளக்கு ஒன்றும் சந்திராதித்தியவரை செலுத்தக்கடவோம் திருவுண்ணாழிகை சபையோம் இப்படி சம்மதித்து இவ்வுபையங்கொண்டோம் இது பன்மாஹேஸ்வரரக்ஷை

இதுகூடல் அரசநாராயணன் ஏழிசைமோகனான ஜனநாதகச்சிராயன் திருநந்தாவிளக்குக்காக திருமாணிக்குழி ஆளுடையநாயனருக்கு 32 பசுக்களை வாங்கிவிட்டதைத் தெரிவிக்கின்றது. இவன் பல்லவச்சோழ வம்சத்தைச்சேர்ந்தவோர் சிற்றரசன்.

மணிமங்கலம் ராஜகோபால பெருமாள் ஆலய மண்டபத்தின் தென்னன்டைமதிலிலுள்ள சாஸனம் மூன்றாவது குலோத்துங்க சோழன் ஆளுகை 12-வது ஆண்டில் வரையப்பட்டது.

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் மதுரையும் ஈழமும் பாண்டியனையும் முடித்தலை கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்கச் சோழதேவற்கு யாண்டு 12-வது தனுநாயற்று அமரபக்ஷத்து நவமியும் திங்கள் கிழமையும்பெற்ற சித்திரைநாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்துக்குலோத்துங்க வளநாட்டு மணிமங்கலமான பாண்டியனை இருமுடிவென்கண்ட சோழசதுர்வேதி மங்கலத்து மகாசபையோம் எழுத்து நம்மூர் வண்டுவராபதி எம்பெருமான்கோயில் ஸ்ரீ காரியஞ் செய்கிறகாரம்பியசெட்டு கேசவபட்டனும் ஸ்ரீவைணவகண்காணி அரட்டமுக்கி தாசனுங்கண்டு இக்கோயில் திருவாய்க்குலத்து எம்பெருமானுக்கு நானாழி அரிசியால் ஒரு திருப்போனகம் அமுது செய்தருள இம்மண்டலத்து இந்நாட்டுக்கீழ்மாங்காட்டு நாட்டுத்திருச்சுரத்துக் கண்ணப்பன் தூசி ஆதிநாயகன் நீலகங்கரையன் வன்னியநாயனான உத்தமநிதி கண்ணப்பன் + + +

இந்தசாஸனம் நிதம் நானாழி அரிசியால் அமுதுசெய்தருளுதற்கு நீலகங்கரையன் வன்னியநாயன் உத்தமநிதி கண்ணப்டன் 600 குழிநிலம் வாங்கிவிட்டதைக் தெரிவிக்கின்றது. வன்னியநாயனான உத்தமநிதி கண்ணப்பன் ஓர்சேனைத்தலைவன். பல்லவச்சோழவம்சத்தவன் கி. பி. 1189-ம் ஆண்டு ஆளுகை செய்தமூன்றாவது குலோத்துங்கசோழன் காலத்தில் சேனாவீரனாயிருந்தான். வன்னிய

நாயன் என்பது அரசவர்க்கத்தைச் சேர்ந்தவன் என்று பொருள். பூர்வநூலாசிரியர்களும் செப்பேடுசிலா சாஸனங்களிலும் ஏனைய புத்தகங்களிலும் வன்னியனென்பதை அரசன் என்ற பொருளில் பிரயோகித்திருக்கின்றனர். "பரிதியும் மதியும் வன்னியும்" என்பவை முக்குல அரசரைக்குறிக்கின்றன. இங்குவன்னி என்பது அக்கினிகுலத்தை மாத்திரங்குறிப்பிக்கின்றது "நாற்படைவன்னியர்" "உயர்வன்னியர்" இவைகள் அரசர் வர்க்கத்தவர்களுக்கு பொதுவாய் வருகின்ற அடைமொழிபேதத்தால் சிற்றரசனென்றும் பேர் அரசனென்றும் அரசன் என்ற பொதுச்சொல்லும் வழங்குதலுமுண்டு. வன்னியன் என்பது சிற்றரசனைமாத்திரம் குறிக்குமென்று மலைவுபடுவோர் சிலர். வன்னிகுலக்ஷத்திரிய மகாசங்கத்தார் வன்னிகுலம் என்பதை அரசகுலம் என்ற பொருளில் பிரயோகித்திதிருப்பதை அறியாதார் சிலரேயாம். அரசவர்க்கத்தவர்களைக் குறித்துச் சாஸனங்களில் பிரயோகப்பட்டிருக்கும் சொற்களாவன அரசநாராயணன், உத்தமசோழப்பல்லவரையன், எதிரிலி சோழசம்புவராயன், அத்திமல்லன் சம்புவராயன்,வன்னியநாயன் முதலியவையாம்.

மூன்றுவது குலோத்துங்க சோழனுக்குப் பின்னர் இரண்டாவது ராஜராஜசோழதேவர் கி. பி. 1216-ம் ஆண்டு அரசாளத்தொடங்கினன். இவன் ஆளுகை 18 (கி. பி. 1234) ஆண்டில் ஏற்பட்ட சாஸனம் மணிமங்கலம் ராஜகோபாலபெருமாள் ஆலயத்தின் கீழண்டை மதிலில் வரையப்பட்டிருக்கின்றது.

ஸ்வஸ்தி ஸ்ரீதிருவாயக்கேழ்வி முன்னாக திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு கஅ-வது தனுர்நாயற்று பூர்வபக்ஷத்து பஞ்சமியும் புதன்கிழமையும் பெற்ற அவிட்டத்தின் நாள் ஜயங்கொண்ட சோழமண்டலத்து புலியூர்கோட்டமான குலோத்துங்க சோழவளநாட்டுக குன்றத்தூர்நாட்டு மணிமங்கலமான கிரமசிகாமணி சதுர்வேதிமங்கலத்து வண்டுவராபதி எம்பெருமான் கோயிலில் அபிஷேகமண்டபத்துக்கு கீழைப்புலிமுகமான சொபானத்துக்குவேண்டும் பொன்னிட்டு கல்காரஞ் செய்வித்தான்; மணிமங்கலமுடையான் பஞ்சநெதி இலக்ஷமணன் மலைகினிய நின்றான் பெரியபிள்ளையான பிரம்மபிரியனும் இவன் தம்பி ஆகவமல்லதேவனும் இவர்கள் தன்மம்.

மேற்படி ஆலயத்தின் அபிஷேகமண்டபத்திற்குப்பிரம்ம வீரியனும் ஆகவமல்லதேவனும் இரண்டு சகோதரர்களும் பொன்கொடுத்துக்கல்வாங்கித் தருமத்துக்கு மண்டபத்தில் புலிமுகம் செய்து வைத்ததைத் தெரிவிக்கின்றது.

விரிஞ்சிபுரத்திற்குச் சமீபத்திலுள்ள பொய்கையென்னும் கிராமத்தில் பெருமாள் ஆலயத்தின் தென்னண்டை மதிலின் அடிவாரத்திலுள்ள சாஸனம் ராஜராஜ சோழதேவன் ஆளுகையின் 24-வது ஆண்டில்வரையப்பட்டது.

ஸ்வஸ்தி ஸ்ரீ ஆயிரத்தொரு நூற்றறுபத்தொன்று செல்லாகின்ற ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு இருபத்து நாலாவது தைமாசமுதல் பொய்கையான ராஜேந்திர சோழநல்லூர் சித்திரமெழிமலே மண்டல விண்ணகரான அருளாளப்பெருமாளுக்குப் புத்தூர் நாற்பாங் கெல்லேக்கு முற்பட்ட மேனோக்கினமரமும் கீழ்நோக்கின கிணறும் நன்செய் புன்செய் நாற்பாங் கெல்லேயுமுட்பட்ட கடமை குடிமைகளும் ஆயம்பாடி காவல் சில்வரியெடுத்துக்கொட்டி அரிமுக்கையுட்பட்ட பலநெல்லாயங்களும் கார்த்திகை அரிசி கார்த்திகைகாசு கார்த்திகைபச்சை வேலிப்பயறு நீர் நிலக்காசு தறியிறை கடையிறை காக்கப்பட்டம் தட்டார்ப்பட்டம் ஆசுவக்கடமை செக்குக்கடமை ஏரி மீன்காசு இனவரிவகைந்தகாசு பட்டோலேகாசு மற்றுமெப்பேற்பட்டகாசு பலகாசாயங்களும் அந்தராயமும் வெட்டித்தனி ஆளுட்பட்ட நெல்லாயகாசாயங்களும் உட்பட திருவிடையாட்டமாக மலே மண்டலத்து ஆயனூர் சிறை ராமன் கேரளன் பககல் பொன்னறக்கொண்டு மண்ணறவிட்டேன் விராசனி அம்மை அப்பன் அழகிய சோழனுன எதிரிலி சோழசம்புவராயன்.

இச்சாஸனம் ராஜராஜ தேவசோழன் ஆளுகை 24-வது (கி.பி. 1239) ம் ஆண்டில் எதிரிலி சோழசம்புவராயன் புத்தூர் கிராமத்தைக் கேரளராமனிடத்திலிருந்து பொன்பெற்று பெருமாள் ஆலயத்திற்கு விட்டதைத் தெரிவிக்கின்றது. எதிரிலி சோழசம்புவராயன் பல்லவச்சோழ அரசவர்க்கத்தைச் சேர்ந்தவர்களைச்சம்புவராயரென்றும் சம்புகுலமென்றும் வீரசம்ப பெருமாயரென்றும் பல்லவரையரென்றும் சோழப்பல்லவரையரென்றும் பல்லவராயனென்றும் பட்டயங்களில் கூறப்பட்டிருக்கின்றது. இதற்கிணங்க காஞ்சிபுரத்தில்

பல்லவச் சோழவர்க்கத்தவர்களுக்கு மகாநாட்டதிபதியாய் வருப வர்க்கு வீரசம்பு மகாநாட்டார் என்று அழைக்கப்பட்டு வரு கின்றது.

ராஜ ராஜ தேவ சோழனுக்குப்பின்னர் திரிபுவன சக்கிரவர்த் திகள் கோப்பெருஞ்சிங்கசோழன் கி. பி. 1242-ம்ஆண்டில் அரசாளத் தொடங்கினுன். இச்சோழனுடைய அரசாட்சியிலேற்பட்ட சாஸ னங்கள் காஞ்சியில் பல க்ஷேத்திரங்களிலிருக்கின்றன. இவனது ஆளுகையின் 18-ம் வருஷத்தில் (கி. பி. 1260) ஏற்பட்ட சாஸனத் தில் சகல புவன சக்கரவர்த்திகள் கோப்பெருஞ் சிங்கதேவசோழன் அரசாட்சியில் ஆலய காரிய நிர்வாகிகள் ஆலய கயிங்கரியத்திற்கு நிலசம்பந்தமான வேற்பாட்டைக்குறித்து எழுதப்பட்டிருக்கின்றது. இவ்வரசனுடைய ஆளுகை 20 வருஷம் வரையில் நடை பெற்றது.

பெருஞ் சிங்கதேவசோழனுக்குப் பின்னர் திரிபுவன சக்கிரவர்த் திகள் விஜயகண்ட கோபாலதேவ சோழன் கி. பி. 1252-ம் ஆண்டு அரசாளத் தொடங்கினுன். இவ்வரசன் ஆளுகையின் 14-ம் ஆண்டு கி. பி. 1266-ம்) வரதராஜ ஆலயத்தில் ஏற்பட்ட கல்வெட்டிலே ஓர் கிராமத்தான் நிலசம்பந்தமாக செய்தவேற்பாடுகள் வரையப்பட்டி ருக்கின்றன. மேற்படி ஆலயம் தாயார் சன்னதி மேலண்டை பக் கத்திலுள்ள கல்வெட்டாவது:—

ஸ்வஸ்தீ திரிபுவன சக்கிரவர்த்திகள் விகஜயண்ட கோபாலதேவ ர்க்கு யாண்டு கசு-வது தசமியும் செவ்வாய்க்கிழமையும் பெற்ற அஸ் வனிநாள் பெருமாளுக்கு திருமாலே எழுக்கு நாச நம்பிகளுக்கு சித் தாசனென் பெரியபிராட்டியாருக்கு திருமாலேயும் திருப்பள்ளித்தாம மும் எடுத்துப்பொதுவாக நான்விட்ட திருநந்தவனஞ்செய்து போந் தகலியூர் கோட்டத்துப்படைபற்று ன தேவபெருமாள் நல்லூர் கொ ல்லேத்திருநந்தவனஞ் செய்து போந்த நிலம் இரண்டு வேலி + + +

விஷ்ணு கஞ்சி தேவராஜ பெருமாள் கோயில் தென்னண்டை கீழ்ப்படையிலுள்ள சாஸனம்.

ஸ்வஸ்தி திரிபுவன சக்கிரவர்த்திகள் விஜயகண்ட கோபாலர்க்கு ஆண்டு எட்டாவது மிதுன நாயிற்று பூர்வபக்ஷத்து திரயோதசியும் திங்கள் திழமையும் பெற்ற பூசத்து அருளாளப் பெருமாளுக்கு மலே

மண்டலத்து நாயக்கன் மாரில் தற்ம மதுராந்தக நாயக்கன் அளியா ங்கக்கோன் நாங்கள் இரண்டு பேரும் வைத்த திருநந்தாவிளக்கு ஒன்றுக்கு திருவிளக்கு நாட்டி தப்பாதவாதக்கோன் அளியங்கக் கோன் வசம்விட்ட பால் பசு பத்தும் சினைப் பசுபத்தும் பொலிமோரி கிடாரி பதினொன்றும் ரிஷபம் ஒன்றும் ஆக உருபுகள் ௩௨-ம் கைக் கொண்டு திருநந்தா விளக்கு ஒன்றுக்கு அரியன வல்லன் காலில் நெய் உழக்கு தயிரமுது நாழியும் திருநாள் தேவையும் சந்திராத்திர வரைக்கும் செலுத்தக்கடவோமாக சிலாலேகை பண்ணிக்கொடுத் தேன் திருவிளக்கு இடையன் அளியாங்கக்கோன் இப்படி அளி யாங்கன் கையெழுத்து.

இஃது விஜயகண்ட கோபாலதேவ சோழன் ஆளுகையின் 6-வது 8-வது ஆண்டுகளில் ஏற்பட்ட சாஸனங்கள் நந்தவனத்திற்கு 2-வேலி நிலம் வாங்கிவிட்டதையும் உழக்கு நெய்க்கும் நாழி தயிருக்கும் 32 உருக்களடங்கிய பால்பசு, சினைப்பசு, கிடாரி ரிஷபம் வாங்கிவிட்ட தையும் தெரிவிக்கின்றன.

சிவகஞ்சி சுரஹரீஸ்வர ஆலயத்தின் முன் மண்டபத்தின் தென் னண்டை மதிலிலுள்ளது.

ஸ்வஸ்தி திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீ விஜயகண்ட கோபால தேவர்க்கு யாண்டு இருபத்தஞ்சாவது + பூர்வபக்ஷத்து தசமியும் திங்கள் கிழமையும் பெற்ற பூராடத்து நாள் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து எயிற்கோட்டத்து காஞ்சிபுரத்து சுரவட்டாரமுடைய நாயனருக்குப் பல்லவம்சத்து அம்பலூரதிபபு ராஜ நல்ல சித்தாசர னென் திருமடவளாகத்திலுள்ள தறிக்கடமையும் + + +

இச்சாஸனம் விஜயகண்ட கோபால தேவர் ஆளுகையின் 25-ம் (கி. பி. 1267) ஆண்டு வரையப்பட்டது. அம்பலூர் அதிபனாகிய பு. ராஜசித்தாசன் பல்லவ வம்சத்து ராஜகாரிய நிர்வாகியாயிருந்தான் என்று தெரிவிக்கின்றது,

திருவல்வம்வில்வநாதேஸ்வர ஆலயத்தின் மடைப்பள்ளி மேலண் டைமதிலுள்ள கல்வெட்டாவது

ஸ்வஸ்தி விஜயகண்ட கோபால தேவர்கு யாண்டு மூன்றாவது முதல் அழகிய பல்லவன் எதிரிலி சோழ சம்புவராயன் நம்பற்றுக்

கடமையும் ஆயமும் கொள்ளு மிடத்தில் முற்காலத்தில் இல்லாத ஒருவாசியான செலவளவு மாகாணி வாசியும் நாலு மாவாசியுங்கழித்துக்கடமை ஆயமுங் கொள்ளக் கடவதாகச் சொன்னோம் அழகிய பல்லவன் எதிரிலி சோழ சம்புவராயன் ஓர் சிற்றரசன் இவ்வரசனால் வரியிறையை கழித்து கொடுக்கப்பட்டதை இது தெரிவிக்கின்றது.

விஜயகண்ட கோபாலதேவ சோழன் ஆளுகையின் பின்னர் மதுராந்தக பொத்தப்பி சோழன் ஆளுகையின் ஆரம்பம் கி. பி. 1286-ம் ஆண்டு சிவகஞ்சி காமாட்சிதேவியார் ஆலயத்தின் கெர்ப்பக்கிரகத்தி வரையப்பட்ட கல்வெட்டு இச்சோழன் ஆளுகை 24-ம் ஆண்டு ஏற்பட்டது. காஞ்சியை மகமதியர் 1310 - ம் ஆண்டில் தங்கள் வசப்படுத்திக்கொண்டு காஞ்சிபுரத்தையாண்டுவந்தார்கள். வரதராஜர் ஆலயத்தில் வரையப்பட்ட சாஸனத்திலே மதுராந்தக பொத்தப்பிச்சோழனை மனுவசிற்றரசன், திருக்காளத்திக்கண்ட கோபாலன் என்றுசொல்லப்பட்டிருக்கின்றது. இச்சோழனுடைய கல்வெட்டுகள் விளங்கொளிப் பெருமாள்கோயில் முதலியவிடங்களிலுள்ளன.

மதுராந்தகன் என்னும் பெயர் சோழ அரசர்களில் சிலருக்கு வழங்கியிருக்கின்றது. மதுரையை ஜெயித்தமையால் மதுராந்தகன் என்றுசொல்லப்படுகின்றது. கண்டர் ஆதித்தியசோழனுடைய குமாரன் மதுராந்தகன் என்றும் முதலாவது ராஜராஜ சோழன் புத்திரன் ராஜேந்திரசோழனுக்கு மதுராந்தகன் என்றும் சொல்லப்படுகின்றது. மதுராந்தகம் என்ற சிறு நகரம் பல்லவராஜ்ஜியத்தில் களத்தூர் கோட்டத்தைச்சேர்ந்தது. செங்கல்பட்டிற்குத் தென்மேற்கில் 15 மைல்தூரத்திலுள்ளது. இந்நகரிலிருக்கும் பெருமாள் ஆலயத்திலும் மற்றவாலயத்திலும் கல்வெட்டுகளிருக்கின்றன. இவைகள் பராந்தகசோழன், முதலாவது குலோத்துங்க சோழன் விக்கிரமசோழன் இவர்கள் ஆளுகையில் ஏற்பட்டன. மதுராந்தக பொத்தப்பிசோழனால் மதுராந்தகம் என்றபெயர் வந்ததாகச் சொல்லப்படுகின்றது. இச்சோழன் கி. பி. 1286 லிருந்தவன். ஆனால் முதலாவது குலோத்துங்கசோழன் ஆளுகையின் 11-ம் (கி.பி. 1075) ஆண்டில் பெரும்பேறூரில் ஏற்பட்ட சாஸனத்திலே "களத்தூர் கோட்டத்து தனியூர் ஸ்ரீ மதுராந்தக சதுர்வேதி மங்கலத்து பெருங்குறிசபையோம்" என்றிருப்பதாலும் குலோத்துங்க சோழனுக்கு

4-5-தலை முறைக்கு முன்னரிருந்த பராந்தக சோழனது சாஸனம் பெருமாள் ஆலயத்தில் வரைந்திருப்பதாலும் சோழ அரசர்கள் பல்லவ ராஜ்ஜியத்தை ஜெயிப்பதற்கு முன்னரே மதுராந்தகம் என்ற நகரம் இருந்ததென்று நிச்சயப்படுகின்றது. பல்லவ அரசர்களின் அரசாட்சி பிரபலப்பட்டிருந்தகாலத்தில் அவர்களால் மதுரையைஜெயித்திருப்பதாலும் பல்லவ அரசர்கள் ஆளுகையில் பெரிய தடாகங்கள் (ஏரிகள்) பல்லவ ராஜ்ஜியத்தில் பற்பலவிடங்களில் ஏற்பட்டிருப்பதாலும் மதுராந்தகத்திலும் பெரிய தடாகத்தைப்பல்லவ அரசர்களால் கட்டப்பட்டதென்று தெரிதலாலும் மதுராந்தகம் என்ற நகரம் பல்லவர் ஆளுகை காலத்திலிருந்த நகரமென்று மேல்குறித்த சாஸனங்களால் நன்குவிளங்குகின்றது.

மதுராந்தக பொத்தப்பி சோழனென்பவன் மகமதியர் காஞ்சியை (கி. பி. 1310) பிடித்துக்கொண்ட பிறகு அந்நகரைவிட்டு மதுராந்தகத்தில் வசித்தவனென்று சொல்லவேண்டுமே யன்றி அந்நகரத்திற்கு மதுராந்தக பொத்தப்பி சோழனால் வந்த பெயர் அல்லவென்று சந்தேக மறவிளங்குகின்றது. இவன் மதுராந்தகத்தில் வசித்திருந்த காலத்தில் காஞ்சியை வசப்படுத்திக்கொண்ட மகமதியரை அந்நகரைவிட்டுத் துரத்திவிடுவதற்குவேண்டிய வேற்பாடுகள் செய்திருத்தல் வேண்டும். இச்சோழன் காஞ்சியைவிட்டு வந்தபிறகு மகமதியர்கள் 17 வருஷம் காஞ்சிபுரத்தைக் கைக்கொண்டிருந்தார்கள்.

பொத்தப்பிசோழனுக்குப்பின்னர் இவன் வம்சவழியில் வந்த வஞ்கிய சகலலோக சக்கிரவர்த்தி ஸ்ரீநாராயண சம்புவராயன் திரண்ட சேனுபலத்துடன் காஞ்சிபுரத்திற்கு வந்து அந்நகரை வசப்படுத்திக்கொண்டிருந்த மகமதியர்களை ஜெயித்து கிருஷ்ணுநதிக்கு அப்புறம் அடித்துத்துரத்திவிட்டான். இவன் கி. பி. 1337ஆம் அரசுக்கு வந்தவனென்று இவன் ஆளுகையின் 9-வது ஆண்டு (கி.பி. 1346) உலகளந்தபெருமாள் ஆலயத்தில் வரையப்பட்டிருக்கும் சாஸனத்தால் தெரியவருகின்றது. காஞ்சியில் நாராயண சம்புவராயன் கி. பி. 1355 வருஷம்வரையில் அரசியற்றினன். இச்சம்புவராயன் ஆளுகையின 20-வது வருஷத்தில் விஷ்ணுகஞ்சிவரதராஜப் பெருமாள் ஆலயத்தின் அபிஷேகமண்டபத்தின் தென்பக்கத்தில் வரையப்பட்ட கல்வெட்டாவது.

ஸ்வஸ்திசகலலோக சக்கிரவர்த்திகள் ஸ்ரீராஜநாராயண சம்புவரா யருக்கு யாண்டு இருபதாவது ஆனிமீ 30உ பெருமாள் அருளாள நாதன்கோயில் ஸ்தானத்தாருக்கு நணையபெருமாள் திருநாள் எழுந்த ருளுமளவில் ஆனைநம்பிரானிலும் குதிரைநம்பிரானிலும் ஸ்ரீ கெரு டாழ்வானிலும் நாலுநாளுமிறங்கின தெருவீதியிலே எழுந்தருளிவிக் கக்கடவாராகவும் திருத்தேரில் எழுந்தருளுமளவில் திருநாள்தோ றும் ஏழாந்திருநாளில் அத்தைக்கு கெங்கைகொண்டான் மண்டபத்து எழுந்தருளினல் மீளவும் எழுந்தருளுவிக்கக் கடவாராகவும் + + + என்று வரைந்திருக்கின்றது.

நாராயணசம்புவராயன் ஆளுகையில் ஆலயவிஷயமாகவும் நில சம்பந்தமாகவும் ஏற்பட்டசாஸனங்கள் காஞ்சியிலுள்ள பலகோயில் களிலிருக்கின்றன. பல்லவச்சோழர்களில் முடிமன்னனுயிருந்து கடைசியாகக் காஞ்சிபுரத்தில் அரசுசெலுத்தியவன் என்றும் இற்றை க்கு 550 வருஷங்களுக்கு முன்னாிருந்தவனென்றும் அவன் ஆளு கைகாலத்திலேற்பட்ட சாஸனங்கள் நிச்சயிக்கப்படுத்துகின்றன. ஆனல் நாராயணசம்புவராயன் ஆளுகைக்கு முன்னரோ அல்லது பின்னரோ ஏகாம்பர சம்புவராயன் அல்லது ஏகாம்பரசெம்பியன் என்னும் ஓர் பல்லவச்சோழன் காஞ்சியை அரசுபுரிந்தானென்று இர ட்டையர்பாடிய ஏகாம்பரநாதர் தெய்வீகவுலாவால் தெரியவருகின் றது. சம்புவராயனும் இரட்டையரும் இன்னகாலத்திலிருந்தவர்கள் என்று திட்டமாய்ச்சொல்வதற்குகூடாமையாம். தெய்வீகத்தன்மை பொருந்திய இரட்டையரில் ஒருவர்முடவரும் ஒருவர் அந்தகருமாம், இவர்கள் ஒருசெய்யுளை முற்பாதியொருவரும் பிற்பாதியொருவரு மாகப் பாடிமுடிப்பார்களாம். ஏகாம்பரசம்புவராயன் காஞ்சியில் அர சுசெலுத்தி வருங்காலத்தில் இப்புலவர்கள் இருந்தார்களென்று இவ ர்கள் பாடியவுலாவாலும் தொண்டமண்டல சதகத்தாலும் நிச்சய மாகின்றது.

ஷை தேய்வீகவுலாவில் 61-வது கலிவெண்பா.

சம்புகுலத்தொருவன் சாற்றுகைக்கா மென்றளித்த
செம்பொன் மகுடஞ் சேர்வித்து - தம்போ

102-வது கலிவெண்பா.

வடித்தசுடர்வேற் சம்பன் வாழ்மல்லிநாதன்
கொடுத்தத் திருத்தேர் மேற்கொண்டு

147 - வது கலிவேண்பா.

செம்பதுமைக்கேள்வன் திருமல்லி நாதனுயர்
சம்புபதிநல்குஞ் தடந்தேர்போல் கம்பரே.

151 - வது கலிவேண்பா.

வெஞ்சமரில்தத்து பரி * பல்லவன் சம்புகுலப் பெருமாள்
வைத்ததுலா பாரமண்டபத்தும்

இவைகளில் சம்புகுலத்தொருவன், வேற்சம்பன், சம்புபதி, தத்துபரிபல்லவன், சம்புகுலப்பெருமாள் இச்சொற்கள் ஏகாம்பரசம்புவ ராயனைக் குறிக்கின்றன. மல்லிநாதன் காஞ்சிபுரத்தை ஆள்பவன் என்றுபொருள்.

தொண்டமண்டல சதகம் 89 - வது செய்யுள்

மேதைப்புலவரெண்ணே காம்பரச்சம்பு மெச்சநெடுங்
காதைப்புலவ ரிரட்டையர் பாடுங்கலம்பகமு
மோதற்கரிய நல்லேகம்ப வாணருலாவுமந்த
மாதைப்பனுவலும் பராட்டிடுந்தொண்ட மண்டலமே

---

* பல்லவன் சம்புகுலப்பெருமான் வைத்த துலாபாரமண்டபத்தும் என்றமையால் ஏகாம்பர சப்புவராயனால் துலாதானம் ஓர் மண்டபத்தில் செய்யப்பட்டது. இம்மண்டபம் சிவகஞ்சி கீழண்டை ராஜவீதி யீசானியத்திலிருக்கின்றது. இஃது தற்காலம் சம்புகுலபல்லவர்களாகிய வன்னியர்களால் புதுப்பிக்கப்படுகின்றது. துலாதானம் என்பது (துலா—நிறைகோல் அல்லது தராசு. தானம்—கொடுத்தல்) அரசன் ஒரு தட்டிலும் பொன் ஒரு தட்டிலும் சமனாகவைத்து நிறுத்த பொன்னை பிராமணோத்தமர்ப்ளுக்குத்தானஞ் செய்தல். இங்ஙனஞ்செய்த நடுவு அரசன் நிலைமையிலிருந்து தவறுதவனென்று அறிதற்கு இச்செய்கை ஓர் அறிகுறியாம் "சமன்செய்து சீர்தூக்குங் கோலமைந்தொரு பால் கோடாமை சான்றோர்க்கணி" என்பதில் சான்றோர் சீர்தூக்கலாவது வாதிபிரதிவாதிகளால் அறிவிக்கப்பட்டவற்றை முறையா லுள்ளபடியறிதல். ஒரு பால் கோடாமையாவது அங்ஙனமறிந்தவற்றைப் பகைவர் அயலார் நட்பினர் என்னும் தாரதம்மியம் பாராமல் நியாயத்திற்கு ஒப்பச்சொல்லுதல். இது நடுவு நிலையுடைய சான்றோர்க்கு அணியாகும். துலாபுருஷதானம் அரசனுக்குரியதென்று சொல்லப்படுகின்றது. பல்லவ ராயன் கோவையில் "எறிக்கும் புகழ்கச்சியே காம்பரசம்பனெண்டிசையும் பொறிக்கும் புலிக்கொடியான்" என்று ஏகாம்பரசம்புவராயனைக்கூறுதலால் இவனது அரசாட்சி பிரபலமாக விருந்ததென்றும் இரட்டையரும் ஏகாம்பர நாதனுக்குத்திருத்தேர், செம்பொன் மகுடம்செய்துவைத்ததுமன்றித் துலாதானமும் செய்தானென்றும் ஸ்பஷ்டமாகின்றது.

என்றுகூறும் இச்செய்யுளால் இரட்டைப்புலவர்களால் பாடப்பட்ட ஷெ தெய்வீகவுலாவை ஏகாம்பர சம்புவராயன் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டதென்று தெரியவருகின்றது. ஷெ கலிவெண்பாவிலும் சாஸனங்களிலும் சம்புகுலமென்றும், பல்லவகுலமென்றும், வன்னிகுலமென்றும், வழங்கிவருபவைகள் அரசவர்க்கத்தையேகுறித்துச்சொல்லும், கி. பி. 1355 வருஷம்வரையில் அரசுபுரிந்துவந்த நாராயணசம்புவராயனுக்குப் பின்னர் பல்லவராஜ்ஜியமாகிய ஜெயங்கொண்ட சோழமண்டலத்தை விஜயகண்டகோபாலதேவன் காஞ்சிபுரத்தில் கி.பி. 1356-வது ஆண்டிலிருந்து சிற்றரசனாக அரசுபுரிந்து வந்தானென்றும் இவனது ஆளுகையில் 20-ம் வருஷத்தில் சுரஹரீஸ்வர ஆலயத்தில் வரையப்பட்ட சாஸனத்திலே ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் விஜயகண்ட கோவாலதேவன் என்றும் சிற்றரசன் என்றும் சொல்லப்படுகின்றது. இவன் கி. பி 1376-ம் வருஷம் வரையில் அரசுசெலுத்தினனென்று ஷெ சாஸனத்தால் தெரியவருகின்றது. சிற்றரசனாகிய விஜயகண்டகோபாலதேவன் காலத்தில் காஞ்சிபுரம் ஆந்தர அரசர் அதிகாரத்திற்குள்ளாய்விட்டது.

ஐந்தாவது அத்தியாயம்.

ஆந்தர அரசர்களுக்கு மூலபுருஷன் பக்காராயன். இவன் விஜயநகரத்தை இராஜதானியாக வேற்படுத்தி அதில் அரசுசெய்து வந்தான். இவனும் இவனுக்குப்பின்வந்த அரசர்களும் பிரபலமாக அரசுபுரிந்துவரும் நாட்களில் ஜெயங்கொண்ட சோழமண்டலத்தைப் படிப்படியாக ஜெயித்து அரசாண்டு வந்தார்களென்று அவர்கள் ஆளுகை காலத்திலேற்பட்ட சாஸனங்கள் விளக்குகின்றன. இவர்கள் ஆளுகையில் சம்புகுலப்பல்லவர்கள் சிற்றரசர்களாயிருந்தார்களென்று அவ்வரசர்களின் பட்டயங்களால் தெரியவருகின்றது. பக்காராயனுக்குப்பின்வந்த அரசர்களில் நாலாந்தலைமுறையில் அரசியற்றியவன் 2-வது அரியாராயன் கி. பி. 1379-ம் ஆண்டு அரசாளத் தொடங்கினன். 1393-ம் ஆண்டில் காமாட்சிதேவியாலயத்தில் ஓர் விமானங்கட்டுவித்தானென்று ஷெ ஆலயத்திலுள்ள பட்டயம் தெரிவிக்கின்றது. இவனுடைய மனைவியின்பெயர் மல்லாதேவியென்று சொல்லப்படுகின்றது.

அருளாளப்பெருமாள் ஆலயத்தில் வரையப்பட்டசாஸனம் + + + மகாமண்டலேஸ்வர ஸ்ரீ வீரஹரிஹரராயருக்குச்செல்லாநின்ற சகாப்தம் ௲௩௱௨௰க்குமேல் சித்ரபானு சம்வத்சரத்து ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்துக்காஞ்சிபுரத்தில் திருவத்தியூர் நின்றருளியபெருமான் அருளாளநாதனுக்கு ஸ்வஸ்தி ஸ்ரீமஹாமஹிமண்டலேஸ்வரன் பரமவம்சோத்பவ, பல்லவகுலதிலக பாரத்வாஜகோத்திர பவித்திரத்துக்கு ஸ்ரீ புவனேஸ்வர காக்கோட்டப்பிரகாலப்நவாந்த சாதபாப மாஹேஸ்வரபொலி தார்க்ஷ சந்திரகட்டு வாங்க துவசக்குவாய, உபரபோஷண சத்ருயசம்பாஷண பசபவதூஷண விற்பவாஞ்சநிவாரண வேஷண திருவேங்கடநாதனேறி வயு சாசசர்ச்சன நீதிபாராயண கிரந்தசேணுசிற்ப பமரப்பிரசண்டருக்ராவதார, ஜெகதங்க பைரவ, புவனீதாரண ரூபகாந்தரப்ப அநேகரிபுநிருபதி மணிமகுடகடித சரணாரவிந்த பூலோகசாதுர்வர்ண பரிபாலவ + + ராஜஸம்விக்காம விகார மல்லாபுரவல்லப மைலாபுரநாத + + ஜொத்கோபால பல்லவாதீத திருநேத்திரனாய பல்லவராய + + + என்று வரைப்பட்டிருக்கின்றது.

இது வீரஹரிஹரராயன் ஆளுகையின் கீழ் காஞ்சியில் சிற்றரசனாயிருந்த வோர்பல்லவராயனைச் சிறப்பித்துக்கூறுகின்றது. பல்லவச்சோழர்கள் பாரத்வாஜகோத்திரமென்றும் சொலாங்கயன கோத்திரமென்றும் சம்புகோத்திரமென்றும் பாஸ்கரகோத்திரமென்றும் பல்லவராய கோத்திரமென்றும் வன்னியராஜ கோத்திரமென்றும் ஆங்காங்கு காட்டப்பட்டிருக்கின்றன மல்லாபுர பல்லவ மயிலாபுரநாதவென்பது காஞ்சிபுரத்திற்கும் மயிலாபுரத்திற்கும் அரசராயிருந்தவர்களென்று குறிப்பிக்கின்றது.

கி-பி-1429 ஆண்டிலே வீரரங்கதேவமகாராயன் ஆளுகையிலேற்பட்ட தாம்பிரசாஸனத்திலே + + + திருவேங்கடமுடையான் திருவிளையாட்டு கிராமமானசதுர்வேதிமங்கலத்துக்கு பிரதிநாமமான கம்பங்குளத்திற்கடுத்த கிஷ்ணவோடையிலிருக்கும் வன்னியராஜ கோத்திரம் மூக்காநாயகன் குமாரன் முத்தையப்பநாயகன் உள்ளிட்டார் அனைவரும் எங்கள் காணியாட்சி கிராமமான கிருஷ்ணவோடை + + + இச்சாஸனத்தில் பல்லவச்சோழர்களை வன்னியராஜகோத்திரம் மூக்காநாயகனென்றும் காணியாட்சிக் குரியவர்களென்றும்

கூறுகின்றது. இதுவன்றி ராஜவல்லபன் ஆளுகையிலேற்பட்ட பட்டயத்தில் கி. பி. 1456-ம் வருஷம் சாத்தாங்காடு "கிராமத்துக்குருக்கள் சங்கராச்சாரியார் உத்தரவுபடி அவர்முன்னிலையில் வன்னிய சின்னப்பிள்ளை தந்திரியுள்ளிட்டாருக்கு எழுதிகொடுத்த கிரையசாஸனம்" எங்கள் கிராமகாணியாட்சியான சாத்தாங்காடு + + + என்றிருக்கிறது. வன்னிய சின்னப்பிள்ளைதந்திரி என்பவன் ஓர்சேனைத்தலைவனுயிருக்கவேண்டும்.

மல்லிகார்ச்சுன தேவமகாராயன் கி. பி. 1481 வருஷத்திலிருந்து 1486-ம் வருஷம் வரையில் ஆண்டான். இவனுக்குப்பின் நரசிம்மராயன் கி. பி. 1490-ம் ஆண்டிலிருந்து அரசாண்டவன். இவனுக்குப்பின் இவனுடைய புத்திரன் கிருஷ்ணதேவராயன் 1508-ம்ஞு அரசுக்குவந்தான். கி. பி. 1514-ம்ஞு ஏற்பட்ட பட்டயத்தில் தந்தைபெயர் நரசிம்மராயனென்றும் தாயார்பெயர் நாகலாதேவியென்றும் எழுதப்பட்டிருக்கின்றது. காஞ்சி ஏகாம்பரநாதர் ஆலயத்திலும் மற்றுமுள்ள ஆலயங்களிலும் கிருஷ்ணதேவமகாராயன் ஆளுகையின்காலத்திலேற்பட்ட சாஸனங்களிருக்கின்றன. ஏகாம்பரநாதர் ஆலயத்தின்பெரிய கோபுரம் கிருஷ்ணதேவமகாராயனால் கட்டப்பட்டது. இவ்வரசனுக்கு மனைவிமார் சின்னுதேவியென்றும் திருமலாதேவியென்றும் இருவரிருந்தனர். இவர்களில் ஒருமனைவி ஒரிசாதேசத்து அரசனுடைய குமாரத்தி. இவ்வரசன் ஆளுகையில் ஆலயசம்பந்தமான வேற்பாடுகள் அனேகம் நடந்தன. பிராமணர்களிடத்தில் விசுவாசமுடையவன்.

இவ்வரசன் ஆளுகையில் செங்கல்பட்டிற்கு மூன்றுமைல்தூரத்தில் திருவட்டீச்சுரன் என்ற ஒரு சிறு நகரத்திலே காந்தவராயன் சேத்துராயன் எனப் பெயரிய இரண்டு சிற்றரசர்கள் அரசுபுரிந்து வந்தார்கள். இவர்கள் வன்னிகுலத்தைச்சேர்ந்தவர்கள். மகாவீரத்தன்மையுடையவர்கள். இராயருக்குச் செலுத்தவேண்டிய பகுதிப்பணத்தைச் செலுத்தாமையால் இராயர் தனது சேனாபதியை அழைத்து அவர்கள்மீது படையெடுத்துச்சென்று அவர்களை ஜெயித்துவரும்படி யுத்தரவுசெய்து அனுப்ப, சேனாபதி இராயர் உத்தரவையனுசரித்து அந்நகரத்திற்குப் படையெடுத்துப்போய் அவர்களுடன் யுத்தஞ்செய்கையில் அவர்களை வெல்வதற்குக்கூடாமையாய்

விட்டது. இதன்பின்னர் காந்தவராயன் அபிமானித்திருந்த குப்பிச்சியென்றும் தாசிக்கு பொன் மிகுதியாய்க்கொடுத்து காந்தவராயனை யெவ்விதமாவது கொன்றுவிடும்படி திட்டஞ்செய்ய அவள் பொன்னாசையால் அவனை விஷம்வைத்து கொன்றுவிட்டாள். இதைக்கேள்விப்பட்ட அவன் சகோதரன் சேத்துராயன் அதிக துன்பமடைந்து கோபாவேசத்தோடு தனது தமையனுக்கு சதிசெய்த தாசி குப்பிச்சியையும் அவளது கூட்டத்தாரையும் ஏரியில் வெட்டும்படி செய்தான். அந்த ஏரிக்கு பிணு ஏரியென்றும் அடுத்தகுன்றுக்குக் குப்பிச்சிக்குன்று என்றும் அழைக்கப்பட்டுவருகின்றது. இதன்பின்பு சேனாதிபதி திரண்ட சேனையோடுவந்து சேத்துராயன் வசிக்கும் கோட்டையை எதிர்த்து 26 நாள் யுத்தம்செய்து கடைசியாக ராயர் சேனாதிபதி கோட்டையைப்பிடித்துக்கொண்டான். கிருஷ்ணதேவ மகாராயன் கி. பி. 1530-ம் ஆண்டுவரையில் அரசுபுரிந்து வந்தான்.

இவ்வரசன் ஆளுகைக்குப்பின்னர் இவனுடைய புத்திரன் அச்சுதவே மகாராயன் அரசாளத்தொடங்கினான். கி. பி. 1530 ஆண்டிலிருந்து 1542-ம் வரையில் அரசுபுரிந்தான். இவன் அரசுக்குவந்த 1533 வருஷத்தில் காமாட்சிதேவியார் ஆலயத்தில் வரையப்பட்ட பட்டயத்தில் தெற்கே தாம்பரபரணி நதிதீரத்திலே தன்னுடைய வெற்றிக்கொடியைநாட்டினனென்றும் தயிலநாராயணராஜா அம்பத்தூர் மல்லாராஜா வெங்கடாத்திரி முதலிய சிற்றரசர்களை ஆதரித்தானென்றும் சொல்லப்படுகின்றது. அச்சுததேவ மகாராயன் ஆளுகையில் ஆலயதருமகயிங்கரியமான வேற்பாடுகள் பலவிடங்களில் ஏற்பட்டதாக சாஸனங்களால் தெரியவருகின்றது.

அச்சுதராயனுக்குப் பின்னர் சதாசிவ தேவமகாராயன் கி. பி. 1543-ம் ஆண்டிலிருந்து 1568-ம் ஆண்டுவரையில் அரசுசெலுத்தினான். இவ்வரசன் ஆளுகையின் 1551-ம் ஆண்டில் விஷ்ணு கஞ்சி வரதராஜர் ஆலயத்திலேற்பட்ட சாஸனத்திலே சதாசிவ தேவமகாராயன் ஆளுகையின்கீழ் காஞ்சியில் சிற்றரசனாயிருந்தவன் ராஜாதிராஜ குமாரபங்கப்ப தேவசோழ மகாராயன். இச்சோழனுக்குச் சதாசிவ தேவமகாராயன் ஷை பெருமாள் ஆலயத்தில் ஆறு உற்சவங்களை நடத்தும்படியாக ஆலயகைங்கரிய நிர்வாகிகளுக்குத் தெரிவி

க்க உத்தரவுஅனுப்பினான். இதனால் பல்லவச்சோழ அரசவம்சத்தில் வந்தவர்கள் ஆந்திர அரசர் ஆளுகையில் காஞ்சியிலும் ஏனையவிடங்களிலும் சிற்றரசர்களாயிருந்தார்களென்று ருசுவாகின்றது. இவர்களுடைய சந்ததியார் தற்காலத்திலும் ஆங்காங்கு ஏழ்மைநிலைமையிலிருக்கின்றனர்.

சதாசிவராயனுக்குப்பிறகு ஸ்ரீரங்கராயன் கி. பி. 1572-லிருந்து 1582 வரையில் அரசாண்டான். ஸ்ரீரங்கராயனைப்பற்றி சொல்லிய சாஸனங்கள் காஞ்சி ஆலயங்களில் வரையப்பட்டிருக்கிறன. இந்த ராயனுக்குப்பிறகு வெங்கடபதி தேவமகாராயன் அரசுக்கு வந்தான். 1596-ம் வருஷத்தில் ஏகாம்பரர் ஆலயத்தில் இவனுடைய ஆளுகையிலுண்டான சாஸனத்தில் சோழமண்டலத்தைச் சேர்ந்த தொண்டைமண்டலத்திலுள்ள சந்திரகிரியிலடங்கியது காஞ்சிபுரம் என்று வரையப்பட்டிருக்கின்றது. வெங்கடபதிதேவ மகாராயன் ஆளுகை கி. பி. 1631 ஆண்டுவரையில் நடைபெற்றது. இவன் காலத்தில் சந்திரகிரி பிரதானநகரமாயிருந்தது. இவனுக்குப் பிறகு ஸ்ரீரங்கராயன் சந்திரகிரிராஜியத்திற்கு அரசனானான். இவன் ஆளுகையில் ஈஸ்து இந்தியா கம்பனியார் சென்னைக்கு வந்தார்கள். இதன் பின் கி. பி. 1646-ம்ஆண்டில் கோல்கொண்ட மகமதியர் காஞ்சிபுரத்தையும் அதைச்சேர்ந்த நாடுகளையும் பிடித்துக்கொண்டு சுமார் 30 வருஷம்வரையில் ஆண்டுவந்தார்கள். 1667 - ம் வருஷம் மராட்டியர் சிலகாலம் மேற்படி காஞ்சியில் தங்கியிருந்தார்கள். இதன்பின்னர் ஔரங்கஜீப்பின் சேனைத்தலைவனாகிய ஸால்பர்கான் மராட்டியரை அடக்கிவிட்டு காஞ்சிபுரத்தைத் தன்வசமாக்கிகொண்டான். மகமதியர்கள ஏறக்குறைய 90 வருஷம் காஞ்சிபுரத்தையாண்டுவந்தார்கள். இதன்பின்னர் காஞ்சிபுரம் ஆங்கிலேயர் ஆளுகையிலிருக்கிறது.

பல்லவராஜ்யமாகிய தொண்டைமண்டலத்திற்கு இராஜதானியாகிய காஞ்சீபுரத்தைப் பல்லவ அரசர்கள் நெடுங்காலமாக அதாவது கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரும் பின்னரும் சுமார் 1500 வருஷமும், இவர்களுக்குப்பின்னர் சோழப்பல்லவர்கள் சுமார் 300 வருஷமும், இதன்பின்னர் ஆந்திர அரசர்கள் சுமார் 200 வருஷமும், மகமதியர் சுமார் 100 வருஷமும் அரசுசெலுத்தினார்களென்றும் கடைசியாக ஆங்கிலேயர் அரசுசெலுத்திவருகிறார்களென்றும் பல

வகையான பிரமாணங்களைக்கொண்டு காலவரையுடன்மேலே நிரூபித்துக்காட்டப்பட்டிருக்கின்றது.

டாக்டர் பர்னல்துரையவர்களால் வெளியிடப்பட்ட தென்னிந்தியா பாலியா கிரபி என்னும் புத்தகத்தின் 35-வதுபக்கத்தில் பல்லவ அரசர்களை கீழ்நாட்டு சேரர் என்று கூறுகின்றார். 36 - வதுபக்கத்திலே "இந்தப் பல்லவர்களைப்பற்றி மிகவும் சொற்பவிஷயமே தெரிந்திருக்கின்றது. வர்மன் என்னும் பட்டப்பெயரானது இவர்களுக்கும் வெங்கி அரசருக்கும் சாதாரணமாய் வழங்கப்பட்டிருந்கின்றது, இவற்றுலும் இன்னும் சிலவிஷயங்களாலும் வெகுவாய் ஒரு வம்சத்தவராயிருக்கலாமென்பதற்கு ஆதாரமாகின்றது. இவர்கள் சேரசோழ சளுக்கிய வம்சத்தாரோடு கலியாணசம்பந்தத்தால் சினேகமும் வேறு விஷயத்தால் சச்சரவும் உற்றிருந்தார்கள். ஆனல் 11-வது நூற்றுண்டில் இவர்கள் சோழருக்குக் கீழ்பட்டிருந்ததனுல் அடிக்கடி மேற்றிசை சளுக்கியர்களால் எதிர்ககப்பட்டார்கள்" என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஷை பர்னல் துரையவர்கள் பல்லவவம்சத்தவர்கள் சேரசோழ சளுக்கிய அரச வர்க்கத்தவர்களுடன் பெண்கொடுத்தல் கொள்ளல் முதலிய கலியாண சம்பந்தத்தால் சினேகமாயிருந்தார்களென்று கூறுதலாலும், பூர்வசாலப்பட்டயங்களும் நூல்களுங் கலியாண சாம்பரதாயங்களைத் தெரிவிக்கின்றமையினுலும் அரசாட்சி மாறுபட்ட பின்னர் மேற்படி வம்சத்தவர்கள் பல்லவகுலமென்றும், சம்புகுலமென்றும், சம்புகுல பல்லவரென்றும், வன்னிகுலமென்றும் சொல்லப்படுகின்றனர். ஆந்தர அரசர் ஆளுகையின் முன்னரும் அதன் பின்னரும் மேற்படி வம்சத்தவர்கள் ஒருவம்சத்தவர்களாகப் பாவிக்கப்பட்டுவருகின்றனர்.

வெங்கடபதி தேவமகாராயன் கி. பி. 1605 ஆண்டுவரையில் அரசுசெலுத்தினன். இதன்பின்னர் ஆந்தர அரசாட்சி நாளுக்குநாள் க்ஷிணதிசையில் வந்துவிட்டது. இந்தருணத்தில் கி. பி. 1646-ம்வருஷம் கோல்கொண்டாவில் அரசுசெலுத்திவந்த மகமதியர்கள் காஞ்சிபுரத்தையும் அதைச்சார்ந்த நாட்டையும் தங்கள்வசப்படுத்தி யாண்டு வந்தார்கள். ஆண்டுவரும்நாளில் மகமதியர்கள் இந்துசமயத்திற்கு நேர்விரோதமுடையவர்கள் என்பதற்கு அறிகுறியாக இந்துக்கள்

ஆலயங்களைப்பற்பலவிடங்களில் அழித்திருக்கின்றனர். சிவகஞ்சியில் கங்கைகொண்டான் மண்டபத்திற்கு மேலண்டையிலிருக்கும் சிவன் கோயில் மண்டபத்தை மகமதியர் தங்கள் ஆளுகையின் வன்மையால் மசூதியாக வாக்கிக்கொண்டனர். இக்காலத்தில் சமயசம்பந்தமான குழப்பங்களிருந்தன. இவர்கள் ஆளுகை காஞ்சியில் 1752-ம்வருஷம் வரையிலிருந்தது. இதன்பின்னர் ஆற்காட்டில் நவாப்புவாகிய மகமடாலிக்கும் சண்டாசாகிப் என்பவனுக்கும் நடந்த சண்டைகளில் ஈஸ்திந்தியா கம்பெனியார் மகமடாலிக்கு உதவியாய்நின்று உதவி செய்து ஜெயம்பெற்றமையால் மேற்படி மகமடாலி என்பவனால் டெல்லி சக்கிரவர்த்தியின் அனுமதிபெற்று மேற்படி கம்பெனியாராகிய ஆங்கிலேயருக்குச் செங்கல்பட்டு ஜில்லாவையும் இன்னும் சில பாகங்களையும் கி. பி. 1765-ம் வருஷம் ஜாகிராகக் கொடுத்துவிடப் பட்டன. இந்த ஜாகிர் கம்பெனியார்வசம் வந்தபிறகு அதையாள்வதற்குரிய இராஜாங்கமுறைமையான ஏற்பாடுகள்செய்துவருங் காலத்திலே மைசூர் நாட்டினின்று ஐதராலி யென்பவன் ஆங்கிலேயருக்கு விரோதமாய் ஜாகிரின்மீது கி. பி. 1768, 1780 வருஷங்களில் படையெடுத்துவந்து அனேகவிடங்களை நெருப்புக்கும் கத்திக்கு மிரையாக்கிவிட்டான். கடைசியாக 1784 ஆண்டில் நடந்த சண்டையில் ஜாகீரைச்சேர்ந்த அனேக பாகங்களிலுள்ள கிராமங்கள் சுட்டெரிக்கப்பட்டும் அனேகவிடங்களில் வீடுவாயல்களும் சத்திரங்களும் குட்டிச்சுவர்களாக்கப்பட்டும் பயிரிடும்நிலங்கள் பாழாக்கப் பட்டுங்கிடந்தன. அக்கொடியோனால் சங்காரஞ்செய்யப்பட்டவர்களுடைய மண்டையோடுகளும் எலும்புகளும் எங்கும் பரவியிருந்தன. காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தின் மேலண்டைகோபுரம் அக்காலத்தில் அவனால் அழிவுபட்டதென்பதற்கு அறிகுறியாக வின்னுங்காணக்கிடக்கின்றது. இவ்வகையாக ஐதராலிசெய்த கொடுமையினாலும் துன்பத்தினாலும் பற்பல கிராமங்களிலுள்ள குடிகள் தத்தம் ஊர்களை விட்டு நிர்ப்பயமானவிடங்களுக்கு ஓடிவிட்டார்கள். இதற்கு இடையில் குடிகளில்லாமல் பாழ்பட்டுக் கிடந்தவூர்களில் யாதொரு சுதந்தரமில்லாதவர்கள் குடிபுகுந்தனர். கலகமும் குழப்பமும் தணிந்தபின்னர் கிராமங்களுக்குரிய காணியாட்சிக்காரர்கள் வந்து தங்கள் நிலங்களைவிடும்படி அவர்களைக்கேட்கையில் எங்களுக்கே சொந்தமென்றும் இன்னகாலத்தில் இன்னரால் விடப்பட்டதென்

றும் சொல்லிவிட்டார்கள். அக்காலத்தில் மகமதியர் ஆளுகையிலிருந்து ஆங்கிலேயர் ஆளுகைக்கு ஜாகிராக வந்தபிறகு மூன்றுதரம் ஐதர் படையெடுத்து அனேக பாகங்களைப் பாழ்படுத்தினமையினால் நாடு அமைதியில்லாமல் கலகப்பட்டிருந்த சமயத்தில் ஈஸ்திந்தியா கம்பெனியார் நிலச்சுதந்தரங்களை அறிந்து ரிபோர்ட்டு செய்யும்படி பிளேசு துரை அவர்களை ஜாகிருக்கு கலெக்கட்டராக 1794-ம்௵ நியமனஞ் செய்தனுப்பினார்கள். இவ்வேற்பாடு ஐதராலிசண்டைக்கு 10 வருஷத்திற்குப்பின் நடந்தது. மேற்படி துரையவர்கள் கிராமங்களை நேராய்ப்போய் பார்த்ததில் அனேக கிராமங்களில் மிராசுதாரர்களில்லாமலிருந்ததாகச் சொல்லுகின்றார். இங்ஙனஞ் சொல்லுவதால் இன்னார்தான் நிலத்திற்குச் சொந்தக்காரர்களென்று துரையினால் கண்டறிதல் கூடாமையாய்விட்டது. யார் யார் என்னசொன்னபோதிலும் கேட்கவேண்டிய சமயமாயிருந்தது. அனேகர் தத்தம் வாக்குவல்லபத்தாலும் சாதுரியத்தாலும் நிலச்சுதந்தரங்களைத் தேடிக்கொண்டார்களென்று தெரியவருகின்றது.

எங்ஙனமெனில் மேற்படி பிளேசு துரையவர்களிடத்தில் வேளாளர்கள் சொல்லிய கதையாவது தொண்டமண்டலத்திலே ஆதொண்டை சக்கரவர்த்தி அரசுசெலுத்திய காலத்தில் பயிர் செய்வதற்கு மேல் நாட்டினின்றும் துளுவ நாட்டினின்றும் சோழநாட்டினின்றும் முறையே கொண்டைகட்டி வேளாளரையும் துளவவேளாளரையும் சோழ வேளாளரையும் மூன்றுலட்சம் பேர்களை வரவழைத்துக்குடியேற்றி தொண்டமண்டலத்தின் நிலங்களைத் திருத்தி பயிரிடும்படி சக்கரவர்த்தி உத்தரவு செய்தானென்றும், அவன் ஆளுகைகாலத்தில் தங்களுக்கு நிலச்சுதந்தரம் கொடுக்கப்பட்டதென்றும், துரை அவர்கள் மிராசு பாத்தியத்தை விசாரித்த காலத்தில் வேளாளர் சொல்லியதாக மிராசுரையட் என்னும் புத்தகத்தில் விரிவாக வெழுதப்பட்டிருக்கின்றது. அன்றியும் காஞ்சியில் வேளாளருக்கு ஆசாரிய பீடமாகிய ஞானப்பிரகாச மடத்திற்கு மேற்படி துரையவர்களை யழைத்துப் போய் அம்மடத்திலுள்ள செப்பேட்டையும் ஓர் ஓலைச்சுவடியும் அவருக்குக்காட்டினார்கள். அவைகளில் 24 கோட்டங்களின் பெயர்களையும் 79 நாடுகளின் பெயர்களையும் எழுதப்பட்டிருப்பவற்றையும் ஏனைய வேளாளர் சிறப்பு பாடல்களையும் படித்துக்காட்டினார்கள் ஒவ்வொரு சிறிய நத்தத்திலிருப்பவர்கள் ஒருவராகனும் பெரிய நத்தத்

திலிருப்பவர்கள் இரண்டுவராகனும் மேற்படிபட்டத்திற்கு வருஷவாரி கட்டணம் செலுத்தி வரவேண்டுமென்றும் எழுதப்பட்டிருப்பவற்றையுங் காட்டினார்கள்.

திருக்கழுக்குன்ற புராணம்.

கோட்டமோரிருபானான்கு கூறுநா டெழுபத்தொன்பான்
றேட்டெழி லாயிரத்துத்தொளா யிரநத்தமாகுந்
தாட்டெழுகோத்திரங்கள் சகத்திரம் பன்னிரண்டாம்
நாட்டில்வேளாளர்தம்மை நவின்றிட வடங்காலக்கம்.

மேல்குறித்தபாடலில் 24-கோட்டங்கள் 79 நாடுகள் 1900 நத்தங்கள் 12000 கோத்திரங்கள் வேளாளருக்குரியதென்று சொல்லப்படுகின்றது. ஏர் எழுபதுபாயிரம் 4-வது 5-வது செய்யுள்களில்

"செம்பியன் மரபினோர்தா மெலாம் பிறந்திலிப பல்வளத்தின் வாழுமண்டலம்" என்றும் "ஒலிகெழுசீரெழுபத்தொன்பது நாட்டுக் குடியுடையான் சென்னி" என்றும் கூறப்பட்டிருத்தலால் சம்புகுலமரபினர் வாழும் மண்டலமென்றும், சம்புகுல வாசன் 79 நாட்டுவேளாளர்களைக்குடியாக உடையான் என்றும், சொல்லப்படுவதில் காணியாட்சி சுதந்தரம் வேளாளர் அல்லாத ஏனையஜாதியாருக்கு முரியதென்று ஏற்படுகின்றது.

பல்லவ ராஜ்ஜியத்தைக் கோட்டங்களாகவகுத்து ஒவ்வொரு கோட்டத்திற்கும் இத்தனை நாடுகளென்றும் ஒவ்வொரு நாட்டிற்கு அக்கிராரம் மன்னர்வேடு நத்தமென்றும் பல்லவர்கள் ஆளுகையிலேயே வகுப்பட்டிருக்கின்றன. இங்ஙனமிருக்க ஆதொண்டை சக்கிரவர்த்தியால் வேளாளருக்குமாத்திரம் காணியாட்சி சுதந்தரம் கொடுக்கப்பட்டதென்பதும், மற்றவர்களுக்கில்லையென்பதும், முற்றும் தவறும். இதுவன்றியும 24 கோட்டங்களுக்கு 79 நாடுகளை சொல்லப்படுகின்றன. சாஸனங்களில் எயில் கோட்டம் எயில் நாடென்றும் புழல்கோட்டம் புழல்நாடென்றும் வரையப்பட்டிருக்கின்றது. மிராசுரையட் என்னும் புத்தகத்தில் கோட்டங்கள் பெயரையுடைய நாடுகளை நீக்கி 79 நாடுகள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. 79 நாடுகளுடன் 24 கோட்டங்களின் பெயரையுடைய நாடுகளைச்சேர்த்தால் 103 நாடுகளாகின்றது. 79 நாடுகளுக்குச்சொந்தமுடையார் கோட்டங்களின் பெயரையுடைய நாடுகளுக்கு உரியர் அல்லர்போலும். மேற்கு

றித்த 103 நாடுகளன்றி வேறுநாடுகளின் பெயர்கள் பட்டயங்களில் காணப்படுகின்றன. எங்ஙனமெனில் மணிமங்கலம் இராஜகோபால பெருமாள் ஆலயத்தின் வடவண்டை மேலண்டைமதில்களில் வரை யப்பட்ட சாஸனத்தில் + + + ஸ்ரீ ராஜாதிராஜதேவற்குயாண்டு 29-வது ஜயங்கொண்ட சோழமண்டலத்து செங்காட்டுக்கோட்டத்து மாகணூர்நாட்டு மணிமங்கலமான ராஜசூளாமணி சதுர்வேதிமங்க லத்து மகாசபையோம் + + + என்றிருப்பதில் மாகணூர்நாடு செங் காட்டுக்கோட்டத்தில் சேர்க்காமல் பென்னலூர்நாடு அதிகத்தூர்நாடு இரண்டையே குறித்திருக்கின்றது. இதுபோலவே நாடுகளின் பெயர் கள் சாஸனங்களிலிருப்பதுபோல மிராசுரைய்ட் என்னும் புத்தகத் தில் காணப்படாமையால் கலெக்டர் பிளேசுதுரையவர்களுக்கு மிராசு சுதந்தரத்தைக்காட்டும்பொருட்டு தேடிச்சொன்ன கதையே யாம்.

தொண்டமண்டலத்திலுள்ள பலவகைஜாதிகளில் ஐந்தில் மூன்று பங்கு சம்புகுலப்பல்லவர்கள்வசிக்கின்றார்கள். இவர்கள் பெரும்பா லும்காணியாட்சிக்காரர்களாயிருந்தார்களென்றுபலவகையானபட்ட யங்களாலும் எல்லைக்கற்களாலும் ஸ்பஷ்டமாகின்றது.எங்ஙனமெனில் சம்புகுலப்பல்லவர் ஆளுகையிலும் ஆரிய அரசர் ஆளுகையிலுமேற் பட்ட பட்டயங்களில் காணியாட்சிக் காரனென்றும் கரைக்காரனென் றும் ஒருவர்நிலத்தை மற்றொருவருக்கு விற்கவும் வாங்கவுமிருந்ததா கச்சொல்லப்படுகின்றது; எங்ஙனமெனில்:—

திருமலையின் வெளிப்புறத்திலுள்ள வோர்சாஸனத்தில் எழு தப்பட்ட கல்வெட்டில் சொல்வதாவது + × + ஸ்வஸ்தி திரிபுவன சக்கரவர்த்திகள் ராஜராஜதேவற்கு யாண்டு இருபதாவது முதல் ஜயங் கொண்ட சோழமண்டலத்து தமனூர்நாட்டுவீரன் பாக்கத்து இலாள ப்பெருமாள் மகன் ஆண்டான்கள் பங்காளராயருக்குப் பல குன்றக் கோட்டத்துப்பங்காளநாட்டு நடுவில் குன்றத்தூரான இராஜகெம்பீர நெல்லூர் இவருக்குக் காணியாக கீழ்நோக்கின கிணறும் மேனோக்கின மரமும்நாற்பாங்கெல்லையும்விற்றொற்றிப் பரிக்கிரயத்திற்குஉரித்தாவ தாகக் கொடுத்தோம்; அத்திமல்லன் சம்புகுலப்பெருமாளான ராஜ கெம்பீர சம்புவராயன் + + + என்று 725 வருஷங்களுக்குமுன்னர் அரசுபுரிந்த இராஜராஜதேவன் காலத்தில் ஏற்பட்ட சாஸனத்தால் காணியாட்சி இருந்ததாகத் தெரியவருகிறது.

வந்தவாசி தாலுக்காவைச்சார்ந்த உக்கலிலுள்ள ஆலயமண்டபத்தின் வடவண்டை மதிலில் வரையப்பட்ட கல்வெட்டிலே:—

+ + + சோழநாட்டும் சோழநாட்டுபேடும் புறக்கணி நாடுகளிலும் தொண்டை நாட்டிலும் பாண்டிநாடான ராஜராஜவளநாட்டிலும் பாப்பான் ஊர்களிலும் வைகானசர் ஊர்களிலும் சமணர் ஊர்களிலும் காணியுடையார் யாண்டு 16-வது முதல் 23-வது வரையில் ஈராண்டுநிரம்பி மூவாண்டு தத்தங்காணியான நிலங்களுக்கு அவ்வவ்வூர்களிலாரோடும் ஊரிடுவரிப்பாடு இறை இறுது போனுர் காணியுடையாரைத்தவிர ஊர்நிலமாய் அவ்வவ்ஊர்களிலிலாரே விற்றுக்கொள்ளப் பெறுவாராகவும் என்று இப்பரிசு திருவாய் மொழிந்தருளினபடி திருமந்தரவோலை ராஜகேசரிநெல்லூர் கிழவன் எழுத்தினுலும் திருமந்தரவோலை நாயகன் மும்முடி சோழபிர்மராயனுலும் + + + என்று எழுதியிருக்கின்றது.

முதலாவது ராஜராஜசோழன் கி. பி. 985 ஆண்டில் அரசாளத்தொடங்கியவன். இவன் ஆளுகையில் மேற்கூறிய நாடுகளிலுள்ள எல்லாக்குடிகளும் நிலங்களைவிற்கவும் வாங்கவுமிருந்தார்களென்று மேற்படி கல்வெட்டு தெரிவிக்கின்றது.

வீரசிங்கராய ஆளுகை கி. பி. 1429 ஆண்டிலேற்பட்ட தாம்பர சாஸனத்தில் + + + கம்பங்குளத்திற்கு அடுத்த கிருஷ்ணவோடையிலிருக்கும் வன்னியராஜ கோத்திரம் மூக்காநாயகன் குமாரன் முத்தையப்ப நாயகன் உள்ளிட்டார் அனைவரும் யாம் எங்கள் காணியாட்சிகிராமமான கிருஷ்ணவோடை கிராமம் பாதிகொள்வாரோ + + + என்று எழுதப்பட்டிருக்கின்றது.

காஞ்சியில் ஸ்ரீராஜவல்லபன் கி. பி. 1456 ஆண்டில் அரசியற்றிய காலத்தில் ஏற்பட்ட தாம்பரசாஸனத்தில் + + + வன்னிய சின்ன பிள்ளைதந்தரியுள்ளிட்டார்க்கு எழுதிகொடுத்த கிரையசாஸனம் எங்கள் கிராம காணியாட்சியான சாத்தாங்காடு + + + என்று எழுதப்பட்டிருக்கின்றது.

மேல் எடுத்துக்காட்டிய சாஸனங்களைப்போலவே இன்னும் அனேக சாஸனங்களில் காணியாட்சி சுதந்தரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இச்சாஸனங்கள் வரையப்பட்ட கால வரைகளுக்கு

முன்னரும் பின்னரும் ஏற்பட்டவைகளில் பலவகையான ஜாதிகள் தங்கள் காணியான நிலங்களை விற்கவும் வாங்கவுமிருந்ததாகப் பற்பல பட்டயங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அனேக நாடுகளடங்கிய தொண்டமண்டலத்திலே வேளாளருக்கு மாத்திரம் காணியாட்சி அல்லது மிராசு பாத்திய முரியதென்பதும் ஆதொண்டை சக்கரவர்த்தியால் கொடுக்கப்பட்டதென்பதும் முற்றும் தவறும். இவ்வித பேதம் மிராசு ரைய்ட் என்னும் புத்தகத்தில் எழுதியிருப்பது "முழு பூசனிக்காயை இலைச்சோற்றில் மறைப்பதை" ஒக்கும்.

சம்புகுலபல்லவர்கள் காஞ்சியில் சிற்றரசர்களாயும் இராஜகாரிய நிர்வாகிகளாயும் ஆந்தர அரசர் ஆளுகையிலிருந்தார்களென்று பல பிரமாணங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றனர். இவ்வகையாக விருந்தவர்கள் மகமதியர் ஆளுகைகாலத்தில் நாளுக்குநாள் க்ஷீணதிசையில் வந்துவிட்டார்கள். ஆந்தர அரசர் ஆளுகையில் சம்புகுலபல்லவர்களாகிய 'இராஜேந்திர பல்லவராயன்' 'வீரசம்பபிரமராயன்' 'சம்புவராயன்' 'வீரசம்புவராயன்' 'விஜயகண்டகோபாலதேவன்' 'குமார பங்கப்ப தேவசோழ மகாராயன், முதலியவர்கள் சிற்றரசர்களாயிருந்தார்களென்று ஏகாம்பரேஸ்வராலயம் காமாட்சிதேவியாராலயம் அஷ்டபுஜம், வரதராஜப்பெருமாளாலயம், விளக்கொளிபெருமாளாலயம், கைலாசநாதாலயம் முதலியவைகளிலுள்ள பட்டயங்களால் தெரியவருகின்றது.

காஞ்சிபுரம் தொண்டமண்டலத்தைச் சேர்ந்த நாடுகளுக்கெல்லாம் தலைமை நகரமாயிருந்தது. சம்புகுல பல்லவர்களின் தலைமைஸ்தானத்தை வகித்தவனுக்கு வீரசம்புவாராயன் அல்லது வீரசம்பு என்னும் பட்டம்வழங்கிவந்தது. இவர்கள் செல்வாக்குக்குறைவுபட்ட காலத்தில் பல்லவராஜ்ஜியத்திலுள்ள நாடுகளுக்கும் மகாநாட்டதிபதியாக விருந்து குலசம்பந்தமான வியவகாரங்களையும் ஏனையபஞ்சாயத்து வழக்கு முதலியவைகளையும் நடுநிலையாக விருந்து தீர்மானஞ் செய்துவருகிறவழக்கமிருந்தது. இவர்கள் அதிகாரமும் செல்வாக்கும் பிரபலப்பட்டிருந்தகாலத்தில் இவர்களிடத்தில் நவுக்கர்களாயிருந்தவர்கள் ஓர்வகை தெலுங்குஜாதி. இந்த ஜாதியார் தற்காலத்தில் நோக்கர்கள் என்று சொல்லப்படுகின்றனர். காஞ்சிமகாநாட்டு வீரசம்புவராயர்கள் குலசம்பந்தமான வியவகாரங்களுக்கு மிகுந்த ஆடம்பரத்து

டன் காஞ்சிமகாநாட்டைச்சேர்ந்த நாடுகளுக்குச்செல்லுகையில் கொடிபிருது, கொம்பு, குழல்முதலிய அரசசின்னங்களை நவுக்கர்கள் தாங்கிக்கொண்டு வீரசம்புவாராயருடன் செல்லுவதுண்டு. வீரசம்புவராயர்கள் செல்வமும் சம்பத்தும் குறைவுபட்டுவந்தகாலத்தும் பெருமையுற்றிருந்ததற்குக் காரணமென்னவெனில் காஞ்சிமாநகரம் பல்லவராஜ்ஜியத்திற்குத் தலைமைநகரமாயிருந்தமையினாலும் அதில் சம்புகுலப்பல்லவர்கள் நெடுங்காலமாக அரசுபுரிந்துவந்தமையினாலும், சம்புகுலவம்சத்தலைவருக்கு வீரசம்புவென்னும் பட்டம் ஆந்தர அரசராளுகையின் முன்னரே வழங்கியதாகப் பல சாஸனங்கள் தெரிவிக்கின்றமையினாலும் மகமதியரால் பிடிபட்டவர்களை மீட்டுவந்தமையால் சிறைமீட்ட வீரசம்பு மகாநாட்டாரென்று அழைக்கப்பட்டுவந்தமையாலும் வீரசம்பு மகாநாட்டார் எல்லாநாடுகளிலும் யாவராலும் மதிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் 250 வருஷங்களுக்குமுன் சிறப்புப் பெற்றிருந்தார்களென்று பல ஆதாரங்களால் நிச்சயப்படுகின்றது.

வீரசம்பு மகாநாட்டார்களிடத்தில் நவுக்கர்களாயிருந்தவர்கள் தங்கள் எஜமான்களால் கொடுக்கப்படும் நிருபங்களை வெளிநாடுகளுக்குச்சென்று அவ்வந்நாட்டார்களுக்குக் கொடுப்பதும் அவர்களால் கொடுக்கப்படும் நிருபங்களைப்பெற்றுவந்து வீரசம்பு மகாநாட்டாரிடத்தில் சேர்ப்பதுமாகிய நவுக்கர்வேலையிலிருந்தார்கள். இங்ஙனமிருக்கையில் அரசாட்சிகள் மாறுபட்டுவருங்காலத்தில் இவர்களிடத்திலிருந்த நவுக்கர்களைப் பொருள்கொடுத்து போஷிப்பதற்குக் கூடாமையாய்விட்டது. இதன்பின்னர் வீரசம்புமகாநாட்டார் தம்வம்சத்திற்குச் சொந்தமாகிய கொடிபிருது முதலியவைகளை நோக்கர் (நவுக்கர்) வசம்கொடுத்து ஒவ்வொருதலைமைநாட்டு அதிகாரிகளிடம் சென்று அவர்கள் அனுமதிபெற்று அவ்வந்நாடுகளில் அடங்கிய கிராமங்களிலுள்ளவர்கள் தலைக்கட்டுவீதம் கொடுப்பதைவாங்கி ஜீவித்துவரும்படியும் சம்புகுலப்பல்லவர்களாகிய வன்னியர்களின் பிரபாவங்களை எடுத்துச்சொல்லும்படியும் வீரசம்புமகாநாட்டார் உத்தரவு கொடுத்தனுப்பிவிட்டார். இவ்வுத்தரவையனுசரித்து நோக்கர்கள் காஞ்சிமகாநாட்டைச்சேர்ந்த நாடுகளில் நாளதுவரையில் ஜீவித்துவருகின்றனர். இவர்கள் ஒவ்வொருகால் காஞ்சிமகாநாட்டு வீரசம்புவராயர்களுக்குச் சால்வைகளும் குதிரை முதலியவைகளும் மரியாதையாகச்செய்து விட்டுபோகும் வழக்கமுண்டு. அன்றியும் நோக்

கர்களுக்குள் நேரிடும் வழக்குகளை வீரசம்பு மகாநாட்டாரிடம் வந்து தீர்த்துக்கொண்டு போதல் இன்றும் நடைபெற்று வருகின்றது. இவர்கள் வைத்துக்கொண்டிருக்கும் செப்பேடுகள் ஆதியில் மகாநாட்டாரால் கொடுக்கப்பட்ட செப்பேட்டிற்கு முற்றும் மாறுபட்டவையாம். மாறுபட்டிருப்பினும் ஒவ்வொன்றிலும் காஞ்சி மகாநாட்டு வீரசம்பு வராயர்களையே குறித்துக்கூறுகின்றன. இதனால் வீரசப்புவராயர்கள் வம்சபரம்பரையார் பெருமையும் சம்பத்து முடைவர்களாயிருந்தார்களென்று நிச்சய மாகின்றது.

நோக்கர்களைப்பற்றிய உண்மை யிவ்வாறாக விருக்க, தென்னிந்தியாவின் ஜாதிகளையும் குலங்களையும் குறித்து தர்ஸ்டன் துரையவர்களால் எழுதப்பட்ட புஸ்தகம் 6-வது வாலியம் பள்ளிகள் அல்லது வன்னியர்கள் என்கிற மகுடத்தின் கடைசிபாகத்தில் நோக்கர்களைக் குறித்து எழுதியிருக்கும் கதைவருமாறு. இக்கதையானது நோக்கர்களிட மிருக்கும்பட்டயங்களாலும் அவர்கள்மேற்படி துரையவர்களுக்கு நேரில் சொல்லியவைகளாலும் எழுதப்பட்டதாகத் தெரிய வருகின்றது, அதாவது:—

"பூர்வத்திலேகாஞ்சிபுரமானதுசோழராஜ்ஜியத்திற்குஇராஜதானியாகவும்ஜாதிகளுக்குத்தலைமை நகரமாகவுமிருந்தது. இந்நகரத்தைச்சாலிவாகனனென்னும் ஓர் அரசன் அரசாண்டுவந்தான். இங்ஙனம் வரும்நாட்களில் வரதராஜராலயத்திலும் ஏகாம்பரேஸ்வராலயத்திலும் காமாட்சிதேவியாராலயத்திலும் பிரமோற்சவங்கள் பலஜாதிகளால் நடத்தப்பட்டுவந்தன. இங்ஙனம் நடத்தப்பட்டுவரும் நாட்களில் சாலியர்கள் ஜனத்தொகையில் அதிகமாயிருந்தார்கள். அக்காலத்தில் வன்னியர்களுக்கும் சாலியர்களுக்கும் விரோதமிருந்தது. பிரம்ம உற்சவத்தில் இரதோற்சவம் வன்னியர்களால் நடத்தப்பட்டுவருகையில் சாலியஜாதியில் மந்தரவாதி ஒருவன் மந்தரசக்தியில் வல்லவனாயிருந்தான். அவன் தன் மந்தரத்தால் பல்லாயிரம் ஜனங்களா லிழுக்கப்படும் இரதத்தை அசையவொட்டாமலும், நகரவொட்டாமலும் செய்து விட்டான். செய்துவிடவே வன்னியர்கள் இன்னும் மிகுதியான ஜனங்களைக்கொண்டும் யானைகுதிரைகளைக்கொண்டும் இரதத்தை யிழுத்தும் அதுநின்ற விடத்தைவிட்டு நகரவில்லை. இதன்பிறகு சாலியர்கள் தங்கள் வல்லமையைக்காட்டும் பொருட்

டு சாலிவாகனன் என்னும் அரசனிடத்தில்போய் வன்னியர்களால் நடத்தப்படும் இரதத்தை அதன் நிலையில் சேர்க்காமல் யாவருக்கும் பொதுவாகிய நடுவீதியில் இரதத்தை விட்டிருப்பதால் ஜனங்களுக்கு இடையூறாகவிருக்கின்றதென்று சொன்னார்கள். சொல்லவே சாலிவாகனன் உடனே வன்னியர்களை வரவழைத்து விசாரித்தபோது அவர்கள் யானைகுதிரைகளைக்கொண்டும் அனேக ஆயிரம் ஜனங்களைக் கொண்டு இழுத்தும் அது அசையவில்லையென்று சொன்னார்கள். இதைக்கேட்ட சாலிவாகனன் இன்னகாலத்திற்குள் இரதத்தை அதன்நிலையில் சேர்க்கவேண்டியது. அப்படி சேர்க்காவிட்டால் உங்கள் யாவரையும் என்னுடைய இராஜ்ஜியத்தைவிட்டு துரத்திவிடுவேனென்று கண்டிப்பான கட்டளையைக்கொடுத்து அனுப்பிவிட்டான்.

இதன்பின் வன்னியர்கள் சாலிவாகனன் செய்த கட்டளைக்கஞ்சித்தங்கள் குலதேவியாகிய காமாட்சியம்மை சந்நதியில் போய்த் தங்களுக்கு நேரிட்ட துன்பங்களைச்சொல்லி முறையிட, அம்பாள் வன்னியர்களின் தலைவன் கனவில்தோன்றி "மந்தரவாதியாகிய சிம்ம நட்டியை வெல்வதற்குக் கொடகுதேசத்து அரசனிடத்தில் பிரதானமந்திரியாயிருக்கும் இராமசாமிநாயக்கன் ஒருவனாலேயே அவனை ஜெயிக்கமுடியும் மற்றவர்களால்முடியாது. அவன்தன் மந்திரவல்லபத்தால் இரதத்தை நிலையில் சேர்ப்பான்" என்று சொல்லிமறைந்தாள். விடிந்தபின்பு அம்பாள் கனவில் சொன்னவைகளை மற்றவர்களிடம் தலைவன்சொல்ல, அவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து யோசித்து தைரியசாலியாயுள்ள ஒருவனைக் கொடகுதேசத்திற்கனுப்பினார்கள். அவன் போய் கொடகு இராஜனைக்கண்டு சாலிவாகனனாலும் சாலியர்களாலும் நேர்ந்ததுன்பங்களைச்சொல்லி, அவரது பிரதான மந்திரியாகிய இராமசாமிநாயக்கனை அனுப்பும்படி கேட்டுக்கொண்டான். இவன் கேட்டுக்கொண்டதற்கு இராஜனும் மனமிரங்கி, அவனுடன் தனது பிரதான மந்திரியை அனுப்பினான். அவன் காஞ்சிபுரம்வந்து சேர்ந்துஇரதம் நிற்குமிடத்திற்குச்சென்று தனது மந்திரசக்தியைக்கொண்டுபலவாறாக முயற்சித்தும் யாதொரு பயனுமில்லாமல் போய்விட்டது. போய்விடவே மனம் வாடிகாமாட்சியம்மை சன்னதிக்கு ஏகி அம்பாளை ஸ்தோத்திரஞ்செய்தும் உபவாசமிருந்தும் சன்னதியில் சயனித்துக்கொண்டான். அன்று இரவு அம்பாள் பிரசன்னமாகி தலைச்சம்பிள்ளை கருப்பிணியாகிய வோர் ஸ்திரியை இரதத்திற்குப்பலி

கொடுத்தால் உடனே இரதம் நின்ற விடத்தைவிட்டுப் பெயர்ந்துவிடு மென்று சொல்லி மறைந்தாள். இராமசாமி நாயகனுக்கு அம்பாள் கட்டளையிட்டதை வன்னியர்களுக்குத்தெரிவிக்க இக்கொடுஞ் செய்கைக்குள்ளாவதை விட அரசன் உத்தரவுப்படி ஊரைவிட்டுப்போய்விடுதல் உத்தமமென்று யோசித்திருக்கையில் இராமசாமிநாயக்கன் உடனே எழுந்து காமாட்சி அம்பாளைத்தியானித்து கருப்பவதியாகிய தனது குமாரத்தியை இரதத்திற்குப்பலி கொடுத்தான். இதன் பின்னர் அவன் தனது மூக்கில் ஓர்சிறு கயிற்றைக்கோர்த்து அக்கயிற்றை இரதத்தில் கட்டி ஒருவர் உதவியுமின்றித்தானே மூக்கினுலிழுத்துக்கொண்டுபோய் அதன் நிலையில் சேர்த்தான். இவ்வற்புதத்தைக் கண்ட வன்னியர்கள் இவன் செய்த நன்றிக்கு என்னகைம்மாறு செய்யலாமென்று யோசித்திருக்கையில் அவன் எழுந்து வணக்கமாய்க் கேட்டுக்கொண்டதாவது "இதுமுதல் வம்ச பரம்பரையாக வரும் என்னுடைய சந்ததியார்கள் வன்னியர்களின் ஜாதிப்பிள்ளைகளென்றுசொல்லவேண்டுமென்றும், அவர்கள் வம்ச பரம்பரையாக வன்னியர்களிடத்தில் தருமம் வாங்கி ஜீவித்து வரவேண்டுமென்றும், மந்திரவாதியாகிய சிம்மக்குட்டியை வென்றதற்குஅறிகுறியாக உங்களுக்குச்சொந்தமாகியகொடி பிருது முதலியவைகளைக்கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான்" என்று மேற்படி துரையவர்கள் எழுதிய புத்தகத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றது.

இது உண்மையான கதையாவென்பதைக்குறித்து யோசிப்பாம்.

காஞ்சிமாநகரம் தொண்டமண்டலத்தின் இராஜதானியென்றும் சோழமண்டலத்தின் இராஜதானி யென்றும் வித்தியாசம் தெரியாதவர்கள் சொன்ன கதையாம். இவ்விரு மண்டலங்களில் சாலிவாகனன் ஒருவன் அரசுசெய்தானென்று சரித்திரங்களிலும் சாஸனங்களிலுங் காணப்படவில்லை, ஓர்சமயம் சாலிவாகன சகாப்தம் 1833 வருஷங்களுக்கு முன்னுண்டான பெயரைக்கொண்டு கட்டிய கதையாயிருக்கலாம். பல்லாயிரம் ஜனங்களால் இழுக்கக்கூடிய இரதத்தையும் அதில் எழுந்தருளியிருக்கும் சுவாமியையும் அசையவொட்டாமல் செய்த மந்தரவாதியொருவனிருந்தான் என்பதை நம்புதல் கூடுமா? மந்தரத்தால் மாங்காய் விழுமா? என்ற பழமொழியை அறியார் நம் புங்கதையாம். இராஜாவின் பிரதானமந்திரி தன் குமாரத்தி கருப்

பணிபாயிருப்பவளைப் பலிகொடுத்து அசைக்கமுடியாத இரதத்தை மூக்குமுனையால் இழுத்துப்போனன் என்பது சொல்வார் சொன்னலும் கேட்பாருக்கு மதியில்லையா! இக்கதையாருமில்லாதவூரில் அஸ்வமேதம் செய்ததையொக்கும். பிரதான மந்திரியாயும் மந்திரத்தில் வல்லவனுயுமுள்ளவன் வன்னியர்களின் ஜாதிப்பிள்ளையென்று இது முதல் தன்வம்சபாம்பரையார் சொல்லிவரவேண்டுமென்று கேட்டிருப்பானு! காஞ்சியில் நடந்த காரியத்திற்கு எப்பக்கத்திலும் எந்நாட்டிலுமுள்ள வன்னியர்கள் நோக்கர்களுக்குத்தலைக்கட்டு வீதம்கொடுப்பதற்கு நியாயமிருக்கின்றதா? இவையெல்லாம் அரசாட்சிகள் மாறுபட்டகாலங்களில் ஏற்படுத்திக்கொண்ட கட்டுக்கதைகளாம்.

சம்புகுலபல்லவர்களாகிய வன்னியர்களின் முன்னேர்கள் காஞ்சியில் முடிமன்னர்களாயும் சிற்றரசர்களாயுமிருந்த பின்னரும் 250 வருடங்களுக்குமுன்னரும் காஞ்சிபுரம் எல்லாநாடுகளுக்கும் தலைமைநாடென்றும் மகாநாடென்றும் அழைக்கப்பட்டுவந்தமையினலும் குலசம்பந்தமான விஷயங்களிலும் ஏனைய வழககுகள் பஞ்சாயத்துகள் முதலிய விஷயங்களிலும் காஞ்சிமகாநாட்டு வீரசம்புவாராயர்கள் மகாநாட்டு அதிகாரத்தை நடத்திவருங்காலத்தில் நோக்கர்கள் என்று சொல்லப்படும் நவுக்கர்கள் ஒவ்வொருநாட்டில் குலசம்பந்தமாகக் கூடப்படும் கூட்டத்திற்கும் ஏனையகாரியங்களுக்கும் மகாநாட்டாரால் கொடுக்கப்படும் நிருபங்களைக்கொடுத்து வருதற்கும் முன்னேர்களின் புகழையும் சிறப்பையும் எடுத்துச்சொல்லுதற்கும் இவர்களைக் காஞ்சிவீரசம்பு மகாநாட்டாரால் சுமார்பத்துதலை முறைக்குமுன் ஏற்பாடுசெய்யப்பட்டதேயன்றி வேறல்ல. இதையனுசரித்தே இவர்களுக்கு எந்நாட்டிலுமுள்ள வன்னியர்கள் உதவிசெய்து வருகின்றனர். இதன் உண்மையறியாமல் அனேகர் மலைவுபடுகின்றர்கள். நோக்கர்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் வன்னிகுலத்தவர் வசிக்குமிடங்களில் சென்று காஞ்சி வீரசம்புமகாநாட்டார்களின் பெருமையைச் சொல்லியும் சம்புகுல பல்லவர்களுக்குச் சொந்தமாகிய கொடிபிருதுகளைக் காட்டியும் வருவதினலும் காஞ்சிபுரம் எல்லாநாடுகளுக்கும் தலைமைஸ்தானமாயிருக்கின்றமையினலும் காஞ்சிமகாநாட்டு வீரசம்புவாராயர்கள் நெடுங்காலமாக யாவராலும் மதிக்கப்பட்டு குன்றுமேலிட்ட தீபம்போல் பிரகாசித்திருந்தார்கள். இன்னதன்மை வாய்ந்தவர்கள் நாளுக்குநாள் தங்கள் முன்னேர்களின் பேரும் புகழும் காலபேதத்

தால் முற்றும் மறைந்து குடத்திலிட்டதீபம்போல் பிரகாசம் குன்றியிருக்கின்றனர். காஞ்சி வீரசம்புவராயர்களின் பெருமையைக்கேட்டோர்கள் தற்காலம் வந்து பார்ப்பார்களாகில் "இவர்கள்தானு சம்புகுலபல்லவர்களின் தலைமைஸ்தானம் வகித்த வீரசம்புவராயர்கள்" என்று சந்தேகிக்கும்படியான நிலைமையிலிருக்கின்றனர்.

தற்சமயம் வீரசம்பு என்று சொல்லப்படுவோரின் மகாநாட்டாரின் பாட்டனார் காஞ்சிமகாநாட்டதிபதியாக 90 வருஷத்திற்கு முன்னிருந்தவர். இவர்காலத்திலே ஏகாம்பரேஸ்வர ஆலயத்தில் பிரம்மோற்சவம் நடக்கையில் ஏழாநாள் இரதோற்சவத்தினன்று, இரதத்தின்மீது சுவாமியைஎழுந்தருளச்செய்தபிறகு, இரதத்தின் வடங்களைஜனங்கள் பிடித்திழுத்தார்கள். அது நகராமலிருந்தது. பின்பக்கமுள்ள சக்கரங்களில் நெம்புமரங்களை மென்மேலும் இடைவிடாமல் போட்டு மிதித்தும் நகராமலிருந்தது. இவ்வகையே நெடுநேரம் வரையில் போட்டுவருகையில் ஜனங்கள் வடங்களையிழுக்காமல் அசாக்கிரதையாயிருந்த சமயத்தில் மரங்களைப்பலங்கொண்டு மிதித்தவேகத்தால் இரதம் திடீலென்று கிளம்பி 30 அடி தூரம் ஓடிவிட்டது. ஓடிவிடவே முன்பக்கத்தில் இரதத்தின் சமீபத்திலிருந்தவர்கள் 50 பேருக்கு அதிகமாகவே சக்கரங்களில் அகப்பட்டு நசுங்குண்டு மாண்டனர். மாண்டவர்களில் அனேகர் இன்னார் இன்னாரென்று பகுத்து அறிதற்குக்கூடாமையாய் விட்டது. இராஜாங்கத்தார் பிரேதங்களைக்கொண்டுபோகும்படி உத்தரவுசெய்தபோது, வீரசம்புமகாநாட்டார் "இரதத்தில் அகப்பட்டுமாண்டவர்கள் என்னால் அழைக்கப்பட்டுவந்தவர்கள். ஒவ்வொருவருக்கும் 50 ரூபா வீதங்கொடுக்கவேண்டும்" என்று அதற்குவேண்டிய காரணங்களைச்சொல்லிப் பணத்தைச்சர்க்காரில் பெற்றுக்கொண்டார். இவர்யாவராலும் மதிக்கப்பட்டு மிக்கபெருமையுற்றிருந்தவரென்று சொல்லப்படுகின்றது. மூன்றுதலைமுறைகளுமுன் காஞ்சி வீரசம்பு மகாநாட்டார் பிரபலமாக விருந்தார்களென்று இதனால் தெரியவருகின்றதல்லவா? தற்சமயம் மகாநாட்டாரின் நிலைமை மாறுபட்டிருப்பதையறிந்தபுத்திமான்கள் ஒன்றுசேர்ந்துதெய்வசகாயமும்அருளுமில்லாது ஓர்குலம் கல்விமுதலியவைகளில் மேன்மையுறாதென்று பலவாறு பரியாலோசித்து, சம்புகுலப்பல்லவராய பக்தஜன சபைஎனப்பெயரிய ஓர்சபைஸ்தாபித்து நடத்திவருகின்றனர். இதன் பின்னர் காஞ்சியில் சம்புகுலபல்லவராகிய வன்னியர்களிடத்தில் அபி

மானம் ஒற்றுமை சகோதரத்துவம் தருமசிந்தை தேவபக்திமுதலிய நற்குணங்கள் மென்மேலும் விருத்தியாய் வருகின்றன.

காஞ்சியில் பல்லவ அரசர் ஆளுகையிலும் சம்பு குலப் பல்லவ அரசர் ஆளுகையிலும் சைவவைணவ ஆலயங்கள் அநேகம் கட்டப் பட்டதாகப் புராணங்களாலும் சாஸனங்களாலும் தெரியவருகின்றது. திருவேகம்பர் ஆலயத்திலுள்ள ஆயிரக்கால்மண்டப முதலியவைக ளைப்பற்றி இரட்டையர் அருளிய உலாவில் கூறப்பட்டிருக்கின்றது. இம்மண்டபமும் பல்லவ (பள்ளி) கோபுரமும் துலாதானபார மண்ட பமும் பல்லவர்களாகிய வன்னியர்கள் தங்கள்முன்னோர்களின் பேரும் புகழும் மறைபடாமலிருப்பதற்கு அறிகுறியாகத் தங்கள் சொந்தத் தில் மராமத்துச்செய்து வருகின்றனர். பூர்வகாலம் முதற்கொண்டு ஏகாம்பரேஸ்வரர் புறப்பாடாய் இக்கோபுரவாயிலில்கற்பூரதீபாராதனை நடந்தபின்னர் வாகனமண்டபத்திற்குச்செல்கின்ற ஆசாரம் இன்றும் நடைபெற்றுவருகின்றது. ஏகாம்பர சம்புவராயனால் செய்யப்பட்ட துலாபாரதானமண்டப கைங்கரியமும் மேற்படி பல்லவகோபுர கைங் கரியமும் காஞ்சி சம்புகுலபல்லவ மரபாரால் நடத்தப்பட்டுவரு கின்றது.

மேற்சொன்னகட்டடாதிகள் குலாபிமானத்தைமுன்னிட்டு பூர்வத் தில் இருந்தோர் கட்டிவித்ததாகத் தெரியவருகின்றது. எங்ஙனமெ னில் கடைச்சங்ககாலத்திலேற்பட்ட சீவகசிந்தாமணியென்னும் காவி யத்திலே காந்தர்வ தத்தை யாரிலம்பகம் 6-வது செய்யுளில்

தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளன்ன
ஓங்கு குல நைய வத னுட்பிறந்த வீரர்
தாங்கல்கட னாகுந்தலை சாய்ப்ப வருதீச்சொ
னீங்கன்மட வார்கள்கட னென்றெழுந்துப்போந்தான்.

(இதன்பொருள்) வவ்வால் பறவைகள் எக்காலத்தும் வாசஞ் செய்யப்பட்டதும நெடுநாள் பட்டதுமான ஆலவிருக்ஷங்கள் கெட்டு அழியாதபடி, அவ்விருக்ஷங்களின்று விழுதுகள்தோன்றி அவைக ளைத்தாங்கினாற்போல ஓர்காலத்துச்சிறப்பு பெற்றிருந்த வோர்குல மானது யாதொரு உதவியுமின்றித் தளர்ச்சியுற்றகாலத்திலே அக் குடியில் (குலத்தில்) பிறந்தவீரர்கள் தலைசாயக்குமாறு அபவாத(இழி ந்த) சொற்கள் பிறவாதபடி (அதாவது இன்னான் பிறந்து இக்குலம்

கெட்டதென்கிற கெடுதிச்சொற்கள் உண்டாகதபடி) தமதுகுலத்தைத் தாங்குதல் (உயரச்செய்தல்) கடமையாகும். அங்ஙனமின்றி நீங்கள் உங்கள் குலத்தைத்தாங்காது போதல் பேதையாது செய்கையாகும். ஆதலால் யானும் முயன்று பொருள்தேடி என்னுடைய குலத்தைத் தாங்குவேன் என்றுகூறி எழுந்திருந்தான் சித்தன் என்று சொல்லப் பட்டிருக்கிறது.

இதை நோக்குங்கால் ஓர்குலமானது பலஹேதுக்களால் க்ஷீண திசையுறுதலும் அக்காலத்தில் மீண்டும் அக்குலத்திலொருவர்தோ ன்றி பலவிதமுயற்சிகளால் அதனை விருத்திக்குக்கொண்டுவருதலும் பூர்வகாலத்துமிருந்ததென்று ஸ்பஷ்டமாகின்றது. குலதருமத்தை விருத்திக்குக் கொண்டுவருதல் அபிமானம் ஒற்றுமை முதலியவை களை பிருதாகக்கொண்டவீரர்கள் கடமையாம். இங்ஙனமின்றி அத்த ருமத்தைச்செய்ய முயல்பவர்களைத்தடுப்பதற்கு முன்வந்து பலவகை யிடையூறுகள்செய்யும் புத்திமான்கள் குலத்தைக்கெடுக்கும் கோடரி காம்புக்கு இணையாவர். இத்தன்மைவாய்ந்த குணமுடையார் இக் காலத்தும் முக்காலத்துமுள்ளர். இக்குணமுடையாரைக்குறித்து பொ ய்யாமொழியார்

"நலத்தின்கண் நாரின்மை தோன்றின்
அவனைக்குலத்தின் கண்ணையப்படும். என்று கூறுகின்றார்"

குலதருமமாகிய முயற்சியில் பிரவேசித்து நடத்தும்போது இடையில் நேரிடும் இடையூறுகளுக்கு ஒருசிறிதுமஞ்சாது எடுத்துக் கொண்ட நற்காரியத்தை முடிவுசெய்தலே ஆண்மையாம்.

"முயற்சிதிருவினையாக்கு முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்"

இத்திருக்குறளின் கருத்தாவது-அரசரிடத்தேயுண்டாகியமுயற் சியானது அவ்வரசரின்செல்வத்தைவளர்க்கும்.அம்முயற்சியில்லாமை வறுமையை அடையச்செய்யும் என்பதாம்.

இக்கருத்தை முன்னிட்டு சென்னையிலும் சென்னையைச்சேர்ந்த ஜில்லாக்களிலுமுள்ள சம்புகுல பல்லவர்களாகிய வன்னியர்களில் அனேககனதனவான்கள் 1888 வருஷம் ஏப்பிரல்மீ 8வ ஒன்றுகூடி யோசித்து வன்னிகுல சிறுவர்கள் கல்வியில் பயிலும்படி முயற்சி செய்தால் அதனால் எல்லாநன்மையுமடையக்கூடுமென்றும், கல்வியே

நாகரிகவிருத்திக்கு உற்றதுணையாயிருக்குமென்றும் தீர்மானஞ்செய்து அம்மகாஜனகூட்டத்திற்கு விஜயஞ்செய்திருந்த பெரும்பாலார் அபிப்பிராயப்படி வன்னிகுலக்ஷத்திரிய மகாசங்கம் என்னும் பெயரால் ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

மேற்படி மகாசங்கம் 1860-வது வருஷத்தின் 21-வது ஆக்கட்டையனுசரித்து ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. இம்மகாசங்கம்நிலைபெறும்படி ஊக்கமாய்நின்று ஸ்தாபித்த கனவான்களில் பலர்மறைந்தாரேனும் அவர்களுக்குப்பின் வந்தவர்கள் தங்கள் முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மகாசங்கத்தின்பேரும் அவர்களுடைய புகழும் கீர்த்தியும் மறைபடாமலிருப்பதற்கு மேற்படி சங்கத்தை மேலு மேலும் விருத்தியாக்கிக்கொண்டு வருகின்றனர்.

6-வது அத்தியாயம்.

இஃது வன்னிகுலத்தவர் எனப்படுவோரையும் க்ஷத்திரியர் எனப்படுவோரையும் விளக்குகின்றது.

'வன்னி' என்னும் பதமானது இதுகாறும் நாம் இதிகாச புராணாதி செப்பேடு சிலாசாசனங்களைக் காணுமிடத்து, உற்பத்தி காரணத்தைநோக்கி அரசவருக்கத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள தமிழ்ப் பதமாகவும், 'க்ஷத்ரியர்' என்பது அவ்வருக்கத்தினருக்கே தொழில் காரணமாக வழங்கப்பட்டுள்ள சமஸ்கிர்தபதமாகவும் விளங்குகின்றது. வன்னி என்பதற்கு நேர்சமஸ்கிர்கபதங்கள் அக்நி ஜோதி பாவகா, என்பனவும், க்ஷத்ரியர் என்பதற்கு நேர் தமிழ்ப்பதங்கள் காவலர் புரந்தரர், என்பனவுமாம். புட்களின்வருக்கம் ஒன்றிற்கே பறக்கிற தொழில்காரணமாகப் பறவை என்றும், இருபக்கத்திலும் சிறகு உடைமையால் பக்ஷியென்றும், இரண்டுபெயர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் வழங்கப்பட்ட பெயர்ப்பேதத்தினலேயே பறவைவேறு பக்ஷி வேறு என்று சொல்லுதல் நியாயமாமோ? ஆகாதாதலால் இதுபோலவே அரசவருக்கத்திற்கு உற்பத்திகாரணமாக விடப்பட்ட வன்னியர் என்பதும் தொழில்காரணமாகவிடப்பட்ட க்ஷத்திரியர் என்பதும் வேறு வேறு வருக்கத்தினைக் குறிக்குமோ அல்லது அவ்வரசவருககத்தினரையே குறிக்குமோ? மதியூகிகளே! தெளிமின். இந்தப் பிரமாணத்தைக்கொண்டு மகாசங்கத்தவர் தமது சங்கத்திற்கு வன்னிகுலக்ஷத்ரிய மஹாசங்கம் என்று பிரயோகித்

திருகின்றனர் இதன் உண்மையை அறியார் அக்கினிகுலத்தை மாத்திரம் குறிக்குமென்று சிலரும், சிற்றரசனை மாத்திரம் குறிக்குமென்று சிலரும் மயங்குகின்றனர். இங்ஙனம் குறிப்பதாயினும் வன்னியென்னும் மொழி அரசருக்குப் பொதுப்பெயராகவுள்ள பிரமாணங்களை இவர் அறியார்போலும். "நாற்படைவன்னியர்" இங்கு வன்னியர் என்றசொல் அரசருக்குப் பொதுப்பெயராக பிரயோகப் படுத்தப்பட்டிருக்கின்றது. இது போன்ற பிரமாணங்கள் அனேகமுண்டு.

தாஸ்டன்துரையவர்கள் எழுதியபுத்தகத்திலே அவர் கூறுவதாவது (The terms vanni or vannian are used in Tamil poems to denote the king) வன்னி அல்லது வன்னியன் என்னும் பதங்கள் தமிழ்செய்யுட்களில் அரசன்என்ற பொருளில் உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றதென்று கூறுகின்றார். வன்னிஎன்னும் மொழி சேர சோழபாண்டிய பல்லவ சளுக்கிய அரசர்களுக்குப் பொதுவாயும் சிறப்பாயும் வழங்கப்பட்டுவருகின்றதென்று முன்னமே கூறினோம்.

ரெவரண்டு உல்லியம்டெய்லர் எழுதியபாண்டியன் சரித்திரம் 2-வது வாலியம் 65-வது பக்கத்திலே சேர சோழ பாண்டியர்கள் அக்கினிகுலத்திலும் சூரியகுலத்திலும் சந்திரகுலத்திலும் உற்பவித்தவர்களென்று புராணங்களில் சொல்லப்பட்டிருந்தபோதிலும் அவர்கள் அக்கினி (வன்னி) குலத்திலுதித்த சகோதரத்துவ முடையவர்களென்று கூறப்பட்டிருக்கின்றதாகச் சொல்லுகின்றனர்.

மச்சபுராணத்திலே 195-வது அத்தியாயத்திலே அங்கிரஸுவின் கோத்திரத்திலுதித்த அரசர்களின் சந்ததிகளைக்கூறுமிடத்து அக்கினி என்னும் அரசனைக்கூறி, அதன்பின்னர் பாண்டு என்னும் அரசனையுங் கூறப்பட்டிருக்கின்றது. இப்பாண்டுவின் வம்சத்தவரே பாண்டியர் என்பதற்கு வடமொழி இலக்கணஞ்செய்த பாணினிமுனிவரும் 'பாண்டிய' வென்னும் மொழிக்குக்காரணத்துடன் பகுப்பிலக்கணம் சொல்லி பாண்டியர் பாண்டுவின் வம்சத்தில் வந்தவரென்று கூறியிருக்கின்றனர். அக்கினி பாண்டுமுதலியவர்கள் செந்நிறம் பொருந்திய செந்தழல் வம்சத்தில் உதித்தவரென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

ஆக்நேயபுராணம் 135-வது அத்தியத்தில் பரதகண்டத்தை வடபெண்ணை முதல்குமரி இலங்கை தென்கோடிவரையில் ஆக்கி

னேய கண்டமென்றும், பெண்ணையினின்று விந்தியபருவதம்வரையில் சௌர (சூரிய) கண்டமென்றும், விந்தியபருவதத்தினின்று இமோத்பர்வதம்வரையில் சௌமிய (சந்திர) கண்டமென்றும் கூறப்பட்டிருக்கின்றது. இதுவன்றியும் ஆக்கினேயகண்டத்தில் சேர சோழபாண்டியர்கள் மூவரையே அரசர்கள் எனக்கூறப்பட்டிருக்கின்றது.

வன்னிவம்சத்தைப்பற்றிக்கூறும் புராணங்கள் பிரமம், வாயவ்வியம், மகாசிவபுராணம், தேவிபாகவதம் முதலியன. யயாதியின்புத்திரனாகிய துருவசுமகாராஜன் வம்சத்தைக்கூறுமிடத்து அவ்வம்சம் வன்னி சம்பு பாண்டு என்னும் பெயர்கொண்ட க்ஷத்திரியர்களால் புகழ்பெற்றிருந்ததென்று சிற்சிலவேறு பாடுகளுடன் கூறப்பட்டிருக்கின்றது. வன்னி என்னும் அரசன் அக்கினியேதானாய் அவதரித்தானென்றும் அககினியினின்று உதித்தானென்றும் இவனுடைய வம்சத்தார் ஆக்கினேயர் (வஹ்நிஜர் வன்னியர்) ஆங்கீரஸர் சேர சோழ பாண்டியர் கௌண்டிரர் (கௌண்டர்) ஆண்டிரர்முதலிய பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். சேரசோழபாண்டியர்கள் வன்னியின் வம்சத்தில் வந்தமையால் வன்னிகுலத்தவரென்று அழைக்கப்பட்டனர். வன்னி என்னும் பதம் அரசருக்குப்பொதுப்பெயராக வழங்கப்பட்டுவருதலைப் பலபிரமணங்களால் நிரூபிக்கப்பட்டுளது.

சேரன் அக்கினி (வன்னி) குலத்தவனென்பதற்குப் பிரமாணங்கள் வருமாறு, வில்லிபுத்தூராழ்வார் பாரதம் த்ரௌபதைமாலையிட்ட சருக்கம்

"இவன்றண்டமிழ் தோடல் வழுதி யிவன் றேரிகுலவளவனிவன் சேந்தழலோன்மரபாகியிரேழுலகும் புகழ்சேரன்" மேற்படி பாரதம் இராஜசூய சருக்கம்.

"பரிதியுமதியும் வன்னியு முதலாம் பல்வகைக்குலத்துமுற்ப வித்தநரபதிகுழாம்" மேற்படி சருக்கம் 15-வதுசெய்யுள் "சூரன் குலோத்தோர் குபேரன் குலோத்தோர் சுடர்ப்பாவகப்பேரன் குலோத்தோர் கண்முதலோரிருந்தார்கள் பெயர்பெற்றபேர்"

பேரூர்ப்புரர்ணம் திருநாட்டுப்படலம் 3-வது செய்யுள்

பரிதியொடு வெண்மதி பரிக்கவொளிநல்கு
முருகெழு கனற்புதல்வ னுண்டவொருசீரா
லிருசுடரு யிர்த்தவர்க ளாண்டவிருநாட்டின்
குருவென விளங்கியது கொங்கு வளநாடு.

அருணாசலபுராணம் வல்லாளமகாராஜன் சருக்கம் 19-வது செய்யுள் "புலத்தினைவென்றமோனர் புகலுமூவகையுள் வன்னி குலத்தினில் வருமன்னரின் கோதிலாத்தருமங்கேட்டு"

மேற்காட்டிய செய்யுள்களில் செந்தழலோன் என்றும் வன்னி என்றும் சுடர்ப்பாகவன் என்றும் கனற்புதல்வன் என்றும் வன்னிகுலத்தினில்வரும் மன்னு என்றும் பிரயோகத்திற்குள்ளாயிருக்கும் மொழிகள் சேரன் வன்னிகுலத்தவன் என்று குறிக்கின்றன. அன்றியும் "புகலுமூவகையுள் வன்னிகுலம்" என்றமையால் "ஒருமொழியொழிதன்னினங் கொளற்குரித்தே" என்னும் விதியால் சூரியகுலம் சந்திரகுலம் என்னும் இரண்டையும் சுட்டியமைகாண்க.

சோழராஜன் வன்னிஎன்னும் அரசன் வம்சத்தில் வந்தானென்று புராணங்கள் கூறுகின்றன. சம்பு என்றபதம் சோழவம்சத்தைக்குறிப்பதாம். மகாபாரதம் ஆரண்யபருவம் 220-வது அத்தியாயம் மார்க்கண்டேயசருக்கம் 5-வது சுலோகம்.

அக்நிச்சாபி மநுர்நாம ப்ரஜா பத்யமகாரயத்
சம்புமக்நி மதப்ராஹுஃ பிராம்மணா வேதபாரகாஃ

வேதத்தில் மிக வல்லபிராமணர்கள் சம்பு என்னப்பட்ட அக்நிபுத்திரனுடைய பிரதாபங்களைப்பற்றிப் பேசத்தொடங்கினார்கள். சம்பு என்பவன் அக்நியின்புத்திரன் என்று இச்சுலோகம் தெரிவிப்பதாலும் சோழனைச் சம்புவென்று நூற்களிலும் அனுபோகத்திலும் வழங்கப்படுவதாலும் சோழன் வன்னிகுலத்தான் என்று ஸ்பஷ்டமாகின்றது.

பாண்டியனும் பூர்வம் வன்னியென்னும் அரசன் வம்சத்தில்வந்தவன். அன்றியும்மலையத்வஜபாண்டியனுக்குப்புத்திரசந்தானமில்லாமையால் புத்திரகாமேஸ்டியாகம் செய்தனன்.

ஆலாசியமான்மியம் 8-வது அத்தியாயம் 23-24-25 சுலோகங்களில் கூறுவதாவது.

மலையத்துவஜபாண்டியனால் செய்யப்பட்டயாகத்திலே எல்லா கர்மங்களுடைய நிறைவையுங்குறிக்கின்றதான பூர்ணாகுதியினால் சொலிக்கப்பட்ட அக்நியின் அவிசுகள் எக்கியகர்த்தாவினால் ஹோமம்செய்யப்பட்டபோது அவைகளை அங்கீகரித்து சிவனது ஆக்கி

னையினால் அவ்வக்கியினிடத்தினின்றும் சாமளரூபியாயும் கோமள வடிவுடையவளாயும் மீனாட்சியின் அம்சத்தைப்பெற்றவளாயும் மூன்றுவயதுநிறைந்த வோர்பெண் உற்பவித்தாள்.

இதற்கிணங்க திருவிளையாடற்புராணம் தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப்படலம் 15-வதுசெய்யுள்

நொய்தழ லெரிக்கடவு ணேற்றபய னெய்தக்
கொய்தளி ரனத்தழல் கொழுந்துபடு குண்டத்
தைதவி ழிதழ்க்கமல மப்பொழு தலர்ந்தோர்
மொய்தளிர் விரைக்கொடி முளைத்தெழுவ தென்னே.

மலையத்துவஜபாண்டியன்செய்த யாககுண்டத்தினின்று மூன்றுவயது டையபெண் உற்பவித்தாளென்று மேற்படி மான்மியமும் மேற்படி புராணமும் தெரிவிக்கின்றன.

இவ்வாறு அக்கியினிடமாக உற்பவித்த தடாதகைப் பிராட்டியாரின் திருக்குமாரராகிய உக்கிரகுமார பாண்டியரும் வன்னி சம்பந்தமாய் உற்பவித்தவனென்று.

ஷ புராணம் மேருவைச்செண்டாலடித்த படலம் 36-வது செய்யுள்.

கன்னிப்பொன் னெயில்சூழ் செம்பொற்
கடிநகரர்க் கணிய னாகிப்
பொன்னார்ச்செய் திழைத்த நீள்கோ
புரத்தினைக் கண்டு தாழ
வுன்னித்தே ரிழிந்தெட் டோடைந்
துறுப்பினாற் பணிந்தெ ழுந்து
*வன்னிச்சேந் சுடர்க்க ணெற்றி
மன்னவன் மதுரை சார்ந்தான்.

இதன் கருத்து.

---

* "வன்னிச்செஞ்சுடர்க் கணெற்றி மன்னவன்" "எரியனற்பொரியிலவ னுதித்தவன்" என்பன உக்கிரகுமார பாண்டியனையும் வரகுணராமபாண்டியனையும் குறிக்கின்றன. சிவபிரான் யாககுண்டத்தினின்று உற்பவித்த தடாதகைப்பிராட்டியாரை மணம்புரிந்தபின்னர் இவர்களுக்குப்புத்திரனாக உக்கிரகுமாரபாண்டியன் பிறந்தான். இவன் வம்சவழியில் வந்தபாண்டியர்களில் சிவகிரியில் அரசுசெலுத்திய "வரகுணராமபாண்டிய வன்னியன்" என்பவனை எரியனற்பொரியில் உதித்தவன் என்றும் "ஆதியுமைமீனாட்சியம்மைகருணைத்தவப்பேறே" என்றும் கூறப்பட்டிருத்தலால் பாண்டியர் வன்னிகுலத்தவராம். உக்கிரகுமாரபாண்டியன் சூரியவம்ச சோமசேகரசோழன் குமாரத்தியாகிய காந்திமதியை மணம்செய்துகொண்டான். சேரசோழபாண்டிய பல்லவ சளுக்கியவம்சத்தவர்கள் பூர்வமே பெண்கொள்ளல் கொடுத்தல் முதலியவைகளில் கலந்திருந்தார்களென்று வடமொழி தென்மொழி பிரமாணங்களாலும் சாஸனபிரமாணங்களாலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இக்காலத்தில் ஷ வம்சத்தவர்கள் வன்னிகுலம் என்றும் சம்புகுலம் என்றும் பல்லவகுலம் என்று அழைக்கப்படுகின்றனர்.

உக்கிரகுமாரபாண்டியர் கோபுரத்தைத் தரிசிக்கக்கருதி தேரிலிருந்து இழிந்து நமஸ்காரஞ்செய்தெழுந்து மதுரைப்பதியினையடைந்தார் என்பதாம்.

இவ்வம்ச வழிவந்த வரகுணபாண்டியன்மீது செய்த திக்குவிஜயத்திலும் "வேந்தன் வரகுண ராசபாண்டிய வன்னியனுக்கே விஜயஞ்சொன்னேன்" என்றும்

பரிமயிற்குமரனிவனைப் பகர்வர்படைமுடுகச் சமரிலறியலா
மெரியனற்பொறியி லவனுதித்தவனெழுதிசைக்கடவுமார்பனே.

எனறுங்கூறுதலால் தடாதகைப்பிராட்டியார் அவர்கள் வழியில்வந்த பாண்டியர் யாவருக்கும் யாககுண்டத்தின் உற்பவமே மூலகாரணமாயிருப்பதால் பாண்டியனும் வன்னிகுலத்தவனென்று அழைக்கப்படுகின்றனர்.

பல்லவவம்சமும் அக்கினிசம்பந்தமாக வந்ததென்பதற்குப் பிரமாணம் வருமாறு.

வியாசமகாபாரதம் அநுசாநிகபருவம் 85 - வது அத்தியாயம் 104-வது சுலோகமுதல் 136 வரையில்கூறுஞ் சுலோகங்களிலே.

பிரமனால் சமர்ப்பிக்கப்பட்ட யாககுண்டத்திலே உற்பவித்த மூன்றுபுருடர்களில் பிருகு என்பவனை வருணபகவான் புத்திரனாக அங்கிகரித்தனர், மகாதேவர் ஆங்கிரஸன் என்பவனை அக்கினிதேவருக்குப்புத்திரராகவேற்படுத்தினர், கவி என்பவனை பிரமதேவர் புத்திரனாகப்பெற்றனர். இம்மூவர்வழிவந்த வம்சத்தவர் வாருணரென்றும் ஆக்கினேயர் என்றும் பிராம்மியர் என்றும் அழைக்கப்பட்டார்கள். அக்கினியின் புத்திராகிய ஆங்கிரஸனிற்குப் பிரகஸ்பதி உதத்தியன் முதலிய எட்டுபுத்திரர்கள் பிறந்தார்கள். மேற்படி அத்தியாயம் 198-வது சுலோகம்.

ஸர்வேப்ராஜாநாம்பதயஃ சர்வேசாபிதபஸ்விநஃ
த்வத்ப்ரசாதாதிமம்லோகம் தாரயிஷந்திஸாம்ரதம்

அக்கினிவம்சத்தில் உதித்த அனைவரும் பிரஜாநாயகராக (அரசராக) வேயிருப்பார்கள். இந்த அக்கினிவம்சத்தவர் அனைவரும் மகாதபசிகளாயும் பிரம்மதேவருடைய அநுக்கிரகத்தால் இந்தலோகத்தைப் பரிபாலனஞ்செய்யத்தக்க சக்தியுடையவர்களாயுமிருப்பார்கள். ஷை அத்தியாயம் 137-வது சுலோகம்.

ஜக்ராஹாங்கிரஸம்தேவ: சிகிதஸ்மாத்யாசந:
தஸமாத்ராங்கிரஸா: கஞேயா: சர்வஏவததந்வயா:

பிரகாசம்பொருந்திய அக்கினிதேவர் ஆங்கிரஸாவை புத்திரனுக அடைந்தனர் ஆகையால் ஆங்கிரஸாவின் வம்சத்தில் தோன்றினவர் அனைவரும் ஆங்கிரஸர் (அக்கினிகுலத்தவர் அவலது வன்னியர்) எனப்பட்டார்.

ஷை பாரதம் சம்பவகாண்டம் 45-வது அத்தியாயம்.

அங்காரேப் யோங்கிராஸதாத
வாலசில்யா: குசேச்சயாத்

அங்கார என்பது அக்கினியினிடத்திலுண்டானபடியால் ஆங்கிராவென்று அழைக்கப்பட்டார்.

ஷை பாரதம் சாந்திபருவம் 196 அத்தியாயம் 17-வது சுலோகம்.

மூலகோத்ராணி சுத்வாரிசமுத்பந்நாநி பார்த்திவ
அங்கிரா: கசயபச்சைவ வஸிட்டப்ருகுச
கர்மதோங்யாநி கோத்ராணி சமுத்பந்நாநிபார்திவ

பூர்வத்திலே ஆங்கிரஸ், காசிப, வஸிட்ட, பிருகு என்கிற நான்குமூலகோத்திரங்கள் தானுண்டாயிருந்தன. இதன் பின்னர் கர்மத்தால் பற்பலகோத்திரங்களேற்பட்டன. இதனால் அக்கினி அம்சமாகிய ஆங்கிரஸ் முக்குலத்திற்கும் மூலபுருஷராயிருந்தாரென்று ஏற்படுகின்றது.

மேற்படி மகாபாரதம் ஆதிபருவம் 67-வது அத்தியாயத்தில் கூறியிருப்பதுபோல் 1400 வருடங்களுக்குமுன் ராஜசிம்மபல்லவனால் கட்டப்பட்ட கைலாசநாதர் ஆலயத்தில் அவன் ஆளுகையில் ஏற்பட்ட சிலாசாஸனத்தில் சமஸ்கிருதத்தில் வரையப்பட்டதைச் சுருக்கி எழுதுவாம்.

+ × × பிர்ம்மாவினிடமாகவுதித்த அக்கினி குமாரனுகிய ஆங்கிரஸனும் ஆங்கிரஸாவுக்குப் புத்திரனும் தேவர்களுக்குக் குருவுமாகிய பிரகஸ்பதியும் இவர்க்குப்புத்திரனுகியசமியும், இவர்குமாரன் உக்கிரமானபராக்கிரமத்தையுடையவரும் திரிலோகங்களிலும் பூஜிக்கப்பட்டவருமான பரத்வாஜமுனிவர் உதித்தார். இம்முனீந்திரர் பல்லவவம்ச உற்பத்திக்குக்காரணபூதரானுர், இவருக்குப்புத்திரனுகத்துரோணர் உதித்தனர்; இவருக்கு அஸ்வத்தாமனும் இவனுக்கு உலக

முழுதும் அரசாளக்கூடி ஜெயசாலிகளாயும் பராக்கிரமசாலிகளாயும் அரசர்களுக்கு மூலபுருஷனான பல்லவனுதித்தான் + × × அக்கினியின்புத்திரன் ஆங்கிரஸனின் வம்சவழியில்வந்த பல்லவனுக்கு மகேந்தரவர்மன் உக்கிரதண்டன் நரசிம்மவர்மன்முதலி பல்லவ அரசர்கள் உற்பவித்தார்கள்.

பல்லவ அரசர்களும் அக்கினிசம்பந்தமாயுதித்தமையால் வன்னிகுலத்தவரென்று அழைக்கப்படுகின்றனர். •

சலுக்கியவம்சத்தவரும் அக்கினிவம்சத்தில்
வந்தவர்களென்பதற்குப் பிரமாணம்.

கர்னல்டாட்துரைஎன்பவர் பூர்வவடமொழிகிரந்தங்களின் ஆதாரங்களைக்கொண்டு அக்கினிகுலத்தின் உற்பவத்தைப்பற்றி யெழுதியிருக்கின்றார், அவர் எழுதிய இராஜஸ்தான் என்னும்புத்தகம் வாலியம் இரண்டிலும் கூறுவதைச் சுருக்கியெழுதுவாம்.

வேதவிரோதிகளாகிய இராக்ஷசர்களை ஜெயிக்கும் பொருட்டு விசுவாமித்திரர் வசிஸ்டர்முதலிய தபோதனர்கள் பரிசுத்தக்ஷேத்திரமாகிய அபுர்வதத்திலே அனற்குண்டம் (யாககுண்டம்) ஒன்று புதுப்பித்தார்கள் இதன் பின்னர் புனர் உற்பவஞ்செய்ய வேண்டியதூபகருப்பையால் உருவாக்கி அதற்கு ஜிவதாரைவார்த்து அதனை அனற்குண்டத்திலிட்டு சஞ்சீவி மந்திரத்தையுச்சரித்தார்கள். உச்சரிக்கவே அனற்குண்டதினின்று பிரமாரன், சலுக்கியன், புரியாரன் கோஹான் என்னும் பெயரையுடைய நான்குவீரர்கள் உற்பவித்தார்கள். இவர்கள் முறையே இந்திரன், பிரமன், உருத்திரன், விஷ்ணு அம்சங்களாகத் தோன்றினார்கள். இவர்களில் சலுக்கியன் பிரமனுடைய அம்சம். சலுக்கியவம்சத்தவர் சாலுகர் சோலாங்கி சாலுவர் என்று சொல்லப்படுவர். இவர்களைத் தமிழில்வேளர் என்று கூறுவர். பிங்கலசூத்திரம் "தாரகாரியும் சலுக்கியவேந்தனும் வேளிலாளனும் வேளெனலாகும்" பிங்கலநிகண்டு கடைச்சங்கத்திற்குமுற்பட்டது. புறநானூறு 210-ல் சலுக்கியனைக்குறித்து கூறுவதாவது.

வடபான்முனிவன் தடவினுட்டோன்றிச்
செம்புனைந்தியற்றி சேணெடும்புரிசை
யுவராவீகைத்துவரையாண்டு
நாற்பத்தொன்பது வழிமுறைவந்த வேளிருள்வேளே

என்றுகூறுவதால் வன்னிமன்னர் வடக்கே முனிவரியற்றிய வேள்வி (யாகத்தில்) பிறந்தவர்களென்றும் மதுரைச்சங்கம் நிலைபெற்றிருந்த காலந்தொட்டு தென்னாட்டில் சளுக்கிய வேளிராகிய வன்னிமன்னர் இருந்தார்களென்று புறநானூறு தெரிவிக்கின்றது. சளுக்கியவம்சத்தைக்குறித்து இப்புத்தகம் முதல் அத்தியாயம் 7-ம் பக்கத்தில் விஜையாதித்தன் முதலிய சளுக்கிய வரசர்களாக கூறியிருக்கின்றது. 26-வது பக்கத்தில் விமலாதித்தனுக்கும் சூரியவம்ச ராஜஸ்திரிக்கும் பிறந்தவன் முதலாவது குலோத்துங்கசோழன் என்று எழுதியபிரமாணங்களைக் காண்க.

சளுக்கிய வம்சத்திலே வந்தமடாதிபதி பிரம்மவன்னிய மடாதிபதியென்று சொல்லப்படுகின்றனர். இம்மடம் நெடுங்காலமாயிருக்கின்றதென்பது அம்மடத்தின் பட்டயத்தாலும் சரித்திரங்களாலும் தெரியவருகின்றது. மடாதிபதியின் பட்டப்பெயர் "பிரம்மவன்னியர் மடம் ருத்திர சிம்மாசனாதிபதி சக்கரவர்த்தி சிவயோகி ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகராகிய ஸ்ரீமத்குழைந்தையானந்த சுவாமிகள்" என்று பூர்வமிருந்து வழங்கப்பட்டுவருகின்றது. சளுக்கியவம்சத்தவரும் அனற்குண்டத்தில் உற்பவித்தவர்களென்று பலபிரமாணங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

சேர சோழ பாண்டிய பல்லவ சளுக்கியவம்சங்கள் அக்கினி (வன்னி) குலத்தினுதித்தவர்களென்று புராண இதிகாசங்களைக்கொண்டும் சாஸனங்களைக்கொண்டும் ரூபிகரிக்கப்பட்டுளது.

க்ஷத்திரியன் என்னும் பதமானது நான்குபிரதான ஜாதிகளில் இரண்டாவது ஜாதியைக்குறிக்கும் சிறப்புப்பெயராம். க்ஷத்திரியனென்னும்பதம் வடமொழியில் யோகபதமா அல்லது ரூடபதமாயென்பதனை ஆராயுமிடத்து ப்ரஜைகளை ஆபத்தினின்றுங்காப்பவன் என்னும் பொருளைத்தனக்குள் அடக்கியுள்ளமையால் யோகபதமேயாம். இதற்கு நேரான தென் (தமிழ்) மொழி "காவலன்" என்பதாம். குடிகளைத்துன்பத்தினின்றுங் காப்பவனென்னும் பொருளைத்தனக்குள் அடக்கியுள்ளமையால் இதுவுங்காரணப்பெயராம். வடநாட்டாரில் யாருக்கு அவ்வகாரணத்தால் க்ஷத்திரியன் எனப்பெயரிட்டனரோ அதுபோலவே அவ்வகாரணத்தால் திராவிடருக்கும் காவலன் எனப்பெயரிட்டனரென்பது ஸ்பஷ்டம். இதனால் க்ஷத்திரியன்

என்பதும் காவலன் என்பதும் ஒருசார்பாரையே சூசிக்கப்படும் சப்தபேதமுடைய இரண்டுபாஷா நாமங்களே யாதலால் இவற்றிற்குப் பொருட்பேதங்கிடையாது. ஆகையால் க்ஷத்திரியரெனப்படுபவரும் காவலரெனப்படுபவரும் ஒருசாராரேயாவர்.

பன்னிருபாட்டியல் எழுத்தியலிலும் இனவியலிலும் அந்தணர் அரசர் வணிகர் சூத்திரஜாதிகளை முறையேசொல்லிய சூத்திரங்களில் அரசருக்குரியது ஆசிரிப்பாவென்று சொல்லும் சூத்திரத்திலே

காவலர் சாதி யாகியவகவற்
காகிய கடவுளர் செங்கதிர் செவ்வாய்
நாளேமக முத ஞளேழாகுஞ்
சிங்கந் தனுவே மேடமோரை
செஞ்சந்தனம் விரை கழுநீர்பூவே
செந்நிறநிறனே நன்னிலக்குறிஞ்சி.

இந்தச்சூத்திரத்திலே க்ஷத்திரியர் என்பதற்கு நேரான தென்மொழி காவலர் எனப்பிரயோகித்திருக்கின்றது. தென்னாட்டில் அரசுபுரிந்த சேரசோழபாண்டிய பல்லவ சளுக்கிய வம்சத்தவர்களுக்கும் அவர்கள் சந்ததியாருக்கும் காவலரென தமிழ்நூற்களில் ஏராளமான பிரயோகங்களிருக்தலால் வன்னிகுலமரபினர் யாவரும் காவலர் அல்லது க்ஷத்திரியர் என்பதற்கையமில்லை. ஆனால் தமிழ்காவியங்களிலும் நூற்களிலும் பிரயோகத்தில் க்ஷத்திரியர் என்னும் சமஸ்கிருதபதம் வாராமையால் க்ஷத்திரியர் வேறு அரசர்வேறுஎன்று ஆழ்ந்த ஆராச்சியில்லார் சிலர்கருதுகின்றனர். ஷை பாட்டியல் எழுத்தியலிலே "இயமன்படைத்த விருவகையெழுத்துங்— குகரமாயிற் சூத்திரர் சாதி" என்றபிரயோகம் வடமொழியல்லவா? வசனநடையுடைய தமிழ்நூற்களில் க்ஷத்திரியரென பிரயோகித்திருத்தல் பிரமாணமாகாதுபோலும். சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்னர் திராவிடநாட்டைச் சேர்ந்த கடற்கரையோரத்திலே மாவலிபுரத்திலுள்ள ஆலயத்தில் ஏற்பட்ட க்ஷத்திரியசிம்ம பல்லவன் என்று சாஸனத்தில் வரைந்திருத்தலைப் பிரமாணமாகக் கொள்ளார்போலும்

க்ஷத்திரியர் அல்லாது வேறு எவ்வகையினரேனும் நாடாண்டாராயினும் அன்னோரை அரசர் எனக்கூறப்படுமேயன்றி க்ஷத்திரியரென்று கூறுதலில்லை. மகமதியர் ஆங்கிலேயர் முதலியவர்கள்

நாடாண்டாராயினும் மகம்மதிய க்ஷத்திரியர் என்றாவது ஆங்கிலேய க்ஷத்திரியரென்றாவது அழைத்தவில்லை. மகமதிய அரசர் ஆங்கிலேய அரசர் என்று சொல்லப்படுமேயன்றி க்ஷத்திரியரென்று சொல்லுவதில்லை. ஆகையால் மகாசங்கத்தார் மேற்காட்டிய பலகாரணங்களை அனுசரித்து வன்னியகுல க்ஷத்திரியமகாசங்கம் என்கிற பெயரைத்தமது சங்கத்திற்குக்கொடுத்து வழங்கி வருகின்றனர்.

சேரசோழ பாண்டிய பல்லவ சளுக்கிய அரசவர்க்கத்தவர்கள் அக்கினி சம்பந்தமாக வந்தவர்களென்றும் வன்னிகுலமென்றும் க்ஷத்திரியஜாதி யென்றும் வடமொழி தென்மொழி பிரமாணங்களால் மேலே நிரூபித்துக்காட்டப்பட்டிருக்கின்றனர். இங்ஙனமிருக்கின்றவர்களுக்குள் பலபிரிவுகளிருக்கின்றன. ஆனால் யாவரும் ஒருகுலத்தவராகக் கருதப்படுகின்றனர். சென்னை யிராஜதானியில் ஏறக்குறைய ஆறில் ஒரு பங்கு ஜனத்தொகை கொண்டவர்கள். இவர்கள் தற்காலம் பெரும்பாலும் ஏழ்மை நிலையிலுள்ளவர்கள், கல்வியையும்நாகரிகத்தையும் கைவிட்டவர்கள்.

மேற்சொல்லப்பட்ட இவர்கள் அக்கினிகுலத்தவரென்றும் சம்புகுலப்பல்லவர்களென்றும் பல்லவர்களென்றும் சோழப்பல்லவர்களென்றும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் காவியங்களிலும் பிரபந்தங்களிலும் கூறப்பட்டிருக்கின்றார்கள். இதைத்தெரிந்தவர்களும் தெலுங்கர்களும் இவர்களைப்பல்லவரென்பர். தெரியாதவர்கள் பள்ளிகளென்பர், இவர்களுடைய உற்பத்திமூலம் எப்படிப்பட்டதென்று குக்கிராமங்களில் வசிக்கும் எழுத்துவாசனையறியாத ஏழை எளியவர்களைக்கேட்பினும் கர்ணபரம்பரையை யொட்டித்தாங்கள் அக்கினிசம்பந்தமா யுதித்தவர்களென்று தான் சொல்வர். இந்த அநுபவ வழக்கத்தோடு ஆயிர வாயிர வருடங்களுக்குமுன் ஆண்ட பலமன்னர் மண்டலீகர் தீட்டிவைத்த செப்பேடுகளும் சிலாசாசனங்களும் சான்றுபகர்கின்றன. இவர்களுடைய குலதேவதை யோகுவர்ணகாமாக்ஷியம்மை. இந்ததேவி இவர்களுக்கு குலதேவதையான காரணம் பிரமதேவன் ஆகாசபூபாலன் என்னப்பட்ட அரசனுக்குக் கட்டளையிட்டுத் தேவியைச்சதாபூசிக்கும்படிச் சொல்லிச்சென்றநாள் தொட்டுப்பல்லவ அரசர்களும் வீரசோழமகாராஜன் குமாரனாகிய விக்கிரமச்சோழன் வழிவந்த சோழர்களும் பூஜித்து வந்த காரணமே

யாம். இதனைக்காஞ்சி மான்மியத்தில் காமாக்ஷிலீலா பிரபாவத்தில் விரிவாய்க்காணலாகும். மேலும் தற்காலத்திலும் புராதனவழக்கத்தையொட்டித்தம்மைப்போல் யாகாக்கினியில் உற்பவித்த த்ரௌபதா தேவி நெருப்புமிதிக்கும் திருவிழாக்களெல்லாம் பெரும்பாலும் இவ் விந்துதேசத்தில் இக்குலத்தவரே நடத்திவருவதும், இவர்களே தீமிதிப்பதும் அநுபவ திருஷ்டாந்தமாக விருக்கின்றது. இவர்களில் அனேகர் கல்வி நாகரிகம் தனதான்யாதிகளில் காலபேதுவால் குறைவுபட்டிருப்பினும் தங்கள் முன்னோர்கள் அநுஷ்டித்துவந்த அநுஷ்டானத்தை மட்டும் குறைவுபடாமல் நடத்திவருகின்றனர். இதுவும் தெய்வச்செயலேயாம்.

நமதுகுலகனவான்கள் குணாதிசயங்களைப்பற்றி 1400-வருடங்களுக்குமுன் காஞ்சி கைலாயநாதர் ஆலயத்தில் ஏற்பட்டுள்ள சிலாசாசனத்தைப்பாருங்கள்.

"பல்லவ அரசர்கள் பக்தியுடையவர்களாயும், கலியின் கொடுமையை யடக்கினவர்களாயும், சத்திய சீலராயும் காம்பிரகுண முடையவர்களாயும், பெரியோர்களை அதிவிநயத்தோடன் பூஜிக்கப்பட்டவர்களாயும், திரிவர்க்கசாதனசாலிகளாயும் காக்குநீதி முதலிய சட்குணங்களை அடக்கினவர்களாயும், அஸ்த்திரபிரயோகங்களில் தேர்ந்தவர்களாயும், இரணகளத்தில் பின்னிடையாதவர்களாயும், மனுநீதி தவறாதவர்களாயுமிருந்தார்கள்" என்று சொல்லப்படுகின்றது.

1270 வருடங்களுக்குமுன் காஞ்சியில்வந்திருந்த சீனயாத்திரைக்காரர் தொண்டநாட்டில் கண்டகாட்சியை தாம் எழுதிய யாத்திரை புத்தகத்தில் "பிரஜைகள் தைரியசாலிகள்; உண்மையும் நாணமுமுடையவர்கள்; கல்வியில்வல்லாரைமதித்து போற்றுவார்கள்" என்று எழுதப்பட்டிருக்கின்றது. இதனால் பூர்வத்தில் காஞ்சிவாசிகளும் சம்புகுலப்பல்லவர்களும் கல்விசெல்வத்திலும் பொருள் செல்வத்திலும் புகழ்பெற்றிருந்தனரென்று கைக்கண்ணாடிபோல் பிரத்தியட்சத்தில் விளக்குகின்றது.

கச்சிப்பல்லவச்சோழ சரித்திரச்சுருக்கம்

முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
1	3	புரிது	புரிந்து
,,	16	வாராய்ச்சிலும்	வராயச்சியிலும்
3	23	வேலுர்	வேலூர்
,,	37	சொல்லபட்ட	சொல்லப்பட்ட
4	4	ானத்தையாளவி	வானத்தையளாவி
5	6	குணுதியசங்களேயும்	குணுதிசயங்களேயும்
,,		மகாசிவபக்த்த	மகாசிவபக்த
7	15	மூடிவிலும்	முடிவிலும்
,,	32	காரதிற்கு	காரத்திற்கு
8	11	இவன	இவன்
9	4	ரங்கதகா	ரங்கபதகா
10	12	நயஞர்	நாயஞர்
11	2	தேவரத்திலே	தேவாரத்திலே [ன்
,,	18	தோல்வியடைச்செய்தான	தோலவியடையச்செய்தா
15	29	வறைபப்பட்ட	வரையப்பட்ட
,,	25	க்ஷேத்திரத்தைய்பிரபல	க்ஷேத்திரத்தைப்பிரபல
18	20	திருமங்மை	திருமங்கை
19	2	சமிப	சமீப
	9	சமத்னத	சமயத்தை
,,	21	கிழக்க	கிழக்கே
20	7	சொருபங்கள்	பொரூபங்கள்
21	32	பட்டதை	பட்டத்தை
22	15	ஆதின	ஆதீண
23	30	நமமைக்கஙகட்டிய	நம்மைக்கட்டிய
25	1	சிமமாஸன	சிமமாஸண
26	10	வறலாற்றை	வரலாற்றை
,,	25	பரடபபட்ட	பாடப்பட்ட
28	3	வரதராஜி	வரதராஜ
	10	செனமேறகு	தெண்மேற்கு
29		அதிகாரிசள்	அதிகாரிகள்
32	15	சந்திராததியவரை	சநதிராததியர்வரை
36	20	திருச்சிஞப்பள்ளி	திருச்சிராப்பள்ளி
40	12	பிரயோகித்திதிருபபதை	பிரயோகித்திருப்பதை

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
40	21	வரையய்படடி	வரையப்பட்டி
43	10	6-வது	16-வது
44	9	கிரகத்தி	கிரகத்தில்
47	17	சப்புவராயனால்	சம்புவராயனால்
,,	22	பிராமணோத்தமர்பளுக்கு	பிராமணோத்தமர்களுக்கு
48	2	தெய்வீகவூலாவை	தெய்வீகவுலாவை
50	16	ஏகாமபராதர்	ஏகம்பரநாதர்
53	8	டிருங்கின்றது	டிருக்கின்றது
,,	28	க்ஷிண	க்ஷீண
54	30	குழப்பழமும்	குழப்பமும்
55	3	பாகங்நளை	பாகங்களையு
	6	ஜாகீருக்ரு	ஜாகீருக்கு
56	9	பாடவில்	பாடலில்
57	29	பாங்லெல்லை	பாங்கெல்லை
,,	31	மூன்னர்	முன்னர்
61	27	மந்தாவாதி	மந்திரவாதி
62	13	சனதியில்	சணதியில்
65	20	இரா ஜங்கம்	இராஜாங்கம்
66	28	விருக்ஷங்கனின்று	விருக்ஷங்சனின்று
67	1	உண்டாகத	உ ணடாகாத
	15	குணமுடைடாயார்	குணமுடையார்
	22	சொண்ட	கொண்ட
		நற்சாரிய்	நற்காரிய
68	19	சமஸ்சிர்த	சமஸ்கிர்த
	20	சமஸ்கிர்க	சமஸ்கிர்த
70	23	றேரிவி	றேரிரவி
	28	குலோத்தோர்	குலத்தோர்
78	5	வன்ணியகுல	வன்னிகுல